# வரலாறு

## தரம் - 8

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 2016
இரண்டாம் பதிப்பு - 2017
மூன்றாம் பதிப்பு - 2018
நான்காம் பதிப்பு - 2019

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0134-0

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,ஹோமாகம, கட்டுவான வீதி, தொழினுட்ப குடியிருப்பு, இலக்கம் 145 இல் அமைந்துள்ள சவிந்த கிரபிக் சிஸ்டம்ஸ் (தனியார்) கம்பனியில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

*சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



## ''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

### கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டு மென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்தொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
*2019.04.10*

**கண்காணிப்பும், மேற்பார்வையும்**

| | |
|---|---|
| *டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க* | *கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**வழிகாட்டல்**

| | |
|---|---|
| *டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி* | *ஆணையாளர் (அபிவிருத்தி)*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**இணைப்பாக்கம்**

| | |
|---|---|
| *ஜே. சந்திரபாலன்* | *உதவி ஆணையாளர்*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**பதிப்பாசிரியர் குழு**

| | |
|---|---|
| *பேராசிரியர் பத்மசிறி கன்னங்கர* | *வரலாற்றுக் கல்வி பிரிவு*<br>*ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்* |
| *பேராசிரியர் ராஜ் சோமதேவ* | *தொல்பொருள் பட்டப்பின் படிப்பு நிறுவனம்*<br>*களனி பல்கலைக் கழகம்* |
| *கலாநிதி அனுசூயா சேனாதிராஜா* | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*தென் கிழக்குப் பல்கலைக்கழகம்* |
| *சந்திமா நிசானி தர்மபால* | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*தேசிய கல்வி நிறுவகம்* |

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| *அருட்சகோதரி மேரி டொனெட்டா* | *அதிபர் சேவை (ஓய்வு நிலை)* |
| *எஸ். பாலசுந்தரம்* | *பிரதி ஆணையாளர் (ஓய்வு நிலை)* |
| *யூ. எல். எம். பஸீர்* | *ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை)* |
| *கலாநிதி ரோஹித்த திசாநாயக்க* | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*பேராதனைப் பல்கலைக்கழகம்* |
| *ஜே.எம்.சுதர்மாவதி* | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*களனிப் பல்கலைக்கழகம்* |
| *டபிள்யூ.ஏ.சமந்தி. சிரோமாலாகுணவர்தன* | *விரிவுரையாளர்*<br>*தேசிய கல்வி நிறுவகம்* |

| | |
|---|---|
| *எம்.டீ. திலக்கலதா* | *ஆசிரிய சேவை<br>சி. டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர ம.வி<br>பொறளை* |
| *நலின் பண்டார* | *ஆசிரிய சேவை<br>குருவிட்ட ம.ம.வி<br>குருவிட்ட* |

**பதிப்பாசிரியர் (மொழி)**

| | |
|---|---|
| *டி. இராஜேந்திரம்* | *சிரேஷ்ட விரிவுரையாளர்* **(***ஓய்வு***)** |

**சரவை நோக்கு**

| | |
|---|---|
| *ஆர். கருணா* | *ஆசிரியர்<br>மட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்* |

**அட்டைபட வடிவமைப்பாளர்**

| | |
|---|---|
| *எஸ். சத்தியசீலன்* | *கணினி உதவியாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**கணினி வடிவமைப்பு**

| | |
|---|---|
| *நா. பரமேஸ்வரி* | *கணினி உதவியாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| **1. இலங்கையின் பாரம்பரிய தொழினுட்பமும் கலைகளும்** | **1 - 34** |
| 1.1 நீரியல் தொழினுட்பம் | 1 |
| 1.2 களிமண் தொழினுட்பம் | 19 |
| 1.3 கட்டடக்கலையும் கலையாக்கங்களும் | 24 |
| **2. கண்டி இராச்சியம்** | **35 - 49** |
| 2.1 கண்டி இராச்சியத்தின் தோற்றம் | 36 |
| 2.2 பொருளாதார முறை | 44 |
| 2.3 சமூகம் | 46 |
| 2.4 கட்டடக் கலையும் கலைநுட்பங்களும் | 46 |
| **3. ஐரோப்பிய மறுமலர்ச்சி** | **50 - 59** |
| 3.1 மறுமலர்ச்சியின் பின்னணி | 50 |
| 3.2 மறுமலர்ச்சி ஏற்படுதல் | 53 |
| **4. நாடுகாண் பயணங்களும், ஐரோப்பியர் கீழைத் தேசங்களுக்கு வருகை தருதலும்** | **60 - 70** |
| 4.1 நாடுகாண் பயணங்களின் பின்னணி | 60 |
| 4.2 நாடுகாண் பயணங்களுக்கு அரசுகளின் அனுசரணை கிடைத்தமை | 63 |
| 4.3 ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருதல் | 68 |
| **5. இலங்கையின் கரையோரப் பிரதேசம் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்படல்** | **71 - 86** |
| 5.1 போர்த்துக்கேயர் இலங்கைமீது கவனம் செலுத்துதல் | 71 |
| 5.2 போர்த்துக்கேயரின் அரசியல் பொருளாதார பண்பாட்டு நடவடிக்கை | 83 |

# 1 இலங்கையின் பாரம்பரிய தொழினுட்பமும் கலைகளும்

**அறிமுகம்**

இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் வரையிலான எழுத்து மூல வரலாற்று ஆதாரங்களைக் கொண்ட நாடு இலங்கை என்பதை அறிவோம். இந் நீண்ட காலத்தில் எமது முன்னோர்கள் அன்றாடம் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமான தொழி னுட்பத்தைப் பிரயோகித்து வந்துள்ளனர். காலங்காலமாக தலைமுறை தலை முறையாக வளர்ச்சி அடைந்து வந்த அத் தொழினுட்பத்தின் சில அம்சங்கள் எங்கள் நாட்டுக்கே உரியவையாகும். ஆகையால் அவற்றைப் பாரம்பரிய தொழினுட்பம் என்போம். இந்நீண்ட காலத்தில் எமது முன்னோர்கள் இந்நாட்டின் சூழலுக்கும் கலாசாரத்திற்கும் பொருந்தும் வண்ணம் பல்வேறுபட்ட கட்டிடங்களை நிர்மா ணித்துள்ளனர். அவற்றை கட்டிடக் கலையாக்கங்கள் எனக் குறிப்பிடலாம். அதேபோல புராதன இலங்கையர் அக் காலத்தில் தமக்கேயுரித்தான பழக்க வழக்கங்களையும் இரசனைக்கு இயைபான கலைகளையும் உருவாக்கிக் கொண்டனர். இவை அனைத்தும் புராதன மக்களின் வாழ்க்கை முறை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு எங்களுக்குத் துணை புரிகின்றன. இப்பாடத்தில் அப்பாரம் பரியங்கள் தொடர்பான விடயங்கள் விவரிக்கப்படுகின்றன.

## 1.1 நீரியல் தொழினுட்பம்

எமது நாட்டில் முற்காலக் குடியிருப்புகள் காணப்பட்ட பெரும்பாலான பிரதேசங்களில் மன்னர்களால் கட்டப்பட்ட குளங்கள், கால்வாய்கள், தடாகங்கள் என்பன ஏராள மாகக் காணப்படுகின்றன. சில இடங்களில் இவற்றின் சிதைவுகளையும் நாம் காணக் கூடியதாய் உள்ளது. இவை அனைத்தும் ஏதோ ஒரு காலகட்டத்தில் இந்நாட்டில் வாழ்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிர்மாணிக்கப் பட்டவையாகும். குளம், கால்வாய், தடாகம் என்பன நீருடன் தொடர்புபட்டவையாகும். அவற்றில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப முறையை நீர்த்தொழினுட்பம் எனப் பொது வாகக் குறிப்பிடலாம். குளம், கால்வாய், அணைக்கட்டு, தடாகம் போன்றவற்றை அமைக்கும் போது இத்தொழினுட்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கு முற்கால இலங்கையர் தெரிந்து வைத்திருந்தனர்.

### 1.1.1 குளங்கட்டுதலின் ஆரம்பம்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இந் நாட்டில் ஆரம்பக் குடியிருப்புகள் அமைத்துக் கொள்ளப்பட்டதில் இருந்து உலர் வலயத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக நீரைப் பெற் றுக்கொள்வதற்கு குளங்களையும் அணைக் கட்டுகளையும் அமைத்துக் கொண்டனர். கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவில் இருந்து பல குழுக்கள் இங்கு வந்து தமது குடியிருப்புக்களை நிறுவிக் கொண்டன. தொடர்ந்து வந்த மூன்று நூற்றாண்டுகளி லும் மேலும் பல குழுக்கள் இங்கு வந்து குடியேறினர்.



உரு 1.2 பசவக்குளம்

இவர்கள் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொள்ளும் போது, விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமான வளமான சமதரை நிலங்களை உலர் வலயத்திலிருந்து தெரிவு செய்து கொண்டனர். இந்நாட்டின் உலர் வலயம் என்பது வருடத்தில் ஒரு பருவத்திற்கு மட்டும் மழைவீழ்ச்சியைப் பெறும் பிரதேசமாகும். இதனால் பயிர்ச் செய்கைக்கும் பாவனைக்கும் தேவைப்பட்ட நீரைச் சேமித்து வைத்துக் கொள்வதற்கான தேவை அக்கால மக்களுக்கு ஏற்பட்டது. இத்தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக குளங்களை அமைக்க வேண்டி ஏற்பட்டது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து உலர் வலயத்தில் குடியேற்றங்களின் பரம்பல் படிப்படியாக அதிகரித்துச் சென்றமையால் பெருகும் சனத் தொகைக்குப் போதுமான உணவை உற்பத்தி செய்து கொள்ளும் சவாலுக்கு அக்கால மக்கள் முகங் கொடுக்க வேண்டி இருந்தது. இச்சவாலுக்குத் தீர்வைத் தேடிய போது அவர்கள் பாரிய குளங்களைக் கட்டி, கால்வாய்கள் மூலம் அவற்றை ஒன்றுடன் ஒன்றாக இணைத்து நீர்ப்பாசனக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டனர். நெற் செய்கைக்குப் பொருத்தமான பரந்த பிரதேசங்களை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்திக்கொண்டனர்.

சிற்றருவியை அல்லது ஓடையை இடை மறித்து சிற்றணை ஒன்றைக் கட்டி நீரைச் சேமித்துக் கொண்டதை சிறிய குளங்கள் அமைத்ததின் ஆரம்பமாகக் கொள்ளலாம். இவ்வாறே முப்புறமும் உயர்ந்த நிலத்தின் தாழ்ந்த பாகத்தை மண் அணைக்கட்டு ஒன்றினால் மறைத்து மழை நீரைத் தேக்கி வைத்துக் கொள்வதன் மூலம் சிறு குளங்களை அமைத்துக் கொண்டதை அவதானிக்கத்தக்கதாய் உள்ளது. இவ்வாறான நிர்மாணம் ஒன்றிற்கு பலரின் உழைப்புத் தேவைப்பட்டது. அதனை குடும்பத்தவர்கள் ஊர்மக்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாய் இருந்தது. உலர் வலயத்தில் கிராமங்கள் பெருகிச் செல்லத் தொடங்கியதுடன் கிராமத் தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் மக்கள் தமக்குத் தேவையான குளங்களை உருவாக்கிக் கொண்டனர். இவை கிராமக் குளங்கள் எனப்பட்டன. மகாவம்சம் போன்ற இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத சில கிராமக்குளங்கள் பற்றிய தகவல்களை கல்வெட்டுக்களில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. குளங்களை அமைப்பதற்கு அரசர்கள் முன்வந்த போது கிராமத் தலைவர்களுக்கு பெருமளவிலான மக்களை ஒன்று திரட்டி அவர்களது உழைப்பைப் பெற்றுக் கொள்ள முடிந்தமையால் கிராமக்

குளங்களை விடக் கூடிய அளவு நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளக்கூடிய குளங்களை அமைத்துக் கொள்ளக்கூடியதாயிருந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகும் போது அரசர்களின் தலையீட்டுடன் குளங்களை அமைப்பது ஆரம்பமாகியது. பண்டுகாபய மன்னனின் காலத்தில் கட்டப்பட்ட மூன்று குளங்கள் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை ஜயவாவி, அபயவாவி, காமினிவாவி என்பவையாகும். இவற்றுள் இன்றைய பசவக்குளம், புராதன அபயவாவி ஆகும். அநுராதபுரத்தின் திஸாவாவி தேவனம்பிய திஸ்ஸ மன்னனால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இளவரசன் விஜயனின் வருகைக்குப் பின்னரான மூன்று நூற்றாண்டு களுக்குள் இக்குளங்கள் உருவாக்கப்பட் டுள்ளன. அவை சிறிய குளங்கள் என்பதில் சந்தேகமில்லை. பசவக்குளமும் திஸாவாவி யும் இன்றுள்ள வடிவத்தைப் பெற்றிருப்பது காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புகளின் பின்னராகும்.

## பெருங்குளங்களைக் கட்டுதல்

இலங்கையில் ஆரம்பக் குடியிருப்புகள் ஆரம் பிக்கப்பட்டு சில நூற்றாண்டுகள் கடந்த பின்னர் பெரிய குளங்களை அமைக்கும் தேவை ஏற்பட்டது. இந்நாட்டில் பெருங் குளங்களைக் கட்ட ஆரம்பித்தவர் வசப மன்னராவார் (கி.பி. 67-111). பல நூற்றாண்டுகளாகக் குளங் களைக் கட்டியமையால் இலங்கையர்கள் இப்போது நீர்ப்பாசனத் தொழினுட்பம் தொடர்பாக நல்ல அனுபவத்தைப் பெற்றி ருந்தனர். வசப மன்னருடைய காலத்தில் உலர் வலயப் பிரதேசம் எங்கும் குடியிருப்புகள் பரந்துபட்டுக் காணப்பட்டன. இதனால் பெருகும் சனத்தொகைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்துகொள்ளும் தேவை எழுந்தது. இதனால் அதுவரை இருந்த சிறிய குளங்களுக்குப் பதிலாக பெரிய குளங்களைக் கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. பெருங் குளங்கள் நிர்மாணிக்கப்பட்டு பெருமளவிலான நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள முடிந்தமையால் அவற்றிலிருந்து சிறிய, நடுத்தர அளவிலான குளங்களுக்கு கால்வாய்கள் மூலம் நீரை விநியோகிக்கக் கூடியதாய் இருந்தது.

வசப மன்னரால் 11 குளங்கள் கட்டப்பட்டதாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மயென் குளம் (மகாவிலச்சிய), மாணிக்விட்டி அல்லது மகாநிக்கவட்டி (மானன்கட்டிய) குளம் என்பன அவரால் கட்டப்பட்ட குளங்களென தற்போது இனங்காணப்பட்டுள்ளன.

வசப மன்னருக்குப் பின்னர் பெருங்குளங் கட்டியவர்களுள் மகாசேன மன்னர் முக்கிய மானவர் ஆவார் (கி.பி. 274 - 301). அவரால் ஆயிரம் குளங்கள் கட்டப்பட்டதாக மகாவம் சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மணிஹிர (மின்னேரி) வாவி, ஜல்லூர (ஹுருளு) வாவி, காணுவாவி (மகாகணதரா வாவி) என்பன இவரால் கட்டப்பட்ட குளங்களுக்கு உதாரணங்களாகும். மின்னேரி வாவியை நிர்மாணித்ததால் மகாசேன மன்னர் மின்னேரித் தெய்வம் எனப் போற்றப்படுகின்றார்.

அநுராதபுர காலகட்டத்தில் பெருங்குளங் களைக் கட்டிய மன்னர்களுள் தாதுசேன மன்னனுக்கும் (கி.பி. 455 - 473) முக்கியமான இடமுண்டு. அவர் 18 குளங்களை நிர்மாணித் ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாதுசேன மன்னர் கட்டிய குளங்களுள் கலா வாவி அதிவிசேடமானதாகும். கலா ஓயாவை மறித்து அணையொன்று கட்டியதால் இக்குளம் உருவாக்கப்பட்டுள்ளது. பாதுலக வாவியும் மகாதத்த வாவியும் இன்னும் பல குளங்கள் தொடர்பாகவும் வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மகாதத்த வாவி என்பது இன்று தம்புல்ல - கெக்கிராவ பாதையின் அருகே அமைந்துள்ள மாததுகம (மடாட்டுகம) வாவி எனக் கருதப்படுகிறது. பாதுலக வாவி இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இராசரட்டை நாகரிக காலத்தில் பெருங்குளங் கட்டிய மன்னர்களுள் முதலாம் பராக்கிரம பாகு மிகவும் முக்கியமானவராவார். ''இந்நாட்டில் மழையினால் பெறும் ஒரு துளி நீரையேனும் மனிதருக்குப் பயன்படாமல் கடலில் கலக்க விடமாட்டேன்'' எனும் மகுட வாசகத்துடன் செயற்பட்ட அவர், இந்நாட்டின் நீர்ப்பாசனத் துறைக்குப் பெரும்சேவை புரிந்தவராவார். இம்மன்னர் 163 குளங்களை நிர்மாணித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. பொலன்னறுவையில் அமைக்கப்பட்டுள்ள பராக்கிரம சமுத்திரம் இவர் கட்டிய மாபெரும் குளத்திற்கு உதாரணமாகும்.

பொலன்னறுவை இராச்சியத்தின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கலிங்க மாகனின் ஆக்கிர மிப்பைத் தொடர்ந்து 1215 இல் இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியுற்றது. இதனைத் தொடர்ந்து மக்கள் ஈரவலயத்திற்கு இடம்பெயர்ந்தனர். இதனால் இராசரட்டை நீர்ப்பாசன அமைப் புகள் காடடைந்து போயின.

**பாரிய குளங்களை அமைத்தமையால் இலங்கையர் அடைந்த அனுகூலங்கள்**

- பெருங் குளங்களில் அதிகளவு நீரைச் சேமித்து வைத்துக் கொள்ள முடிந்தமை யால் நீண்ட வரட்சியின் போதும் தண்ணீர் பற்றாக்குறையை மட்டுப்படுத்திக்கொள்ள முடிந்தமை.
- பெரிய குளங்களிலிருந்து, கால்வாய்கள் மூலம் சிறிய குளங்களுக்கு நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தமை.
- வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்தமை.
- பெருங் குளங்களை அமைத்ததோடு நீரைக் கொண்டு செல்வதற்காக நீண்ட கால்வாய்களை அமைக்கும் தொழினுட்பத் திறமையும் வளர்ச்சியுற்றமை.



உரு 1.2 மின்னேரி வாவி

## குளங்களைக் கட்டும்போது எதிர்நோக்கிய சவால்களும் பிரயோகிக்கப்பட்ட தொழினுட்பங்களும்

குளம் ஒன்றைக் கட்டுவதும் அதனை முறையாகப் பராமரித்துப் பயன் பெறுவதும் கடினமான செயற்பாடாகும். இப்பாடத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல சிறிய அளவிலான குளம் ஒன்றைக் கட்டுதல் பெரியளவு இடர்பாடான காரியமல்லா விடினும் பெரியளவிலான குளத்தைக் கட்டுதல் போதிய முன்னனுபவத்துடனும் முறையான திட்டத்துடனும் உயர்ந்த தரத் துடனும் மேற்கொள்ளப்பட வேண்டிய சிக்கலான ஒரு நடவடிக்கையாகும். பெருங் குளம் என்பது குறைந்தபட்சம் 20 - 30 அடி உயர அணைக்கட்டுடனும் ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவிலான பெரும் நீர்க்கொள்ளளவையும் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அத்தோடு குளத்தின் உயரம் அதிகரிக்கும் போது அணைக்கட்டின் மீது செலுத்தப்படும் நீரின் அமுக்கமும் அதிகரிக்கும். குளம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் மக்கள் வாழ்வதுடன் பேரளவிலான நிலபுலன்களும் காணப்படும். இதனால் மிகவும் பலம் வாய்ந்த உயர் தரத்திலான அணைக்கட்டை நிர்மாணிப்பது அத்தியாவசியமானதாகும்.

| குளத்தின் பெயர் | அணைக் கட்டின் நீளம் (மைல்) | அணைக் கட்டின் உயரம் (அடி) | நீரால் நிரப் பப்பட்டுள்ள நிலப்பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|
| மின்னேரிவாவி | $1\frac{1}{4}$ | 44 | 4 670 |
| கலாவாவி | $3\frac{3}{4}$ | 40 | 6 380 |
| பராக்கிரம சமுத்திரம் | $8\frac{1}{2}$ | 40 | 5 300 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணைப்படி பெருங்குளங்களைப் பற்றி உங்களால் புரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கும். இவ்வாறான பெருங்குளங்களை நிர்மாணிக்கும் போது அக்கால மக்கள் பெருஞ் சவால்களுக்கு முகங்கொடுத்தனர். நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்கும்போது அருவியிலோ நதியிலோ மிகப் பொருத்தமான இடம் ஒன்றைத் தேர்ந்து எடுக்கவேண்டி இருந்தது. இங்கு பெரும்பாலும் நதி பாய்ந்தோடும் ஒடுங்கிய பள்ளத்தாக்கைக் கொண்ட இரு பக்கமும் மலைப்பாங்கான பூமியைத் தெரிந்தெடுத்து அவற்றை இணைக்கும் வண்ணம் அணைக் கட்டை நிர்மாணிப்பதன் மூலம் குளம் உருவாக்கப்படுகிறது. இடத்தைத் தெரிவு செய்கையில் நிலத்தின் உயரம், இரு பக்க மலைகளினதும் தன்மை, ஏனைய குளங் களுடனும் கால்வாய்களுடனும் இணைப்பை ஏற்படுத்தும் விதம் போன்ற விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

நீர்ப்பாசனத் தொழினுட்பவியலாளர்கள், அணைக்கட்டை நிர்மாணிக்கும் போது, குளத்தின் நீர்க் கொள்ளளவின் அழுத்தத்திற்கு முகங்கொடுக்கும் வண்ணம் அதை அமைக்க வேண்டியிருந்தமை அவர்கள் எதிர்கொண்ட பிரதான சவாலாகும். அணைக்கட்டு சரிந்து விடாமல் இருப்பதற்காக அடியில் உள்ள கற்பாறையில் இருந்து மண்ணைப் படை களாக இட்டு அமைக்க வேண்டி இருந்தது. மண்ணைப் படைகளாக இடும்போது அதனை நன்கு அழுத்தியும் நீரை உறிஞ்சும் அளவை நன்கு குறைத்தும் நீரின் அழுத்தத்தைத் தாக்குப்பிடிக்கும் வண்ணமும் அமைக்கப்பட வேண்டும். அணைக்கட்டின் நீளம், உயரம் என்பவற்றிற்கு இணையாக அதன் அகலமும் நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்தது.


குளம் ஒன்றைக் கட்டும்போது எதிர்நோக் கிய இன்னொரு சவால் அதற்குத் தேவை யான தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வ தாகும். பல மைல்கள் நீளத்திற்கு 30 - 40 அடி உயரத்திற்கு மண்ணை நிரப்புவதற்கு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பல ஆண்டுகளுக்கு வேலைசெய்து இன்று போல் நவீன கருவிகளைக் கையாளாத அன்றைய காலகட்டத்தில் மனிதர்களின் இருகைகளாலும் அவ்வாறான சாதனை

புரிவது வியப்புக்குரிய செயலாகும் குளக் கட்டையும், கால்வாய்களையும் அமைப்பதற்குத் தேவைப்படும் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களை வழி நடத்துவதற்கும் உணவளிப்பதற்கும் மண்ணைச் சேகரிப்பதற்கும் அதனை அழுத்தி அணைக்கட்டை அமைப்பதற்கும் சிறந்த திட்டமும் பலமான நிறுவன அமைப்பும் தேவைப்பட்டன. இச்சவாலை வெற்றி கொள்வதற்கும் அக்கால இலங்கையர் தகுதி பெற்றிருந்தமையை, இன்றும் காணக் கூடிய பிரமாண்டமான குளங்களில் இருந்து எம்மால் உய்த்தறிய முடிகிறது. குளத்தைக் கட்டிப் பரிபாலித்துச் செல்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகங் கொடுக்கும் வண்ணம் மதகு, கலிங்கல் தொட்டி, அலைதாங்கி, உள்வான்கதவு, வெளிவான்கதவு போன்ற பல்வேறுபட்ட அம்சங்கள் அமைக்கப் பட்டன.


## குளம் ஒன்றின் முக்கியமான பகுதிகள்

**மதகு / கலிங்கல்**

அதிக அழுத்தத்துடன் குளத்தில் இருக்கும் நீரை அணைக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு விடுவிப்பதற்கு மதகு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஈரக் கலிங்கல், உயர் கலிங்கல் என கலிங்கல்களில் இரு வகை காணப்படும். ஈரக் கலிங்கல் குளத்தின் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் குளத்து நீர் முழுவதையும் பள்ளத் தாக்கிற்கு விடுவித்துவிட முடியும். குளத்தில் படிந்துள்ள சேற்றை அகற்றுவதற்கும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உயர் கலிங்கல், ஈரக் கலிங்கல்லை விட சற்று உயரத்தில் அமைக்கப்படும். சில வேளைகளில் சிறு குளங்களில் கலிங்கல் தொட்டி இன்றி கலிங்கல் மூலமே நீரை வெளியேற்ற முடியும்.



உரு 1.3 கலிங்கல்




உரு 1.4 கலிங்கல் தொட்டி

### கலிங்கல் தொட்டி

குளத்தின் நீரை வெளியேற்றுவதற்காக கலிங்கல் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. கலிங்கல் தொட்டி என்பது மதகின் ஓர் அம்சமாகும். பல மதகுகளைக் கொண்ட பெரிய குளங்களில் கலிங்கல் தொட்டிகளும் அதே அளவுக்குக் காணப்படும். குளத்தின் உட்புறமாக, குளக்கட்டிற்கு சமீபமாகச் சதுர வடிவில் இது நிர்மாணிக்கப்படும். கலிங்கல் தொட்டிக்கு குளத்து நீரைப் பாய்ச்சுவது குழாய் வழியொன்றின் மூலமாகும். கலிங்கல் தொட்டியினுள் உயர்த்தித் தாழ்த்தக்கூடிய மரச்சட்டம் ஒன்றிருப்பதோடு, அதனைத் தாழ்த்தி உயர்த்துவதன் மூலம் கலிங்கல் தொட்டியில் இருந்து குளக்கட்டின் ஊடாக நீரை வெளியேற்றுவதற்கு அமைக்கப்பட்டுள்ள மதகுக்குக் கட்டுப்பாட்டுடன் நீரைப் பாய்ச்சக் கூடியதாய் உள்ளது. கலிங்கல் தொட்டி இலங்கைத் தொழினுட்பவியலாளருக்கே உரித்தான ஆக்கம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### அலைதாங்கி

குளக்கட்டு நீரினால் அரிக்கப்படுவதைத் தடுத்துக் கொள்வதற்காக அணைக்கட்டின் உட்புறத்தில் கற்களைப் பதித்து அலைதாங்கி அமைக்கப்படும். காற்றினால் குளத்தில் சிறிய அலைகள் உருவாகலாம். ஓயாது அணைக்கட்டை நோக்கி வரும் இந்த அலைகளினால் மண்ணாலான அணை அரிக்கப்படும் நிலை காணப்படுவதால் அணையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அலைதாங்கி அத்தியாவசியமான ஒன்றாய் உள்ளது.



உரு 1.5 அலைதாங்கி

**உள் வான்கதவும் வெளி வான்கதவும்**



உரு 1.6 குளத்து நீரை வெளியேற்றும் வெளிவான்கதவு

இன்னொரு நீர் நிலையில் இருந்து குளமொன்றுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்காக உள் வான்கதவு உருவாக்கப்பட்டுள்ளது. வெளியிலிருந்து குளத்தை நோக்கிப் பாய்ந்து வரும் நீரிலுள்ள சேறு குளத்தில் படிந்து விடாது தடுப்பதற்காகவும் அது படிவதற்காகவும் சிறிய குழி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வெளியிலிருந்து குளத்திற்கு வரும்நீரைத் தடை செய்த பின்னர் குழியினுள் படிந்துள்ள சேற்றை அகற்றிவிடக் கூடியதாய் இருக்கும்.குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு வெளி வான்கதவு அமைக்கப் பட்டுள்ளது. பெரிய குளங்களுக்கு இரு வான் கதவுகளாவது இருக்கலாம்.

வெளிவான்கதவால் வெளியேற்றப்படும் நீரால் இன்னொரு குளக்கட்டுக்கோ அல்லது விளைநிலங்களுக்கோ பாதிப்பு ஏற்படாத விதமாக இயற்கையான நீர்நிலைகளுக்கு திசை திருப்பும் வகையில் வெளிவான் கதவு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.





உரு 1.7 மல்வத்து ஓயாவில் இயற்கையான கற்பாறையின் மீது கட்டப்பட்ட தேக்கம் அணைக்கட்டு (இடப்புறம்)
அந் நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் விதம் (வலப்புறம்)

## 1.1.2 கால்வாய் மற்றும் சிற்றணைக்கட்டு தொழினுட்பம்

வயல் நிலங்களுக்கு நீரைப்பெற்றுக் கொள்வதற்காக அருவிகள் ஆறுகள் என்ப வற்றை மறித்துக் கட்டப்படும் பாதுகாப்பு வேலி அணைக்கட்டு எனப்படும். அவ்வாறான அணைக்கட்டை சிற்றணைக்கட்டு என்று குறிப்பிடுவர். இதற்கமைய சிற்றணைக் கட்டு என்பது நீரைத்தேக்கி வைப்பதற்காகக் கட்டப்பட்ட அணைக்கட்டைக் குறிக்கும். இலங்கையில் ஆரம்ப காலத்தில் சிறிய நீரோடைகளை மறித்து சிற்றணைக்கட்டு களைக் கட்டுவதன் ஊடாகப் பெற்ற அனுபவத்தால் ஆறுகளை மறித்துப் பாரிய நீர்த்தேக்கங்களை அமைப்பது வரையிலான தொழினுட்பம் வளர்ச்சியுற்றது.

இலங்கையில் அணைக்கட்டுகளை அமைக் கும் தொழினுட்பத்தை நோக்கும்போது தற்காலிக, நிரந்தர அணைக்கட்டுகள் என இருவகை இருந்துள்ளதாகத் தெரிய வருகி றது. அருவிகள், ஆறுகள் என்பவற்றின் நீரோட்ட வேகம் குறைந்த இடத்தில் அதனை மறித்து மரத் தூண்களை நாட்டி, கல் மண், என்பவற்றை இட்டு தற்காலிக அணைக் கட்டை நிர்மாணித்தனர். இதன் மூலம் அருகில் உள்ள வயல்வெளிக்கு ஒரு வருடத் திற்கு அல்லது ஒரு போகத்திற்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதே நோக்கமாக இருந்தது. அடுத்து வரும் மழைக் காலத்தில் இவை சிதைந்து போய்விடும்.

தற்காலிக, சிற்றணைக் கட்டுகளைவிட நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய நிரந்தர மான அணைக்கட்டுகளையும் நிறுவியுள்ள னர். நீரின் அமுக்கத்திற்கும் அதன் அரிப் பிற்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக கற்றுண் டங்களைக் கொண்டு அணைக்கட்டுகளை அமைத்திருப்பது பரவலாக அவதானிக்கக் கூடிய ஒன்றாகும். இங்கு இயற்கையான கற்பாறை ஒன்றின் மீது அணைக்கட்டின் அத்திவாரம் இணைக்கப்பட்டுள்ளது.

வவுனியா - மன்னார் சந்திக்கு அருகே மல்வத்து ஓயாவை மறித்துக் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு புராதன நிரந்தரமான அணைக் கட்டு ஒன்றிற்கான சிறந்த உதாரணமாகும். இந்நீர்த்தேக்கத்தில் இருந்து ஆரம்பமாகும் கால்வாய் மூலம் 17 மைல் தூரம் மன்னாரிலுள்ள யோத (இராட்சத) வாவிக்கு நீர் கொண்டு செல்லப்படுகிறது.

### கால்வாய்கள் அமைத்தல்

இந்நாட்டு நீர்ப்பாசன வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்தில் சிறிய குளம் ஒன்றில் இருந்தோ சிற்றணைக்கட்டில் இருந்தோ குறுகிய தூரத்திற்குக் கால்வாய்கள் மூலம் விளைநிலங்களுக்கு நீரைப் பாய்ச்சி இருப்பர். என்றாலும் பாரிய அணைக் கட்டுகளும் பாரிய குளங்களும் அமைக்கும் தொழினுட்பம் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து நீண்ட, அகன்ற கால்வாய்களை அமைக்கும் தொழினுட்பம் முன்னேற்றம் அடைந்தது. பெரும் குளங்களை அமைப்பதில் முன்னோடியான வசப மன்னன், 12 கால்வாய்களை அமைத்ததாக மகாவம் சத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் அவற்றுள் பெயர் குறிப்பிட்டுக் கூறப்பட்டிருப்பது **ஆலி சார** எனும் **எலஹர** கால்வாய் மட்டுமேயாகும். அம்பன் கங்கைக்குக் குறுக்காக அணை ஒன்றைக் கட்டி, அதிலிருந்து வட திசைக்கு நீரைக்கொண்டு செல்வதற்காகக் கட்டப்பட்ட இக்கால்வாய் 30 மைல் வரை நீளமானதாய் இருந்தது.

மகாசேன மன்னர் மின்னேரிக் குளத்திற்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக **திலவத்துக** அல்லது **தல்வத்து** எனும் கால்வாயை அமைத்தார்.

தாதுசேன மன்னர் கலா வாவியில் இருந்து அநுராதபுரத்தின் திஸா வாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்கு **ஜயகங்கை** எனும் **யோத எல** எனும் கால்வாயை அமைத்தார். சில இடங்களில் 40 அடிவரை அகலமான இக்கால்வாயின் நீளம் 54 மைலாகும்.



உரு 1.8 யோத எல முன்னோர்களின் வியத்தகு படைப்பு

1ஆம் அக்கபோதி மன்னனால் மகாவலி கங்கையிலிருந்து நீரைக் கொண்டு செல்வதற் காகக் கட்டப்பட்ட மினிப்பே கால்வாயும் அநுராதபுர கால கால்வாய் நிர்மாணிப்பின் சிறந்த பிரதிபலிப்பாகும். இவ்வெவ்வேறு காலங்களில் நீண்ட கால்வாய்களை அமைக் கும் தேவைகள் பல இருந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

**கால்வாய்கள் அமைப்பதற்கான தேவைகள்**

- குளங்களில் இருந்தும் நீர்த்தேக்கங்களில் இருந்தும் விளைநிலங்களுக்கு நீரைக் கொண்டு செல்லல்.
- நீர்த்தேக்கத்தில் இருந்து குளத்திற்கோ குளத்தொகுதிக்கோ நீரைக் கொண்டு செல்லல்.
- குளத்தில் இருந்து இன்னொரு குளத் திற்கோ பல குளங்களுக்கோ நீரைக் கொண்டு செல்லல்

## கால்வாய்களை அமைக்கும் தொழினுட்பமும் எதிர்நோக்கிய சவால்களும்

புராதனகால இலங்கையர் கால்வாய்கள் மூலம் குளங்களையும் நீர்த்தேக்கங்களையும் தொடர்புபடுத்தி உலர் வலயத்தில் கால்வாய்த்தொகுதி ஒன்றை நிர்மாணித்தனர். இதன் மூலம் நீர் கிடைக்கப் பெறும் பிரதே சங்களில் இருந்து நீர்ப் பற்றாக்குறையான பகுதிகளுக்கு பல மைல் தூரத்திற்கு நீரைக் கொண்டு செல்ல அவர்களால் முடிந்தது. அவ்வாறான செயற்பாட்டின் போது அவற்றை உருவாக்கியவர்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும் எமது வரலாற்று மூலாதாரங்களில் கால்வாய்கள் அமைக்கப்பட்ட விதம் பற்றியோ எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றியோ போதியளவான தகவல்கள் குறிப்பிடப்படவில்லை. இதனால் எஞ்சி யுள்ள கால்வாய்களினதும் அணைக் கட்டு களினதும் சிதைவுகளில் இருந்து அன்று நிலவிய தொழினுட்பத்தையும் எதிர் நோக்கிய சவால்களையும் பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.



உரு 1.9 எலஹர அணைக்கட்டு

மேலே குறிப்பிடப்பட்ட ஜயகங்கை போன்ற நீண்ட, அகன்ற கால்வாய் ஒன்றை அமைக்கும்போது புவி அமைப்பு வேறுபாடுகள் பலவற்றிற்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. இவ்வாறான ஒரு செயற்பாட்டின்போது கால்வாய் ஆரம்ப மாகும் இடத்திலிருந்து முடிவடையும் இடம் வரையில் நிலத்தின் உயரம் தொடர்பான மிகவும் சரியான அளவைத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. ஜயகங்கையின் முதல் 17 மைல்கள் வரை ஒவ்வொரு மைல் தூரத்திற்கும் ஒரு அங்குலம் சாய்வில் அதனை அமைத்துள்ளனர். இது நிலத்தை அளவீடு செய்வதில் அக்கால இலங்கையர் இடையே காணப்பட்ட அபூர்வமான அறிவை வெளிப் படுத்தும் ஓர் அம்சமாகும்.

நீண்ட கால்வாய்கள் நிர்மாணிப்பின்போது நிலத்தை அகழ்வது, கால்வாயின் அகலம், ஆழம் என்பவற்றைப் பொருத்தமாகக் கையாளல், மென்மையான மண் படை காணப்படும் இடங்களில் கிடையாகக் கற்களைப் பரப்பி, அது அரிப்பிற்கு உள்ளாவதைத் தடுத்தல், தரையின் வேறு பாட்டிற்கு அமைய கால்வாயை உருவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டி நேர்ந்தது. எலஹர கால்வாயை அமைக்கும் போது இவ்வாறான சவால்களை வெற்றிகொண்டிருக்கும் விதம் பற்றி 'இலங்கையின் புராதன நீர்ப்பாசனம்' எனும் அபூர்வ நூல் ஒன்றை எழுதிய ஆர். எல். புரோஹியர் சுட்டிக்காட்டி உள்ளார். எலஹர கால்வாயை அமைக்கும் போது சூழலில் காணப்பட்ட உயர்வான பிரதே சங்களில் இருந்து கால்வாய்க்குள் நீர் பாய்வதால் மழைக் காலத்தில் கால்வாயில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு நீர் வெளியேறும் போது கால்வாயை அரித்துக்கொண்டு செல்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அவ்வாறான நீர் சேரும் இடங்களில் கால்வாயின் கரைகளில் கருங்கற்களினால் வரம்பு கட்டப்பட்டு அவை பலப்படுத்தப்பட்டு இருந்தன. அதே போன்று வயல்களுக்கு நீரை விடுவிக்கும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கால்வாயின் மதகுகள் கருங்கற்களால் உருவாக்கப்பட்டு இருந்தன. கால்வாயில் நீர்ப்பெருக்கு ஏற் படும் இடங்களில் அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கற்களாலான வான் கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

## 1.1.3 பொய்கைகள் அமைத்தல்

மனிதர்களுடைய பல்வேறு தேவைகளுக்காக நீரைச் சேகரித்து வைத்துக் கொள்வதற்கு நிலத்தை அகழ்ந்து அமைத்துக் கொள்ளும் நிர்மாணம் பொய்கை எனப்படும். குளம் ஒன்றைப் போல நிலத்தின் மேல் அணைக் கட்டை அமைத்து நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளும் தன்மையைப் பொய்கைகளில் காண முடியாது. பெரும்பாலும் பொய்கை அமைக்கும்போது நிலத்தை அகழ்ந்து உட்பகுதிச் சுவர்களுக்குத் தடுப்பு அமைத்து நீரைச் சேமித்து வைக்கும் முறை கையாளப்படுகிறது.

இலங்கையில் பொய்கைகளை அமைக்கும் வரலாறு விஜயனின் வருகைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. விஜயன் இந்நாட்டில் கால்பதிக்கும் போது குவேனி, பொய்கை ஒன்றின் அருகில் அமர்ந்து நூல் நூற்றுக் கொண்டிருக்கும் கோலத்தில் காட்சி அளித்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திலேயே இலங்கையில் பொய்கை அமைக்கப்பட்டு இருந்தமை இக்கதையின் மூலம் தெரிய வருகிறது. இலங்கையில் குளங்களும் கால்வாய்களும் அமைக்கும் தொழினுட்பம் வளர்ச்சி அடைந்ததுடன் பொய்கை அமைக்கும் தொழினுட்பமும் வளர்ச்சி அடைந்து இருக்கும் என்று நாம் கருதலாம். வசப மன்னர் நகரத்தை அழகுபடுத்துவதற்காக பல பொய்கைகளை அமைத்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது இதற்கான உதாரணமாகும்.


### பொய்கைகள் அமைக்கப்பட்டதின் தேவைகளும் அவற்றின் வகைகளும்

★ **நீர்ப் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட பொய்கை**

இந்நாட்டின் புராதன பொய்கைகளில் பெருமளவானவை நீர்ப் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டவையாகும். குளிப்பதற்கும் குடிப்பதற்கும் நீரைச் சேகரித்து வைத்துக் கொள்வதற்கும் வெவ்வேறு பொய்கைகள் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. அபயகிரியின் யானைப் பொய்கை குளிப்பதற்காக அமைக்கப்பட்ட பெரியதொரு பொய்கையாகும். அநுராதபுர ரன்மசு பூங்காவின் பொய்கை நீராடுவதற்கும் நீர்விளையாட்டில் ஈடுபடுவதற்காகவும் பயன் படுத்தப்பட்டதாகும்.

★ **மழைநீரை முறையாக சேமிப்பதற்காக அமைக்கப்பட்ட பொய்கை**

ஆராமைகளில் (பிக்குகள் தங்கும் இடங்களில்) மழை காலத்தில் இடத்திற்கு இடம் நீர் தேங்குவதால் ஏற்படும் சூழல் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காக சுரங்கம் அல்லது கால்வாய்களால் அந்நீர் பொய்கைகளுக்குப் பாய்ச்சப்பட்டுள்ளது.




உரு 1.10 அபயகிரி தாதுகோபத்தின் மீதும் அதன் முற்றத்திலும் பொழியும் மழைநீர் பொய்கையை வந்தடையும் முறை.

அநுராதபுர அபயகிரி தாதுகோபத்தின் மீது பொழியும்மழைநீர்வழிந்தோடிஉள்முற்றத்தில் ஒன்றுசேரும் இந்நீர் வெளி முற்றத்திற்கு செல்லும் வண்ணம் பீலிகள் அமைக்கப் பட்டுள்ளன. வெளி முற்றத்தில் கற்களினால் அமைக்கப்பட்டுள்ள குழிகளில் ஒன்று சேரும் நீர் நிலத்துக்கு கீழே அமைக்கப்பட்டுள்ள சுரங்கக் கால்வாய்கள் மூலம் வெளியேறி அமைக்கப்பட்டுள்ள பொய்கைகளில் ஒன்று சேரும். இவ்வாறான நான்கு பொய்கைகள் நாற்றிசையும் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பொய்கைகள் தாதுகோபங்களையும் ஆராமைகளையும் அண்டிக் காணப்படுகின்றன.

### ★ அழகுக்காக அமைக்கப்பட்ட பொய்கை

அநுராதபுர ரன்மசு பூங்காவின் பொய்கையைப் போன்று பொலன்னறுவையின் குமாரப் பொய்கை, தாமரைப் பொய்கை என்பன அழகுக்காக மட்டுமல்லாமல் இவை நீர்த் தேவைக்காகவும் அமைக்கப்பட்டிருக்கலாம். இவற்றில் பல்வேறுபட்ட அலங்கார வேலைப்பாடுகள் துல்லியமாகத் தெரிகின்றன.

### ★ சூழலைக் குளிர்மையாக வைத்திருப்பதற்காகக் கட்டப்பட்ட பொய்கை

இராசரட்டைப் பிரதேசம் உலர்கால நிலையைக் கொண்டிருப்பதால் ஆராமைகளில் வசிக்கும் பிக்குமார்களுக்கு குளிரான சூழலில் தியானம் புரிவதற்காகப் பொய்கைகளை அமைக்கக் கூடிய எல்லா இடங்களிலும் அவற்றை அமைத்திருப்பதைக் காணமுடிகிறது.

500 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அபயகிரி விஹாரை அமைந்துள்ள நிலப் பரப்பில் 65 பொய்கைகள் அளவில் அமைக்கப்பட்டுள்ளன. அம்பாறை ரஜகல தொல்பொருள் ஆய்வுக்குட் பட்ட பிரதேசத்தில் 40 இற்கு மேற்பட்ட பொய்கைகள் கண்டறியப்பட்டுள்ளன. ஒரு பிரதேசத்தில் அருகருகே பொய்கைகள் அமைக்கப்பட்டு நீரைச் சேமித்து வைத்திருந்தால் நீராவியாதலால் அப்பிரதேசத்தின் சூழல் குளிர்ந்த தன்மையானதாய் இருந்திருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட பல வகையான பொய்கைகள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப் பட்ட தேவைகளின் அடிப்படையில் அவற்றைப் பிரித்து நோக்கினாலும் பல்வேறு பட்ட தேவைகளையும் ஒரே பொய்கையால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் பலவும் இருந்துள்ளன என்பதையும் குறிப்பிட வேண்டும். இதற்கு அநுராதபுரத்தின் குட்டம் பொய்கை ஒரு சிறந்த உதாரணமாகும். அபயகிரி பிக்குகளின் நீர்த் தேவை அழகு படுத்தல், சூழலைக் குளிர்மையாக்குதல் ஆகிய மூன்று தேவைகளையும் அப்பொய்கை நிறைவேற்றியதாகக் கருத முடியும்.

### ★ பொய்கை அமைக்கும் தொழினுட்பம்

உலர் வலயத்தில் பல்வேறுபட்ட இடங்களில் நிலத்தை அகழ்ந்து அமைக்கப்பட்டுள்ள பொய்கைகளில் பெரும்பாலானவை திட்டமிட்டு அமைக்கப்பட்டவையாகும். பொய்கைக்கான இடத்தைத் தெரிவு செய்யும் போது நீரைப்பெற்றுக் கொள்ளும் விதத்தில் கவனம் செலுத்தியுள்ளனர்.



உரு 1.11 இரட்டைப் (குட்டம்) பொய்கை

மழை நீரைச் சேமிக்கும் பொய்கைகளைப் போன்றே வேறு நீர் மூலங்களில் இருந்தோ சுரங்க வழியிலோ கால்வாய் மூலமோ நீரைப் பெற்றுக் கொண்ட பொய்கைகளும் உள்ளன. கற்பாறைகளின் மீது கல் அணை களைக் கட்டுவதன் மூலம் அமைத்துக் கொள்ளப்பட்ட பொய்கைகள் மழை நீரைச் சேமித்துக் கொள்வதற்கானவையாகும். நிலத் தை அகழ்ந்து அமைக்கப்பட்ட பொய்கைகள் பல்வேறு வடிவினதாகும். அதிகமானவை சதுரமான, பலகோண வடிவிலானவையாகும். வட்ட வடிவிலான பொய்கைகள் அபூர்வமாகக் காணப்படுகின்றன.



உரு 1.12 குட்டம் பொய்கையின் நீர் வடிகட்டி (வெளிப்பகுதிக்குள் வந்து சேரும் நீர் உட்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுவரில் காணப்படும் 6 சிறிய வழிகளினுடாக மத்திய பகுதிக்குள் சென்று அங்கிருந்து ஒரு குழாய் மூலம் பொய்கைக்குச்செல்கிறது.)

குளிப்பதற்கும் குடிப்பதற்கும் அமைக்கப் பட்ட சில பொய்கைகளில் நீர் அசுத்தம் அடையும் போது அந்நீர் நிலத்துக்கு அடியில் கால்வாய் மூலம் பொருத்தமான இடம் ஒன்றிற்கு அகற்றுவதற்கு பொய்கையின் அடிப்பாகத்திலேயே துளை இட்டு சுரங்க வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு குட்டம் பொய்கையும் ரன்மசு உயன பொய்கையும் சிறந்த உதாரணங்களாகும். பொய்கையின் ஓரங்கள் இடிந்து விழாமல் கல்லாலான தடுப்புகள் அமைக்கப்பட்டுள் ளன.

அத்தடுப்புக்கற்கள் மிகவும் மெல்லியதான உறுதியான சாந்தினால் ஒன்றுடன் ஒன்று பொருத்தப்பட்டுள்ளன. இதனால் பொய்கை யில் தேங்கி நிற்கும் நீர் உறிஞ்சப்படுவது குறைக்கப்படுகிறது. பொய்கைகளின் உள்ளே இறங்குவதற்கு படி வரிசைகள் அமைக்கப் பட்டுள்ளதால் எந்த மட்டத்திலான அளவிலும் நீரினுள் இறங்குவது இலகுவாக்கப் பட்டுள்ளது. பொய்கைகளுக்கு வெளியில் இருந்து குழாய் வழியாக நீரைப் பெறும் பொழுது அக்குழாய் வழிகளை நேரடியாகப் பொய்கைகளில் விடாது, அதற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள வடிகட்டிக்கு விடப்படு கிறது. இதனால் மண்டி நீரும் அழுக்கு களும் பொய்கையை அடைய முன்னர் அகற்றப்பட்டு விடுகின்றன.

வெளியில் பெய்யும் மழை நீர் பொய்கையில் பாய்ந்து விடாது இருக்க அதன் கற்சுவர் நில மட்டத்தில் இருந்து உயரமாக அமைக்கப் பட்டுள்ளது. ரஜகல புராதன ஆராமைத் தொகுதியில் பள்ளத் தாக்கான கற்பாறை மீது கற்சு வர் கொண்டு கட்டி எழுப்பப்பட்டுள்ள எல்லாப் பொய்கைகளிலும் அதனுள் இறங்குவதற்கு முன்பு காலைக் கழுவிக் கொள்வதற்கு வசதியாக நீர் நிரப்பப்பட்ட சிற்றளவிலான நீர்தொட்டி ஒன்று பொய்கைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மணலும் அழுக்குகளும் பொய்கையில் கலப்பது தடுக்கப் பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இங்கே பொய்கையின் அருகே நிழலுக்கு சிறிய கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. குளிப் பதற்கு வருவோர் நிழலில் சற்று களைப்பாறி விட்டு உடல் குளிர்ந்த பின்னர் பொய்கையில் இறங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டு இருந்துள்ளன. இதற்கமைய பொய்கைகள் அமைப்பது முறையான திட்டமிடலுடனும் சூழல் தொடர்பான நல்ல புரிந்துணர்வுடனும் மேற்கொள்ளப்பட்டமை தெளிவாகத் தெரிகின்றது.



உரு 1.13
ரஜகல புராதன ஆராமைத் தொகுதியில் கற்பாறை மீதும் கற் குழிகளிலும் அமைக்கப்பட்ட பொய்கைகள்.



உரு 1.14
பொலன்னறுவையில் அமைக்கப்பட்டுள்ள தாமரைப்பொய்கை



உரு 1.15
அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள அபயகிரி யானைப் பொய்கை

### 1.1.4 நீர்ப்பூங்கா

நீர்ப்பூங்கா அல்லது நந்தவனம் என்பது மரஞ்செடி கொடிகளை நட்டு ஓய்வு எடுப் பதற்காகவோ நீர்விளையாட்டுக்காகவோ பொருத்தமானதாக முறைப்படி அமைக்கப் பட்ட விசேட இடமாகும். எமது நாட்டில் மூத்த சிவ மன்னரே முதன் முதலாக நந்தவனம் ஒன்றை அமைத்தவராவார். நந்தவனத்திற்காக நிலத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த தினத்திலேயே அடைமழை பெய்ததால் அது மகாமேகவனம் எனப் பெயர் பெற்றதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிர சித்திபெற்ற இந்த நந்தவனத்தை தேவானம்பிய திஸ்ஸ மன்னர் மஹிந்த தேரர் உட்பட பௌத்த குருமாருக்குத் தானமாக அளித்தார். மஹிந்த தேரர் இந்நாட்டிற்கு வருகை தந்தபோது நந்தனவனம் எனப்பட்ட இன்னொரு பூங்காவும் அநுராதபுரத்தில் இருந்துள்ளது. மஹிந்த தேரர் அங்கிருந்து தர்ம உபதேசம் செய்தபடியால் அது புத்த சாசனம் துலங்கிய இடம் என்ற பொருளில் ஜோதிவனம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்நாட்டின் முதலாவது பூங்காவாகக் கருதப்படும் இதனை அண்டிய பிரதேசங்களில் பல்வேறு கட்டிடங்கள் கட்டப்பட்டதாலும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களாலும் இன்று அதனைக் காண முடியாது உள்ளது.

புராதன காலத்தில் இந்நாட்டில் பூங்காக்களை அரசர்களே அமைத்துள்ளனர். மூத்த சிவ மன்னருக்குப் பிறகு குட்டகண்ண திஸ்ஸ மன்னர் பத்மஸ்வர என்ற பெயரில் பூங்கா ஒன்றை அமைத்துள்ளார். இது தவிர வசப, கோதாபய, முதலாம் காசியப்ப, முதலாம் அக்போ, முதலாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்களும் பூங்காக்களை நிர்மாணித்துள்ளனர். புராதன காலத்தில் எமது நாட்டில் அமைக்கப்பட்ட ரன்மசு, சீகிரிய ஆகிய பூங்காக்கள் இன்றும் அழகுறக் காட்சி தருகின்றன. இவை பிரபுத்துவ மக்களுக்காக அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆகையால் அரச பூங்காக்கள் என்று இவற்றை குறிப்பிடலாம். புராதன காலத்தில் இந்நாட்டில் பெருந் தொகையான பிக்குகள் வாழ்ந்த ஆராமைகளின் வளாகத்திலும் பூங்காக்கள் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பிக்குமார் ஓய்வாக இருந்து தியானத்தில் ஈடுபடவும் போதனைகள் நிகழ்த்தவும் அவ்வாறான பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். அவற்றை ஆராமைகளின் பூங்காக்கள் எனக் குறிப்பிடலாம். அநுராதபுர மகாவிகாரை, அபயகிரி விகாரை, ஜேதவனராம விகாரை என்பவற்றை அண்டி இப்பூங்காக்கள் இருந் திருக்கலாம் எனக் கருதலாம்.

**நீர்ப் பூங்காக்களை அமைத்தலும் பிரயோகிக் கப்பட்ட தொழினுட்பமும்**

பூங்காக்களுக்கு நீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்து பொய்கைகளைஅமைத்து அழகுடன் உருவாக்கப்பட்ட இவற்றை நீர்ப் பூங்காக்கள் எனலாம். மேலே குறிப்பிடப்பட்ட ரன்மசு பூங்கா, சீகிரிய பூங்காக்களை இவற்றிற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

## ரன்மசுப் பூங்கா



உரு 1.16 ரன்மசுப் பூங்கா

திசா வாவியின் கரையில் இசுருமுனி விகாரையிலிருந்து மிரிசவெட்டி விகாரை வரையான இடம் ரன்மசுப் பூங்காவிற்கு உரியதாகும். மகாமேக நந்தவனமும் நந்தன நந்தவனமும் பௌத்த குருமாருக்கு தானமாக வழங்கப்பட்டமையால் அரசர்களின் பாவனைக்காக ரன்மசுப்பூங்கா உருவாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. நிலத்தின் சரிவான தன்மையும் திசா வாவிக் கரையின் அமைதியான சூழலும் கவனத்தில் கொள்ளப்பட்டு, பூங்கா திட்டமிடப் பட்டுள்ளது. திசாவாவியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நீர், பூங்கா வழியே பாய்ந்து ஓடுவதற்கு குழாய் வழித் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு, பொய்கைகள் பலவும் நீரைப்பெற்றன. வெப்ப காலத்திற்குப் பொருத்தமான வகையில் சிறிய திறந்தவெளி வீடுகள், மண்டபங்கள், குளியலறைகள், சாய்ந்து அமர்ந்திருப்பதற்கான கற்படுக்கைகள் ஆகியவற்றை அமைத்து பூங்காவை மிகவும் அலங்காரமான முறையில் பரிபாலித்துள்ளனர். இங்கு அமைக்கப்பட்டுள்ள பொய்கை நீராடுவதற்கும் நீர்விளையாட்டில் ஈடுபடுவதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

## சீகிரிய நீர்ப்பூங்கா

தென் ஆசியாவில் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த நீர்ப்பூங்காக்களுள் சீகிரிய நீர்ப்பூங்கா குறிப்பிடத்தக்கதாகும். கி.பி.5 ஆம் நுற்றாண்டுக்கு உரிய இந்நீர்ப் பூங்கா காலப் போக்கில் காடடர்ந்து விட்டது. எச்.சி.பி. பெல், செனரத் பரணவிதான ஆகிய தொல் பொருள் ஆய்வாளர்களால் இது வெளிக் கொணரப்பட்டது.

சீகிரிப் பிரதேசத்தில் நிகழ்த்தப்பட்ட தொல் பொருள் ஆய்வுகளின்படி அதன் மேற்குப் பிரதேசத்தின் இருமருங்கிலும் இருந்த நீர்ப் பூங்கா பற்றிய விபரம் பெற்றுக் கொள்ளப் பட்டது. நீர்ப்பூங்காவின் நிலம் பிரிக்கப் பட்டுள்ள விதத்தின்படி சீகிரிக் குன்றை மையமாகக் கொண்டு மேற்குப் பக்கமாகப் பிரயாணம் செய்யும் பிரதான பாதைக்கு



உரு 1.17 சீகிரிய நீர்ப்பூங்கா

சமாந்தரமாக அவ்வழியின் இரு மருங்கிலும் நீர்ப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அங்கு காணப்படும் பள்ளத்தாக்கின் இயற்கையான தன்மையைக் கருத்தில் கொண்டு இரு பக்கமும் நீர் பாய்ந்து ஓடும் வழிகளின் தொகுதியும் தடாகம், மண்டபம் ஆகியவையும் முறையான திட்டத்திற்கு அமைய அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சீகிரியின் உயர் பிரதேசத்தில் இருந்து கால்வாய்த் தொகுதி ஒன்றின் ஊடாக கீழே பாய்ந்து வரும் நீர் பொருத்தப்பட்டுள்ள வட்டவடிவத் துளை யிடப்பட்ட கற்களின் ஊடாக அதிக அழுத்தத் துடன் வெளியேறும் பொழுது பூம்புனலாகப் பரிணமிக்கின்றது. இயற்கையாக ஏற்படும் அழுத்தம் காரணமாகவே இத்துளையால் நீர் பீரிட்டு உயரே பாய்கிறது. பெரும் மழைக் காலங்களில் இப் பூம்புனல் காட்சியை இன்றும் காணக்கூடியதாய் உள்ளது. நீர்த் தொழினுட்பத்தில் இயல்பாகவே அபரிமித மான ஆற்றல் பெற்றிருந்தார்கள் என்பது தெளிவாகின்றது.

சீகிரிக் குன்றின் உச்சியில் இருந்து மேற்குத் திசையை நோக்கும் போது பூங்காவின் ஆரம்பத் திட்டமிடலைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். அங்கு நிர்மாணிக்கப் பட்டுள்ள பாதைத் தொகுதி, மண்டபம், பொய்கை, பூம்புனல், ஓய்வு மண்டபம் ஆகியன ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவை. அதன் அனைத்து அம்சங்களையும் ஒவ்வொன்றாக நோக்கும் போதும் மனோரம்மியமான காட்சி உருவாகின்றமையை உணர முடிகிறது. இன்று காணப்படாத கட்டடங்களின் தன்மையும் பூங்கொத்துக்களும் மரஞ்செடி கொடிகளும் பூம்புனலுடனுமான முழுமையான காட்சி காசியப்ப மன்னனுடைய காலத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை மனக் கண் முன் கொண்டு வர முடிகின்றது.



உரு 1.18 சீகிரியின் பூம்புனல்

## நீர்ப்பூங்காவின் சிறப்பான அம்சங்கள்

- நிலப் பிரதேசத்தின் இயல்புக்கு அமையவும் சூழலுக்குப் பொருந்தும் விதத்திலும் பூங்கா திட்டமிடப்பட்டமை.
- திட்டமிட்ட அமைப்பிலான வீதித் தொகுதி ஒன்று பூங்காவினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை.
- கால்வாய், பொய்கை, பூம்புனல் என்பவற்றை அமைத்து அழகுபடுத்தியுள்ளமை
- திறந்த வெளி வீடுகள், மண்டபங்கள், ஒய்விடங்கள் ஆகியவற்றை அமைத்து மரஞ்செடி கொடிகளால் மனோரம்மியமான சூழலை ஏற்படுத்தியுள்ளமை.
- பூங்கா நிர்வாகிகளினால் (உயன் கெமி அல்லது உயன் வெஜேரும்) முறையாகப் பராமரிக்கப்பட்டமை.

## 1.2 களிமண் தொழினுட்பம்

நவீன மனிதர்கள் புராதன காலத்தில் இருந்தே கற்றுக்கொண்ட கைத்தொழில்களில் களிமண் கைத்தொழில் மிக முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றது. மனிதன் இவ்வாறு களிமண் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, களிமண்ணைப் போல் இலகுவாக கையில் கிடைக்கக் கூடியதும் இலாவகமாகக் கையாளக் கூடியதுமான வேறு மூலப்பொருள் ஒன்று எங்குமே கிடைக்காமையினாலாகும். மனிதன் நெருப்பைக் கண்டறிந்த சிறிது காலத்துக் குள்ளேயே உணவைச் சமைப்பதற்கு சட்டி, பானைகளை உற்பத்தி செய்யத் தொடங்கியதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மனித சமூகம் இதுவரை வந்த நெடும் பயணத்தின் போது ஆரம்பகாலங்களில் உற்பத்தி செய்த களிமண்ணால் செய்யப்பட்ட பாண்டங்கள், உருவங்கள்,சிற்பங்கள், கலைப் பொருள்கள் என்பவற்றைக் களி மண்ணினால் செய்திருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



உரு 1.19 இலங்கையில் கிடைத்த அனுராதபுர காலத்தின் முற்பாதிக்குரிய மிகப்பழைமை வாய்ந்த மட்பாண்டம்

மனிதர்களின் ஏனைய பல படைப்புகளுடன் மட்பாண்ட உற்பத்தியும் ஆரம்பகாலத் திலேயே தொடங்கிவிட்டது. முதன் முதலில் மட்பாண்டங்களை உற்பத்தி செய்த காலத்தில் அவற்றை வெயிலில் காய வைத்து உறுதி அடையச் செய்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை. நாளடைவில் மட் பாண்டங்களை நெருப்பில் சுடுவதன் மூலம் உறுதியாக்கிக் கொள்ளும் தொழினுட்பத்தைக் கற்றுக் கொண்டிருக்கலாம். மனிதர்கள் வீடு கட்டி நாகரிகம் அடையத் தொடங்கியதுடன் மட்பாண்ட உற்பத்தியும் வேகமாக முன் னேற்றம் அடைந்தது. புராதன நாகரிகங் களில் மனிதன் தனது தேவைக்காகப் பல்வேறுபட்ட வடிவங்களிலும் அளவு களிலும் மட்பாண்டங்களை உற்பத்தி செய்து கொண்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமையை அக்கால மட்பாண்டங் களில் இருந்து எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. சட்டி, பானை, பீங்கான், கோப்பை, நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடிய பாத்திரங்கள், பூச்சாடி போன்றவை அவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளவற்றிற்கு உதாரணங்களாகும். மட்பாண்டங்களை உற்பத்தி செய்யும் தொழினுட்பம் வளர்ச்சி அடையத் தொடங்கியதுடன் அவற்றுக்கு வர்ணம் தீட்டுதல் உருவங்கள் வரைதல் கரை அலங்காரங்கள் செய்து அழகுபடுத்துதல் என்பவற்றில் அனைத்து நாகரிகங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

வனைதல் சில்லு (சக்கபோர்வை) கண்டறியப் பட்டமை மட்பாண்ட உற்பத்திக் கலையில் பாரிய அளவில் மாற்றத்தைத் தோற்று விப்பதற்குக் காரணமாய் அமைந்தது. வனைதல் சில்லு என்பது தரையிலோ அல்லது வேறு ஒரு பொருளின் மீதோ வைத்துச் சுழற்றக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள வட்ட வடிவான பலகையிலான ஒரு கருவியாகும். அவ்வாறான பலகையின் மீது களிமண் உருண்டையை வைத்து அப்பலகையைச் சுழற்றுவதன் மூலம் சுழற்சி வேகத்திற்கும் கையினால் உருவாக்கப்படும் வடிவத் திற்கும் ஏற்ப மிகச் சிறந்த முடிவுப் பொருள் ஒன்றை உற்பத்திசெய்து கொள்ள முடிந்தது. மேலே குறிப்பிட்டவாறு பல்வேறுபட்ட வடிவங்களிலும் அளவுகளிலும் உற்பத்தி செய்துகொள்ள முடிந்தது வனைதல் சில்லைக் கண்டறிந்த பின்னரேயாகும்.

இலங்கையில் மட்பாண்டங்களை உற்பத்தி செய்து கொள்ளும் வரலாறு, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் வரை நீண்டு செல்கிறது. மேற்படி காலத்தின் இறுதிப் பகுதிக்குரிய மட்பாண்டச் சிதைவுகள் நாட்டில் மேற் கொள்ளப்பட்ட சில தொல்பொருளியல் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மஹிந்த தேரரின் வருகையுடன் அண்டை நாடான இந்தியாவுடன் எமது தொடர்புகள் வளர்ச்சி அடைந்தமை மட்பாண்டத் தொழினுட்ப வளர்ச்சிக்கும் காரணமாய் அமைந்தது. புனித வெள்ளரசு மரம் இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட போது, கூட வந்த கலைஞர்களுள்

மட்பாண்ட உற்பத்தி செய்வதில் நிபுணத்துவம் பெற்றிருந்த எட்டு குயவர் குலங்கள் இடம்பெற்றிருந்ததாக வம்சக் கதைகளில் கூறப்பட்டுள்ளன. இக்கலைஞர்களின் வருகையுடன் இந்தியாவின் அக்கால மட்பாண்ட உற்பத்தித் தொழினுட்பம் இந்நாட்டிற்குக் கிடைத்திருக்கலாம் என்பது தெளிவாகிறது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளில் கிடைக்கப்பெற்ற பொருட்களில் பெரும்பாலானவை மட்பாண்ட உற்பத்திகளேயாகும். மட்பாண்டங்களின் சிதைவுகள் ஓடு, செங்கல், களிமண் உருவங்கள், களிமண் முத்திரை என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும் அநுராதபுர காலத்தின் முற்பகுதியில் மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல் முன்னேற்றகரமாக இருந்துள்ளதுடன் உயர் தரமான பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தொல்பொருள் அகழ்வுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் மூலம் தெரியவருகிறது.

மட்பாண்ட உற்பத்தியானது படிமுறையான நடவடிக்கைகள் பலவற்றைக் கொண்டதாகும். முதலில் பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்து அதனைப் பதப்படுத்திக் கொள்வர். உற்பத்தி மட்பாண்டத்துக்குத் தேவையான களிமண்ணை உருண்டையாக்கி வனைதல் சில்லின் மீது வைத்து, அதன் உருவத்தை வடிவமைத்துக் கொள்வர். முழுமையான வடிவத்தை செப்பனிட்டு பின்னர் வெளிப்பகுதியில் செதுக்கல்களையோ கோடுகளையோ கொண்டு அலங்கரிக்கப்பட்ட பாண்டம், உலர வைக்கப்பட்ட பின்னர் சூளையில் வைக்கப்பட்டு சுடப்படும். இதன் மூலம் மிகவும் உறுதியான நல்லதொரு மட்பாண்டம் உற்பத்தி செய்யப்பட்டமை தெரியவருகிறது.

## செங்கல், ஓடு உற்பத்தி



உரு 1.20 அநுராதபுர காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட செங்கல்லும் தற்காலத்தில் உற்பத்தி செய்யப்படும் செங்கல்லும்

கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்தே இந்நாட்டில் செங்கற்பாவனை இருந்து வந்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. துட்டகைமுனு மன்னருடைய காலத்தில் (கி.மு. 161 - 137) ருவன்வெலிசாய போன்ற பிரமாண்டமான தாதுகோபங்களைக் கட்டுவதற்குத் தேவையான செங்கற்களை உற்பத்தி செய்து கொள்ளும் தொழினுட்பம் வளர்ச்சி அடைந்திருந்தது. துட்டகைமுனு மன்னர் அத்தாதுகோபத்தைக் கட்டும் போது செங்கல் உற்பத்தியாளர்களை அழைத்து கலந்துரையாடி மிகவும் உறுதியான செங்கல்லை உற்பத்தி செய்யக் கூடியவரைத் தெரிவு செய்து கொண்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநுராதபுர இராச்சியத்தின் முற்பாதியில் இன்றைய அளவைவிடப் பெரிய அளவிலான செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்கற்கள் குறைந்தளவு நீரையே உறிஞ்சிக் கொண்டதோடு, உறுதியானவையாகவும் பாரம் தாங்கும் திறன் மிக்கவையாகவும் இருந்துள்ளன. அநுராதபுரத்தில் ஜேதவன தாதுகோபத்தைப் புனரமைக்கும் போது, அதன்

பழைய செங்கற்களின் உறுதிக்குச் சமமான செங்கற்களை உற்பத்தி செய்து கொள்ளும் தேவை உருவானது. இந்நாட்டு உற்பத்தியாளர் களால் அத்தரத்திலான செங்கற்களை உற்பத்தி செய்ய இயலாமையால் புதிய சூளையை அமைத்து உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை அப்புனரமைப்பாளர்களுக்கு ஏற்பட்டது. அதற்கமைய 1990 - 91 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அநுராதபுர பிரதேசத் தில் கல்கடவல எனும் கிராமத்தில் சூளை ஒன்றை அமைத்துத் தேவையான செங்கற் களை உற்பத்தி செய்ய நேர்ந்தது.

அநுராதபுர யுகத்தில் செங்கல் உற்பத்தி செய்யும் தொழினுட்பம் நாடெங்கும் பரவலாகக் காணப்பட்டது. பல்வேறு பிரதேசங்களிலும் காணப்படும் பழைய செங்கற்களின் மூலம் இதனை அறிந்துகொள்ள முடிகிறது.

அபயகிரி, ஜேதவன, தெமள மகாசாய போன்ற தூபிகளைப் போன்றே - பொலன் னறுவை அரச மாளிகையும் அதிக அளவு செங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வைக்கு உதாரணங்களாகும்.

இன்று எஞ்சியிருக்கும் கற்றூண்களின் சிதைவு களைப் பார்க்கையில் புராதன கட்டிடங்களின் கூரை கம்புகளால் உருவாக்கப்பட்டு ஓடுகளால் வேயப்பட்டிருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இவ்வாறான கட்டிடங்களை அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தும் போது, கூரையின் கம்புகள் இற்றுப் போனமையால் விழுந்து உடைந்த ஏராளமான ஓட்டுத் துண்டுகளைக் காணக்கூடியதாய் உள்ளது. ஓடுகளை உற்பத்தி செய்வோர் அக்காலத்தில் ஓட்டுத் தச்சர் என அழைக்கப்பட்டனர். சில வேளைகளில் செங்கல் உற்பத்தியாளரும் ஓட்டுத் தச்சர் என்றே அழைக்கப்பட்டனர்.

இராசரட்டை நாகரிக காலத்தில் சமயக் கட்டிடங்கள், பொதுக்கட்டடங்கள், அரண் மனைகள், பிரபுக்களின் வீடுகள் ஆகியவற்றின் கூரைகள் ஓட்டினால் வேயப்பட்டிருந்தன. எனினும் சாதாரண மக்களின் வீடுகள் அவ்வாறான நிரந்தரமான அமைப்புகளை கொண்டிருக்கவில்லை எனக் கருதப்படுகிறது. ஓடு உற்பத்தி செய்யும் போது பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்து பதப்படுத்தல், ஓட்டு அச்சில் வார்த்து அதன் வடிவத்தை உருவாக்கிக் கொள்ளுதல், காய வைத்தல், சுடுதல் போன்ற படிமுறையான நடவடிக்கை கள் பல மேற்கொள்ளப்பட்டன என அறிய முடிகிறது.

ஆதிகாலத்தில் செங்கல் உற்பத்தியுடன் ஓட்டு உற்பத்தியும் முழு நாட்டிலும் பரந்து பட்டிருந்தமையை கிடைக்கப்பெறும் ஆதாரங் களால் உறுதி செய்துகொள்ள முடிகிறது.

## உலோகத் தொழினுட்பம்



உரு 1.21
தொல்பொருள் அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட புராதன ஆபரணங்கள்

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல் பொருள் ஆய்வுகளிலிருந்து கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இரும்பு, செம்பு, போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை தெரிய வருகின்றது. எனினும் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இருந்து விவசாயத் தொழில் வளர்ச்சியுற்றமை, நகரமயமாதல் அதிகரித் தமை, கட்டடவாக்கத் துறை வளர்ச்சியுற்றமை,

இந்தியாவின் தொழினுட்ப முறைகள் நாட்டினுள் வேகமாகப் பரவியமை போன்ற காரணங்களால் உலோகத் தொழினுட்பமும் பல்வேறுபட்ட உலோக வகைகளின் பாவனையும் வேகமாக விருத்தியுற்றன.

கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரை குகைக் கல் வெட்டுக்கள் பல இடங்களிலும் பரவலாகப் பொறிக்கப்பட்டுள்ளன. கற்குகைகளில் பீலிகளையும் குகைக்கல் வெட்டுக்களையும் உருவாக்குவதற்காக இரும்பினாலும் உருக்கினாலுமான கருவிகளின் பயன்பாடு அதிகரித்துச் சென்றுள்ளன. பொறிக்கப்பட்டுள்ள கல் வெட்டுக்களில் கபர (கொல்லர்/கம்மாளர்), தம்பர (செம்புக் கம்மாளர்) தோபஷ (தகரக் கம்மாளர்) போன்ற உலோகக் கைத்தொழிலில் ஈடுபட்டோர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இராசரட்டை நாகரிக காலத்தில் இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்கள் பாவனையில் இருந்து வந்துள்ளன. இவ்வாறான உலோகங்களால் செய்யப்பட்ட உற்பத்திகள் தொல்பொருள் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வுலோகங்களினுள் இரும்பு, செம்பு, வெள்ளி என்பன இந்நாட்டில் இருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான சில தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

1994 ஆம் ஆண்டில் அநுராதபுர அபயகிரி விகாரைப் பிரதேசத்தில் பொய்கை ஒன்றை அகழ்ந்த போது 370 - 438 கிராம் நிறை அளவுகளிலுள்ள 5 தங்கத் துண்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்தோடு தங்க நாணயங்கள் பலவும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறான துண்டுகள் ஐந்தும் ஏதாவது ஆழம் குறைந்த அச்சு ஒன்றில் தட்டையாக வார்க்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு துண்டினதும் நிறை புராதன எழுத்துக்களின் மூலம் 'கலங்' அளவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பொய்கையை மேலும் அகழ்ந்தபோது அதன் ஒரு மூலையில் பழைய தங்கக் கைத் தொழிற்சாலை ஒன்று இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அங்கு தங்கத்தை உருக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சூளை, தண்ணீர் நிரப்பி வைத்துக் கொள்ளும் மட்பாத்திரம் என்பவற்றின் பகுதிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அபயகிரி வளவின் அகழ்வுகளில் தங்கத்திலான பாதசரம், மோதிரம், தோடு, மாலை என்பன கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்கு அமைவாக விஹாரையின் சிலைகளுக்குத் தங்க முலாம் பூசுதல், பல்வேறு அலங்காரப் பொருள்களை உற்பத்தி செய்தல் என்பவற்றிற்கும் மேற் குறிப்பிட்ட தங்க ஆபரணத் தொழிற்சாலை நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.



உரு 1.22 இரும்பை உருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட சூளை

கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் பின்னர் நாடு முழுவதும் இரும்புப் பாவனை இருந்து வந்துள்ளதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. போர் ஆயுதங்கள், விவசாய உபகரணங்கள் என்பவற்றை உற்பத்தி செய்வதற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் (இரும்பு ஆணி) இரும்புப் பாவனை அத்தியாவசியமானது. ஆதிகாலத்தில் எமது நாட்டிற்குத் தேவையான தங்கம் சிலவேளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. எனினும் இரும்பு உற்பத்தி நாட்டிலேயே இடம் பெற்றுள்ளது.

பலாங்கொடை சமனெலவெவ, சீகிரியின் அலகொலவெவ, தெஹிகஹ எலகந்த ஆகிய பிரதேசங்களில் முற்காலத்தில் எமது நாட்டில் இரும்பு உருக்கப்பட்டவிதம் தொடர்பான தெளிவான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இரும்புத் தாதைக் கொண்ட கற்களைத் தூளாக்கி, மண்ணினால் உருவாக்கப்பட்ட சூளைகளில் இட்டுஅதற்குத் தேவையான வெப்பத்தைப் பிறப்பித்து உருக்கிக் கொண்டுள்ளனர். சமனெலவெவப் பகுதியில் தென்மேற்குப் பருவக் காற்றுக் காலத்தில் இயற்கையாகக் கிடைக்கும் காற்றைப் பயன்படுத்தி சூளையில் உள்ள கரியைத் தொடராக எரியச் செய்துள்ளனர். தெஹிகஹஎலகந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக சூளையை எரியச் செய்வதற்காக ஊதுளையைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு இயற்கையான கற்களில் அடங்கியுள்ள இரும்புத் தாதை சூடாக்கி, சுத்தப்படுத்தி தேவையான இரும்பை உற்பத்தி செய்து கொள்வதற்கான பொருத்தப்பாடான தொழினுட்பத்தை புராதன இலங்கையர் பெற்றிருந்தனர் என்பது இவ்விடயங்களின் மூலம் தெரியவருகிறது.

## 1.3 கட்டிடக்கலையும் கலையாக்கங்களும்

### கட்டிடக் கலை

வாஸ்து சாஸ்திரம் என்பது வீடு, கட்டடம் போன்ற நிர்மாணத்துறை சார்ந்த ஒரு கலையம்சமாகும். மஹிந்த தேரரின் வருகையுடன் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நெருங்கிய உறவினால் இந்தியாவில் அக்காலத்தில் வெற்றிகரமாகக் கையாளப்பட்ட கட்டட நிர்மாண அறிவு இந்நாட்டிற்குக் கிடைக்கப் பெற்றதாகத் தெரிகிறது.

இந்நாட்டில் இன்றுவரை காணப்படுகின்ற கட்டிடக்கலை நிர்மாணங்களில் பெரும்பாலானவை தேவானம்பியதிஸ்ஸ மன்னரின் ஆட்சிக் காலத்திற்குப் பிற்பட்டவையாகும். அவற்றுள் பெரும்பாலானவை சமய நடவடிக்கைகளுக்காகவோ பௌத்த பிக்குகளின் பயன்பாட்டிற்காகவோ கட்டப்பட்டவையாக கருதலாம்.

### கட்டடக்கலை நுட்பங்கள்

இராசரட்டைக் காலத்திற்குரிய கட்டட நிர்மாணங்களை இரண்டாக வகுத்து நோக்கலாம்.

கட்டடங்கள்

சமய சார்புடைய கட்டடங்கள்

1. தாது கோபம்
2. தூபிமனை
3. போதிமனை
4. சிலைமனை
5. விஹாரை, ஆராமைகள்
6. தியானமண்டபம்
7. தானசாலை
8. தேவாலயம்

சமய சார் பற்ற கட்டடங்கள்

1. அரண்மனை
2. கோட்டை
3. வைத்தியசாலை
4. வீடு
5. மலசல கூடம்

## சமயக் கட்டடங்கள்

### தாதுகோபங்கள்

இலக்கிய மூலாதாரங்களின் படி இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது தாது கோபம் தூபாராம ஆகும். மிரிஸவெட்டிய, மகாதூபி அல்லது ருவன்வெலிசாய, அபயகிரி, ஜேதவன எனும் பிரமாண்டமான தாது கோபங்கள் அநுராதபுரத்தில் கட்டப்பட்டன. அநுராதபுரக் காலத்தில் தலைநகருக்கு வெளிப் பிரதேசங்களிலும் பாரிய தாதுகோபங்கள் கட்டப்பட்டுள்ளன. சேருவில, சோமாவதி, திஸ்ஸமஹராம, மெதிரிகிரிய, தீகவாபி, நீலகிரி போன்ற தாதுகோபங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

பொலன்னறுவைக் காலத்திலும் இது போன்ற பெரிய தாதுகோபங்கள் கட்டப்பட்டுள்ளன.



உரு 1.23 மிகிந்தலை கண்டக சைத்தியவின் வாஹல்கட

பொலன்னறுவை கிரிவெஹர, தெமள மகா சாய, தெதிகமை கொட வெஹர, யுதகனாவ தாதுகோபம், ரன்கொத் விஹாரை என்பவற்றை இதற்கான உதாரணங்களாகக் கொள்ளலாம். இந்நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட புகழ்பெற்ற தாதுகோபங்களை அமைத்த மன்னர்கள் வருமாறு:

| காலம் | தூபி | கட்டிய மன்னர் |
|---|---|---|
| அநுராதபுரம் | தூபாராம | தேவானம்பியதிஸ்ஸ |
| | றுவன்வெலிசாய,<br>மிரிசவெட்டி | துட்டகைமுனு<br>துட்டகைமுனு |
| | அபயகிரி | வலகம்பாகு |
| | ஜேதவனாராம | மகாசேன |
| பொலன்னறுவை | கிரிவிகாரை<br>தெமள மகாசாய<br>யுதகனாவ விகாரை<br>தெதிகம கொட விகாரை | மகா பராக்கிரமபாகு |
| | ரன்கொத் விகாரை | நிஸ்ஸங்கமல்ல |

அநுராதபுரத்தின் மத்திய காலம் ஆகும்போது அடித்தளம், முத்தட்டு வளையம், அண்டம், சதுரக்கோட்டம், தேவர் கோட்டம், கலச பீடம், கலச வளையம், கலசம் என்பவை தாதுகோபத்தில் காணப்படும் பிரதான அம்சங்களாகும். மேலும் தாதுகோபத்தின் அழகை மேம்படுத்துவதற்காக அதனை அண்டி நாற்றிசையையும் நோக்கிய வண்ணம் நுழைவாயில்கள் நான்கு கட்டப்பட்டன. இராசரட்டைக் காலத்திற்குரிய மிகச் சிறந்த நுழைவாயில் மிஹிந்தலை கண்டகசைத்தியவின் கிழக்குத் திசையில் கட்டப்பட்டிருந்தது.



உரு 1.24 மெதிரிகிரிய வட்டதாகய

**தூபிமனை**

அளவில் சிறிய தூபிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டிடமே தூபி மனை எனப்படுகிறது. தாதுகோபத்தைச் சுற்றி கற் றூண்களை நட்டு அதன் மீது கம்பு களினாலான கோண வடிவிலான கூரையை அமைத்து தூபி மனை கட்டப்பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற் றுள்ளன. இராசரட்டைக் காலத் திற்குரிய கலைத்திறனான தூபி மனை மெதிரிகிரியவில் அமைக்கப் பட்டிருந்தது. மேலும் தூபாராம, லங்காராமய, அம்பஸ்தல தூபி, திரியாய்தூபி என்பவற்றிலும் தூபி மனைகள் அமைக்கப்பட்டிருந் ததற்கான கற்றூண்களை இன்றும் காணக் கூடியதாய் உள்ளது.

## போதிமனை

இலங்கைக்கு புனித வெள்ளரசு மரக்கிளை கொண்டு வரப்பட்ட பின்னர், அதிலிருந்து உருவாக்கப்பட்ட கன்றுகள் நாட்டின் பல பாகங்களிலும் நடப்பட்டன.



உரு 1.25 நில்லக்ககம போதிமனை

வெள்ளரசு மரத்தின் பாதுகாப்பிற்கும் அலங்காரத்திற்கும் அதனைத் தரிசிக்க வருவோரின் வசதிக்காகவும் அதனை மையமாகக் கொண்டு கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. அதனை போதிமனை என்பர். புராதன அநுராதபுரத்தில் நடப்பட்ட புனித வெள்ளரசு மரத்திற்காக இவ்வாறான போதிமனை ஒன்று அமைக்கப் பட்டது. குருணாகல் மாவட்டத்தில் உள்ள நில்லக்ககம போதிமனை இராசரட்டை நாகரிகத்திற்குரிய கலை அம்சங்களுடன் கூடியதாகும்.

பொதுமக்கள் பிரதிமைகளை பார்ப்பதற்காக அமைக்கப்பட்ட பகுதி மண்டபம் எனவும் அழைக்கப்பட்டது. கிரிபத்வெஹர, விஜயாராம, பங்குலிய, தொலுவில என்பவை இதற்கு உதாரணங்களாகும்.

கந்தகுடி மரபின் முன்னேற்றகரமான ஒன்றாக கெடிகே சிலைமனையைக் குறிப்பிடலாம். அதன் சுவரும் கூரையும் செங்கல்லினாலோ கருங்கல்லினாலோ அமைக்கப்பட்டிருக்கும்.



உரு 1.26 பொலன்னறுவை தூபாராம சிலைமனை

## சிலைமனை

புத்தரின் சிலையை அமைத்து அதனை மழை, வெயில் என்பவற்றில் இருந்து பாதுகாப்பதற்கும் வழிபடவரும் மக்களின் வசதிக்காகவும் சிலைமனைகள் கட்டப்பட்டன. இராசரட்டை நாகரிக காலத்தில் சிலை மனைகளை நிர்மாணிக்கும் போது பல்வேறு மரபுகள் பின்பற்றப்பட்டன. அவையாவன கந்தகுடி மரபு, கெடிகே மரபு, லென்விகாரை மரபு என்பனவாகும். சிலைமனைகளை நிர்மாணிக்கும் புராதன சம்பிரதாயம் கந்தகுடி எனப்படும். கந்தகுடி மரபில் சிலைமனைகளில் சிலைகள் வைக்கப்பட்ட பகுதி 'கர்ப்பகிரகம்' எனப்படுவதோடு

இம்மரபு பொலன்னறுவை யுகத்தில் மகா பராக்கிரமபாகு மன்னரின் காலத்தில் உன்னத நிலையை அடைந்தது. அவரால் கட்டப் பட்ட தூபாராம, லங்காதிலக, திவங்க சிலைமனைகள் கெடிகே மரபு என்பன சிறந்த உதாரணங்களாகும். லென்விஹாரையும் இதே காலத்தில் உருவாக்கப்பட்ட இன்னொரு சிலைமனை மரபாகும். பிரதான சிலை சயன நிலையில் நிர்மாணிக்கப்பட்டிருப்பது இம்மரபில் காணப்படக்கூடிய சிறப்பம்சமாகும். பிதுறங்கல, ஹபெஸ்ஸ, ஹுலங்நுகே, பம்பரகஸ்தலாவ என்பன இந்த யுகத்திற்குரிய குகை விஹாரைகளுக்கு உதாரணங்களாகும்.

## விஹாரை ஆராமை

ஆரம்ப காலகட்டத்தில் இயற்கையான குகைகள் பிக்குமாரின் பாவனைக்கு எடுக்கப்பட்டன. கற்பீலிகளை அமைத்து பொருத்தமான முறையில் உருவாக்கிக் கொள்ளப்பட்ட புராதன குகைகளைப் பல இடங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது. மிஹிந்தலை, வெஸ்ஸகிரி, ரிடிகல, ரஜகல என்பவை அவற்றிற்கு மிகவும் பொருத்தமான உதாரணங்களாகும். பீலிக்குக் கீழே குகையின் முன்புறமாக சுவர் கட்டி மரப்பலகையினால் கதவு, யன்னல் இட்டு அக்குகைகள் மிகவும் முறையாக உருவாக்கப்பட்டிருந்தன. பிற் காலத்தில் புத்த சாசனத்தில் ஏற்பட்ட விருத்தியினால் அரச அனுசரணையுடன் அமைத்து தானம் செய்யப்பட்ட அபயகிரி, ஜேதவன போன்ற பாரிய விஹாரை ஆராமைகளில் பிக்குகள் தங்கியிருந்தனர். அவ்வாறான விஹாராராமைக் கட்டடங்களில் பிரதான சமய ரீதியான கட்டடங்களுக்குப் புறம்பாக பிக்குமாரின் தேவைகளுக்கான பல்வேறு கட்டடங்களும் கட்டப்பட்டன.

## கோவில்கள்



உரு. 1.27 பொலன்னறுவையின் இரண்டாம் இலக்க சிவன் கோவில்

பொலன்னறுவைக் காலத்தில் இந்துக் கோவில்கள் கட்டப்பட்டன. முதலாம், இரண்டாம் இலக்க சிவன் கோவில்கள் இதற்கான உதாரணங்களாகும். சோழ கட்ட டக்கலை மரபுக்கு ஏற்ப கற்களினால் முழுமை யாகக் கட்டப்பட்ட இரண்டாம் இலக்க சிவன் கோவில் மிகவும் பாதுகாப்பான அமைப்புக்கு உதாரணமாகும்.

## சமய சார்பற்ற கட்டடங்கள்

இராசரட்டை நாகரிக காலத்தில் அரச குலத்த வர்கள், பிரபுக்கள், குடிமக்களின் தேவை களுக்காகவும் கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் அரண்மனைகள் கோட்டைகள், வைத்தியசாலைகள், வீடுகள், மலசலகூடங்கள் என்பன உள்ளடங்கும்.

## அரண்மனைகள்

அநுராதபுரத்தில் அரசர்களினதும் உயர் பிரபுக்களினதும் வசிப்பிடங்கள் உள்நகரத் திலேயே கட்டப்பட்டன. அநுராதபுர கால விசேடமான அரண்மனைத் தொகுதி ஒன்றாக சீகிரியாவைக் குறிப்பிடலாம். காசியப்ப மன்னரால் உருவாக்கப்பட்ட இம்மாளிகைத் தொகுதி குன்றொன்றை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டதோடு, நீர்ப்பூங்கா, மாடிப்பூங்கா, நீரகழி, பாதுகாப்பு மதில் என்பவற்றுடன் அலங்காரமாக உருவாக்கப்பட்டிருந்தது.


பொலன்னறுவை யுகத்திற் குரிய புராதன அரண்மனை உள்நகரில் அமைந்திருந்த முதலாம் விஜய பாகுவின் மாளிகையாகும். அந்த யுகத்துக்குரிய விசேட அரண்மனையாகக் குறிப்பிடப் படக்கூடியது பொலன்னறுவை யின் உள்நகரில் அமைக்கப் பட்டிருந்த வைஜயந்த கட்ட டமாகும். வம்சக் கதைகளின்படி ஏழு மாடிகள் கொண்ட அம்மாளிகை முதலாம்

பராக்கிரமபாகு மன்னரின் ஆக்கமாகும். இன்றும் அதன் மூன்று மாடிகளுக்கான ஆதாரமும் மேலே செல்வதற்கான படிக் கட்டுகளையும் காணக்கூடியதாய் உள்ளது. இம்மாளிகையின் அமைப்பை ஒத்ததாக உருவாக்கப்பட்ட சிறிய மாளிகை ஒன்றின் சிதைவுகளை பண்டுவஸ்நுவரையிலும் காணக் கூடியதாகவுள்ளது. அது பராக்கிரமபாகு மன்னர் மாயரட்டையின் அரசனாக இருந்த காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

## வைத்தியசாலைகள்

மெதிரிகிரிய, மிஹிந்தலை, பொலன்னறுவை ஆலாஹன பிரிவெனா ஆகிய இடங்களில் புராதன வைத்தியசாலைகளின் சிதைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. நிலாமுற்றம் ஒன்றுடன் அதனுடன் சம்பந்தப்பட்ட தங்கும் அறைகள், களஞ்சியம், மருந்து உற்பத்திச் சாலை ஆகியவற்றுடன் வைத்தியசாலை அமைந்திருந்தது. கல்லினால் உருவாக்கப்பட்ட மருத்துவ ஓடம் அங்கு காணக்கூடிய விசேட ஆக்கமாகும். பொலன்னறுவை ஆலாஹன பிரிவெனாவின் வைத்திய சாலையில் மருத்துவ உபகரணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.





உரு 1.28
மகா பராக்கிரமபாகுவின் அரண் மனையும் அதன் தோற்றமும் பற்றிய கருத்துப்படம்



உரு 1.29 இடது பக்கப் படத்தில் செதுக்கல் அலங்காரங்களுடன் கூடிய புராதன மலசலகூட இருக்கையும் வலது பக்கப் படத்தில் சல கூடத்தில் இருந்து வெளியாகும் சிறு நீரை நேரடியாக நிலத்திற்கு விடாது சுத்திகரித்து வெளியேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட வடிகட்டும் பானைகள் சிலவும் காணப்படுகின்றன.

## மலசலகூடம்

புராதன காலத்தில் மக்களுடைய சுகநல விடயங்களிலும் முக்கிய கவனம் செலுத்தப் பட்டுள்ளது. அதற்காக முறையான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் சூழல் தொடர்பாக எவ்வளவு கவனம் செலுத்தினர் என்றால் மலசல கூடங்களில் இருந்து வெளியேறும் அசுத்த நீரை அப்படியே பூமியில் விட்டுவிடாது சுத்தமாக்கி வெளியேற்று வதற்காக நிலத்தினுள்ளே வடிகட்டும் பாரிய பானைகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வடிகட்டும் பொருள்களை அதனுள் இட்டு வைத்திருந்தனர் ஆராமைத் தொகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த மலசலகூட இருக்கைக் கற்களின் மீது அலங்கார செதுக்கல் வேலை களையும் செய்திருந்தனர்.

## கலைப்படைப்புகள்

### சிலைகள்

இலங்கையின் கலை நிர்மாணங்களில் சிலை வடித்தல் முக்கியமான இடத்தை வகித்தது. அதில் கணித அளவீட்டு முறைக ளில் கவனம் செலுத்தப்பட்டு கலையம்சத் துடன் கூடிய புத்தரினதும் போதிசத்வரினதும் அரசர்களினதும் வேறு சிலைகளும் உருவாக் கப்பட்டன.

## புத்தர் பெருமானின் சிலைகள்

அநுராதபுர யுகத்தில் புத்தரின் அமர்ந்த, நிற்கும், சயன நிலைகளில் மூவகைச் சிலைகள் உருவாக்கப்பட்டன. இதில் பெரும் பாலானவை தியான, வீராசன முத்திரை களுடனான அமர்ந்த நிலைச் சிலைகளாகும். அநுராதபுரத்தின் சமாதி புத்தர் சிலை, தொலுவில புத்தர் சிலை என்பன இதற்கு உதாரணங்களாகும்.

அநுராதபுர யுகத்திற்குரிய நிற்கும் நிலையிலான புத்தர் சிலைகளில் அவுக்கண, ரெஸ்வெஹெர, மாளிகாவில என்பன முக்கியமானவையாகும். பொலன்னறுவைக் காலத்தில் புத்தர் சிலை நிர்மாணத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை உத்தராராம, கல்விஹாரைச் சிலைகளில் தெளிவாகக் காணலாம். அமர்ந்த, நிற்கும், சயன நிலைச் சிலைகளை அங்கும் காணக்கூடியதாயுள்ளது.



உரு 1.30 தம்பேகொட போதிசத்வ சிலை

## போதிசத்துவர் சிலை

புத்தராகப் பிறப்பதற்கு முன்னைய பிறப்பை போதிசத்துவர் என்பர். இலங்கையில் மகாயானக் கருத்துக்கள் பரவிச் சென்றதைத் தொடர்ந்து போதிசத்துவர் சிலைகளைத் தரிசித்தல் மக்களிடையே பிரபல்யமடைந்தது. ஆகையால் போதிசத்துவர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டன. அநுராதபுர காலத்திற்குரிய உயர்தரத்திலான போதிசத்துவர் சிலையாக தம்பேகொட போதிசத்துவர் சிலையைக் குறிப்பிடலாம். புதுறுவாகல, வெலிகம குஷ்டராஜகல, யடால வெஹர ஆகிய இடங்களிலும் இதுபோன்ற சிலைகள் காணப்படுகின்றன.

## அரசர்களினதும் ஏனையவர்களினதும் சிலைகள்

ருவன்வெலிசாயவின் முற்றத்தில் மன்னர்களான துட்டகைமுனுவினதும் பாதிகாபயனினதும் எனக் கருதப்படுகின்ற இரு சிலைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பொலன்னறுவையில் பராக்கிரம சமுத்திரத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பராக்கிரமபாகு மன்னனினது எனினும் சிலை கலையம்சம் நிறைந்ததொன்றாகும். சில அறிஞர்கள் இது பராக்கிரமபாகுவினது அல்ல என்றும் கபில அல்லது புலஸ்தி முனிவருடைய சிலையாக இருக்கலாம் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## செதுக்கலும் சிற்பக்கலையும்

இலங்கையின் செதுக்கல் கலையும் சிற்பக்கலையும் ஆரம்பகாலத்திலும் இந்தியச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாலும் காலப் போக்கில் இந் நாட்டிற்கே உரிய தனித்துவப் பண்புகளைக் கொண்டு அக்கலைகள் வளர்ச்சியுற்றன. அவ்வாறான சிறந்த கலைப் படைப்பாக சந்திரவட்டக்கல்லைக் குறிப்பிடலாம். சந்திரவட்டக்கல் என்பது கட்டிடத்தினுள் நுழை கின்ற வாயிலின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரைச்சந்திரனின் வடிவைக் கொண்ட கற்செதுக்கலாகும். ஆரம்ப காலத்தில் செதுக்கல்களைக் கொண்டிராத இக்கற்றுண்டும் பிற்காலத்தில் செதுக்கல்களால் அழகுபடுத்தப்பட்டது. அதன் மத்தியில் மலர்ந்த தாமரைப் பூவின் ஒரு பகுதி காணப்படுவதோடு அதைச் சுற்றி சிறிய மலர்க் கொடியிலான வட்டமும் தாமரை மொட்டுக்களுடன் கூடிய



உரு 1.31 வாயில் நிர்மாணங்கள் சந்திரவட்டக்கல், காவற்கல், கொரவக்கல், படிக்கட்டு வரிசை



உரு 1. 32 சந்திர வட்டக்கல்

அன்னபப்ட்சிகளின் வரிசை ஒன்றும் சிங்கம், யானை, குதிரை, எருது எனும் மிருக வரிசையும் முடிவில் தீச்சுவாலை அல்லது பூவிதழ் அலங்காரமும் காணப்படுகின்றன. அநுராதபுர காலத்திற்குரிய கலைத்துவம் மிக்க சந்திரவட்டக் கற்கள் இரண்டு அபயகிரி விஹாரை வளவில் காணக்கூடியதாயுள்ளது.

பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமயச் செல்வாக்குக் காரணமாக சந்திரவட்டக்கல்லில் இருந்து எருதுவின் உருவம் நீக்கப்பட்டது. மேலும் மனங்கவர் சந்திரவட்டக்கல், காவற்கல், கொரவக்கல் ஏனைய வாயில் படிவரிசை சார்ந்த கலை யாக்கங்கள் பல ஒன்று சேர்ந்து இராசரட்டைக்கால கட்டிடங்களின் வாயில்களை அலங்கரித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இசுறுமுனிய காதலர் சிலை, குதிரைத்தலையும் மனித உருவமும் கொண்ட செதுக்கல் கலை வடிவங்கள் உயர் கலைத்திறன் மிக்க படைப்புகளாகக் கருதப்படத்தக்கவையாகும்.

இந்நாட்டில் பாறைகளும் உலோகமும் பயன்படுத்தப்பட்டு பௌத்த, இந்து சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அநுராதபுரத்தில் கல்லில் செதுக்கப்பட்ட புத்தர் சிலைகள் அபயகிரி ஜேதவன விஹாரைகளில் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உலோகத்தால் உருவாக்கப்பட்ட வெஹரகல, அவலோகிதேஸ்வர போதிசத்துவ உருவச் சிலையும் பதுளை உலோக புத்தர் சிலையும் அக்காலத்திற்குரிய மிகச் சிறந்த கலைப் படைப்புகளாகும். பொலன்னறுவைக் காலத்தில் இந்துக் கோட்பாடுகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட சிவன், நடராஜர், பார்வதி, சூரியன் ஆகிய கடவுளர்களின் உலோகச் சிலைகள் காணப்படுகின்றன.

## சித்திரம்

ஆரம்ப காலத்தில் இருந்தே இலங்கையில் சித்திரக் கலை இருந்து வந்துள்ளதாகத் தெரிய வருகிறது. சிதுல்பவ்வ, ஹிந்தகல, கரம்பகல, வெஸ்ஸகிரிய குகைகளிலும் இதுபோன்ற சித்திரங்களின் அடையாளங்கள் கண்டறியப் பட்டுள்ளன. எவ்வாறாயினும் முழுமையான சித்திரங்களைப் பார்க்க முடிவது சீகிரியாவில் ஆகும். அச்சித்திரங்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குரியவையாகும். சீகிரியாவின் கிழக்கு மேற்குப்பகுதியில் கற்குடைவுகள் இரண்டினுள் வரையப்பட்டுள்ளவற்றில் எஞ்சியிருக்கும் சித்திரங்களில் தாமரை, அல்லி, செண்பகம் ஆகிய மலர்களைச் சூடியும், கைகளில் ஏந்தியும் உள்ள பெண் உருவங்களைக் காணமுடிகின்றது. இச்சித்திரங்களில் மஞ்சள், கபிலம், சிவப்பு, நீல நிறங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இப்பெண்களின் உருவங்களால் குறிப்பிடப்படுவோர் யார் என்பதில் அறிஞர்களிடையே வேறுபாடான கருத்துக்கள் நிலவுகின்றன.



உரு 1.33 சீகிரியா சுவரோவியங்கள்



உரு. 1.34 புள்ளிகொட குகைச் சுவரோவியம்

இச்சித்திர மரபு பொலன்னறுவையுகத்தில் விருத்தியுற்றுள்ளது. திம்புலாகல மார வீதிய, புள்ளிகொட ஆகிய இடங்களிலும் பொலன்னறுவை கல்விஹாரை யிலும் திவங்க சிலைமனையிலும் காணப்படுபவை அக்காலச் சித்திரங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.



செயற்பாடு


1. குளத்தின் பிரதான பகுதிகள் உள்ளடங்கிய மாதிரி ஒன்றை ஆக்குக.
2. புராதன பொய்கைகள், நீர்ப்பூங்காக்கள் ஆகியவற்றின் தகவல்களைக் கொண்ட கையேடு ஒன்றைத் தயாரிக்க.
3. எமது முன்னோர் களி, உலோகம் என்பவற்றால் ஆக்கிய உயர்ந்த படைப்புகள் பற்றி வெளிநாட்டில் வாழும் உமது நண்பன் அல்லது நண்பி ஒருவருக்கு கடிதம் ஒன்று வரைக.
4. வகுப்பறையில் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்குப் பொருத்தமான இராச ரட்டை காலத்துக்குரிய கட்டடக் கலை, கலைப்படைப்புகள் பற்றிய படங்க ளையும் தகவல்களையும் சேகரிக்க.

# 2 கண்டி இராச்சியம்

**அறிமுகம்**

பதினைந்தாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இலங்கையின் மத்திய மலை நாட்டில் செங்கடகல நகரை மையமாகக் கொண்டு கண்டி இராச்சியம் உருவானது. பதினாறாம் நூற்றாண்டில் இருந்து இந் நாட்டின் கரையோரத்தில் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டிருந்த போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பிய இனத்தவர்களின் அச்சுறுத்தல் களுக்கு முகம் கொடுத்த வண்ணம் 1815 ஆம் ஆண்டுவரை இந்நாட்டின் சுதந்தி ரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த இராச்சியத்தால் இயலுமானதாக இருந்தது. இப்பாடத்தின் மூலம் இலங்கையின் இறுதி இராச்சியமான கண்டியின் ஆரம்ப வரலாறு, குறிப்பிடத்தக்க அரசர்கள், பொருளியல் பாங்கு, சமய, சமூக நிலைமைகள் கட் டடக்கலை ஏனைய கலைகள் என்பன பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

கண்டி இராச்சியமானது இயற்கைப் பாதுகாப்பு உடைய பிரதேசத்தில் அமைந்துள்ள ஓர் ஆட்சி மையமாகும். மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள கண்டி அல்லது செங்கடகல எனும் நகரை அடிப்படையாகக் கொண்டு இவ்விராச்சியம் தோற்றம் பெற்றது. மலை நாடு, மலையக அரசு, மலையகத் தலைநகர் போன்ற பெயர்களும் இவ்விராச்சியத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கண்டி இராச்சியத்திற்கு மகாவலிகங்கையின் பாது காப்புக் கிடைத்ததோடு உடவத்த, ஹந்தான மலைகளும் அதற்குப் பாதுகாப்பாக விளங்கின. உயர்ந்த நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ளமையால் தாழ்நாட்டுப் பிரதே சங்களில் இருந்து கண்டி இராச்சியத்திற்குள் பிரவேசிப்பது அக்காலத்தில் மிகவும் சிரமமாக இருந்தது. பலன, உன்னஸ்கிரிய போன்ற பாதைகளின் வழியே இந் நகருக்குள் பிரவே சிக்க வேண்டி இருந்தமை அதன் பாதுகாப்பிற் கான இன்னொரு காரணியாக அமைந்தது.



உரு 2.1 பழைய கண்டி நகரம்

## 2.1 கண்டி இராச்சியத்தின் தோற்றம்

ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் கோட்டை இராச்சியத்தை ஆண்டு கொண்டிருந்த போது கண்டிப் பிரதேசம் அதற்கு உட்பட்ட பகுதி யாக இருந்து வந்தது. அம்மன்னனின் கீழ் ஒரு காலத்தில் ஜோதிய இளவரசன் இவ்விராச்சி யத்தின் ஆட்சி அலுவல்களை மேற்கொண்டு வந்தான். அப்போது இவன் மலைநாட்டை சுதந்திரமடையச் செய்வதற்காக ஆறாம் பராக்கிரமபாகு மன்னருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான் எனினும் அது தோல்வியுற்றது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னரின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியம் படிப்படியாகப் வீழ்ச்சியுறத் தொடங்கியது.



உரு 2.2 முதலாம் விமலதர்மசூரிய மன்னன்

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சேனாசம்மத விக்கிரமபாகு என்னும் பிரதானி ஒருவன், மலைநாட்டை கோட்டை அரசில் இருந்து விடுவித்துக் கொண்டு தனி அரசு ஒன்றை உருவாக்கிக் கொண்டான். இதன்படி கண்டி இராச்சியத்தின் முதலாவது மன்னன் சேனாசம்மத விக்கிரமபாகு ஆவான். அடுத்து அவனுடைய மகனான ஜயவீர பண்டார கண்டி இராச்சியத்திற்கு அரசனானான். ஜயவீர பண்டார மன்னனது காலத்தில் கோட்டை இராச்சியமானது கோட்டை, றைகம, சீதாவாக்கை என மூன்று அரசுகளாகப் பிளவுண்டு போனது. இது தொடர்பான விடயம் ஐந்தாம் பாடத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கோட்டை இராச்சியம் பிளவுண்டு போனமையால் கண்டி இராச்சியத்திற்கு மேலும் சுதந்திரமாகச் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக் கேயர் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் கோட்டை இராச்சியத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு படிப்படியாக அதன் அரசியல் நடவடிக்கைகளில் தலையிடத் தொடங்கினர். அக்காலத்தில் கண்டி இராச தானியின் மன்னனான ஜயவீர பண்டார வுடனும் தொடர்புகளை மேற்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் அதில் சாதகமான பலன் கிட்டவில்லை.

ஜயவீர பண்டாரனை அடுத்து அவனது புதல்வனான கரலியத்த பண்டார கண்டி இராச தானிக்கு அரசனானான்.

கரலியத்த பண்டார கண்டி இராசதானிக்கு அரச னானதையிட்டு சீதாவாக்கை ஆட்சியாளன் அதிருப்தி அடைந்திருந்தான். இவ்வாறு தனக்கு சீதாவாக்கை இராச்சியத்தால் ஏற்பட்ட அச்சுறுத்தலால், கரலியத்த பண்டார மன்னன் போர்த்துக்கேயருடன் நட்புக் கொள்ளத் தொடங்கினான். தமது மன்னன் அந்நியரான போர்த்துக்கேயருடன் நட்புறவுடன், அவர் களுடைய கலாசாரத்தை அனுசரித்து செயற் பட்டதையிட்டு மலையகப் பிரதானிகள் சஞ்சல

முற்றிருந்தனர். இதனால் மலைநாட்டுப் பிரதானியான வீரசுந்தர பண்டார, சீதாவாக்கை ஆட்சியாளனான முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்ற உதவி புரிந்தான். முதலாம் இராஜசிங்க மன்னன் மலைநாட்டை ஆக்கிரமித்த போது அதை எதிர்கொள்ள முடியாத கரலியத்த பண்டார தனது மகளான குசுமாசனதேவியுடனும் மருமகனான யமசிங்க பண்டாரவுடனும் மற்றும் அரச குடும்பத்தினருடனும் மன் னாருக்குத் தப்பியோடி, போர்த்துக்கேயரி டம் தஞ்சமடைந்தான். அங்கு குசுமாசன தேவி டோனா கத்தறினா என்றும் யமசிங்க பண்டார டொன் பிலிப் என்றும் பெயர்களைப் பெற்று கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டனர்.

1580 ஆம் ஆண்டளவில் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்துக் கொண்ட முதலாம் இராஜ சிங்க மன்னன் சீதாவாக்கையில் இருந்தவாறு கண்டியையும் ஆட்சி செய்தான். சிறிது காலத்தில் வீரசுந்தர பண்டாரவிற்கும் இராஜசிங்க மன்னனுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உருவாகத் தொடங்கின. அதன் விளைவாக சீதவாக்கை இராஜ சிங்க மன்னனால் வீரசுந்தர பண்டார கொலை செய்யப்பட்டான். வீரசுந்தர பண்டாரவின் மகனான கொணப்பு பண்டார பாதுகாப்பு கருதி போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தான். டொன் ஜுவான் என்ற பெயருடன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிய இவன் போர்த்துக்கேயருக்குச் சார்பாகச் செயற்படத் தொடங்கினான்.

## கண்டி இராச்சிய அரசர்கள்

### முதலாம் விமலதர்மசூரிய மன்னன் (1592 - 1604)

சீதாவாக்கையின் மன்னனான முதலாம் இராஜ சிங்கன் சைவ சமயத்தைத் தழுவிக் கொண்டு, பௌத்த குருமாரில் ஒரு பகுதியினருக்கு எதிராகச்செயற்படத் தொடங்கினான். இதனால் மலையகப் பிரதானிகளிடையே மன்னன் மீது அதிருப்தி ஏற்பட்டது. அச்சந்தர்ப்பத்தைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர், கண்டி இராச்சியத்தில் தமக்குச் சார்பானவர்களை ஆட்சியில் அமர்த்த எத்தனித்தனர்.

போர்த்துக்கேயர் தமது பாதுகாப்பில் இருந்த கரலியத்த பண்டாரவின் மருமகனான டொன் பிலிப்பை அரசனாக்கிக் கொண்டனர். இவனது பாதுகாப்பிற்காக டொன் ஜுவானையும் மலைநாட்டிற்கு அனுப்பி வைத்தனர். டொன் பிலிப் சிறிது காலத்தில் மரணமுற்றான். இதனால் போர்த்துக்கேயர் இவனது இள வயது மகனை மன்னனாக்கி பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்கிக் கொள்ள முயற் சித்தனர். இச்சந்தர்ப்பத்தில் டொன் ஜுவான் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு மீண்டும் பௌத்த சமயத்தை தழுவினான். இதனால் ஆத்திரம் அடைந்த போர்த்துக்கேயர் இவனைப் பழிவாங்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த் திருந்தனர்.

இவன் 1592 ஆம் ஆண்டில் முதலாம் விமலதர்மசூரிய என்னும் பெயரில் கண்டிக்கு மன்னனானமை கண்டி இராச்சிய வரலாற்றில் மிக முக்கியமான ஒரு சம்பவமாகும். அவன் அரசனானமையால் கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயருக்குச் சார்பான அரசு ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் முயற்சி தடைப் பட்டது.

### முதலாம் விமலதர்மசூரிய மன்னனது முக்கியத்துவம்

- 1592 - 1604 வரை முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் கண்டி இராச்சியத்தை ஆண்டான். கரலியத்த பண்டாரனுடைய மகள் டோனா கத்தரினாவை மணந்ததன் மூலம் கண்டி இராச்சியத்திற்கு சட்டபூர்வ அரசனானான்.



உரு 2.3 குருவிட்ட தெல்கமுவ விஹாரையில் புனித தந்தம் மறைத்து வைக்கப்பட்டிருந்த திரிகைக் கல்

- இவன் டோனா கத்தறினாவை மணந்ததன் மூலம் கண்டி இராச்சியத்தில் புதிய அரச பரம்பரை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. செனரத், இரண்டாம் இராஜசிங்கன், இரண்டாம் விமலதர்மசூரியன், வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் எனும் மன்னர்கள் இப்பரம்பரையைச் சார்ந்தோ ராவர்.
- இம் மன்னன் சீதாவக்கை இராச்சியத்தின் ஆதிக்கத்தில் இருந்து கண்டி இராச்சியத்தை விடுவித்துக் கொண்டான். சீதாவாக்கை மன்னன் கண்டி மீது படையெடுத்த போது விமலதர்ம சூரியனே அவனைத் தோற் கடித்தான்.
- போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்கு எதி ராகச் செயற்பட்ட இம்மன்னன் 1594 ஆம் ஆண்டில் தந்துரைப் போரிலும் 1602 ஆம் ஆண்டில் பலனைப் போரிலும் போர்த்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்தான்.
- இம்மன்னன் பௌத்த சமயத்தின் வளர்ச் சிக்காகப் பலநடவடிக்கைகளை மேற்கொண் டான். பர்மாவில் இருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதாவை மீண்டும் நடத்தியமை, லங்காதிலக, கடலாதெனிய விகாரைகளைப் புனரமைத்தமை இதற்கு உதாரணங்களாகும்.
- பாதுகாப்புக் கருதி சீதாவாக்கையின் தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த தந்ததாதுவை கண் டிக்கு எடுத்து வந்து தலதாமாளிகையில் பிரதிஸ்டை செய்தான்.

### செனரத் மன்னன் (1604 - 1635)

முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் பின்னர் அவனுடைய ஒன்றுவிட்ட சகோதரனான செனரத் கண்டி இராச்சியத்திற்கு மன்னனா னான். இவன் யுத்தத்தை விட சமாதானத்தை விரும்பிய ஒருவனாவான். இதனால் 1617 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயருடன் சமா தான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டான் இவனுடைய காலத்திலேயே கெப்டன் ஜெனரலான கொன்ஸ்தாந்தைன் தசா பெரும் படை ஒன்றுடன் ஊவா பிரதேசத்தை ஆக்கி ரமித்தான். மன்னனின் மகனான மகா ஆஸ்தான குமாரனின் தலைமையில் வந்த

படை ரந்தெனிவெலையில் இவர்களுடன் பெரும் போரில் ஈடுபட்டது. இறுதியில் போர்த்துக்கேயப் படை படுதோல்வியுற்றது.

### இரண்டாம் இராஜசிங்க மன்னன் (1635 - 1687)

செனரத் மன்னனை அடுத்து அவனது மகனான இளவரசன் மகா ஆஸ்தான குமாரன், இரண்டாம் இராஜசிங்கன் என்னும் பெயருடன் கண்டி இராச்சிய சிம்மாசனத்தில் அமர்ந்தான். புகழ் பெற்ற மன்னனான இவன் போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து வெளியேற்றி விடுவதைத் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தான்.



உரு 2.4 இரண்டாம் இராஜசிங்க மன்னன்

### இம் மன்னனது ஆட்சியின் முக்கியத்துவம்

- இவன் போர்த்துக்கேயரை வெளியேற்று வதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற நடவடிக்கைகளை மேற்கொண்டான். இதற்கமைய 1638 ஆம் ஆண்டில் இவனுக் கும் ஒல்லாந்தருக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்விருசாராரும் ஒன்று சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்டு 1658 ஆம் ஆண்டில் இந்நாட்டில் இருந்து அவர்களை வெளி யேற்றி விட்டனர்.
- இரண்டாம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தின் ஆளுகைப் பிரதேசத்தை விஸ்தரித்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டான். போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றி முழு நாட்டிற்கும் அரசனாகும் நோக்கம் அவனுக்கு இருந்தது. ஆனால் போர்த்துக் கேயரிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களை ஒல்லாந்தர் தமது ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தமையால் அந்நோக்கத்தை அவனால் அடைந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. என்றாலும் அதுவரை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பெரும் பிரதேசத்தை இம்மன்னன் கண்டி இராச்சி யத்துடன் இணைத்துக் கொண்டான்.
- இவனுடைய காலத்தில் தியோ கு த மேலோ கஸ்ரோ எனும் போர்த்துக் கேய கெப்டன் ஜெனரல் 1638 ஆம் ஆண்டில் பெரும் படையுடன் கண்டி மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டான். கன்னொறுவை என்னுமிடத்தில் இப் படையைச் சுற்றி வளைத்துக் கொண்ட இரண்டாம் இராஜசிங்கனின் படை, பெருந் தாக்குதலைத் தொடுத்தது. இப்போரில் போர்த்துக்கேயப் படை படுதோல்வியுற்றதுடன் மன்னன் பெரு வெற்றியை ஈட்டினான்.
- 1635 ஆம் ஆண்டில் செனரத் மன்னனின் மரணத்தை அடுத்து பதவிக்கு வந்த இவன் 1687 வரை கண்டி இராச்சியத்தை ஆட்சி புரிந்தான். இதற்கமைய கண்டி இராச்சியத்தின் வரலாற்றிலேயே அதிக காலம் ஆட்சி செய்த மன்னன் இவ னாவான்.

### இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் (1687 - 1707)

- இரண்டாம் இராஜசிங்க மன்னனை அடுத்து அவனின் மகனான இரண்டாம் விமலதர்மசூரியன், கண்டி இராச்சியத்தின் மன்னனானான். இவன் மிகவும் அமைதியான ஆட்சியாளன் ஆவான்.
- கரையோரத்தை ஆட்சி புரிந்து கொண்டிருந்த ஒல்லாந்தருடன் நட்புறவுடன் நடந்து கொண்டமை விசேடமாகக் குறிப்பிடத் தக்கதாகும்.
- பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்காகப் பர்மாவில் இருந்து குருமாரை வரவழைத்து உபசம்பதா வைபவத்தை நடத்துவித்தான்.
- தலதா மாளிகையை மும்மாடிகள் கொண்டதாக விஸ்தரித்தான்.

### ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் (1707 - 1739)

- இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் 1707 இல் மரணமடைந்ததை அடுத்து அவனது மகனான வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் கண்டி இராச்சியத்தின் மன்னனானான்.
- கண்டி இராச்சிய மன்னர்களுள் பலவீனமானவனாகக் கருதப்படும் இவனது காலத்தில் பிரதானிகளின் அதிகாரம் வளர்ச்சியுற்றது.
- இம் மன்னனும் தனது தந்தையையும் பாட்டனையும் போன்று தென்னிந்திய இளவரசி ஒருத்தியையே மணந்து கொண்டான். இவனுக்கு வாரிசு இன்மையால் நாயக்க வம்சத்தவர்கள் மலை நாட்டின் அரசுரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

### ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன் (1739 - 1747)

- கண்டி இராச்சியத்தின் முதலாவது நாயக்க வம்ச மன்னன் இவனாவான். இவன் வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னனின் நாயக்கவம்ச மனைவியின் சகோதரனாவான்.
- ஸ்ரீ விஜயராஜசிங்க மன்னன், வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரின் பௌத்த சமய சேவைகளுக்கு உதவிகளைப் புரிந்தான். அவரின் ஆலோசனைப்படி பர்மாவில் இருந்து உபசம்பதாவிற்காக பௌத்த பிக்குமாரை வரவழைக்க நடவடிக்கை எடுத்தபோதும் அது கைகூடவில்லை.

### கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் (1747 - 1782)

ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னனுக்கு வாரிசு இன்மையால், அவனது மரணத்தை அடுத்து இவனது மனைவியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் மலைநாட்டிற்கு மன்னனானான். அப்போது அவனுடைய வயது 16 ஆகும்.

இம் மன்னன் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரிடம் பௌத்த சமயம் பற்றிக் கற்றுக் கொண்டான். இதனால் பௌத்த சமயம் பற்றிய அறிவு அவனுக்கு இருந்தது. இதனால் கண்டி மக்கள் இம் மன்னன் மீது மிகவும் மரியாதை செலுத்தினர்.

இவனது காலத்தில் பௌத்த சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டமையால் கண்டி இராச்சிய வரலாற்றில் இவனுடைய காலம் விசேட முக்கியத்துவத்தைப் பெறுகிறது. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் மன்னனுக்குத் தேவையான வழிகாட்டலை மேற்கொண்டு பௌத்தசமய மறுமலர்ச்சியின் முன்னோடியாக செயற்பட்டார்.




உரு 2.5 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன்

கண்டி இராச்சிய மன்னர்கள் யுத்த நடவடிக் கைகளுக்கு முதலிடம் கொடுத்து செயற்பட வேண்டிய நிலையை ஐரோப்பியர் தோற்று வித்திருந்ததினால், இம்மன்னன் ஆட்சிக்கு வரும் போது பௌத்த மதத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. உபசம்பதா அந்தஸ்தைப் பெற்றிருந்த குருமாரை நாட்டில் காண்பதே அரிதாக இருந்தது. இதனால் சரணங்கர தேரரின் ஆலோசனைப்படி மன்னன் ஒல்லாந்தரிடம் கப்பலைப் பெற்று சீயம் நாட்டிற்குத் தூதுக் குழு ஒன்றை அனுப்பி உபாலி தேரர் உட்பட சமய குருமாரை வரவழைத்து 1753 ஆம் ஆண்டு உபசம்பதா வைபவத்தை நடத்து வித்தான். அன்றிலிருந்து இன்றுவரை காணப்படும் சியம் நிக்காய எனும் சமயப் பிரிவு இக்காலத்திலேயே ஆரம்பமானது. அத்தோடு சரணங்கர தேரருக்கு மன்னன் உயர்வான 'சங்கராஜா' பதவியை வழங்கினான். மேலும் மலைநாட்டிலும் கரையோரப்பகுதிகளிலும் அழிவுற்றிருந்த விகாரைகளையும் தாதுகோபங்கள் பல வற்றையும் புனரைமப்புச் செய்வித்தான்.

தம்புள்ளை விகாரை அவ்வாறு புனரமைக் கப்பட்ட ஒன்றுக்கு உதாரணமாகும்.


கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் இந்து சமயத்தவனாக இருந்த போதிலும் வருடாந்தம் பெரஹராவை நடத்து வதற்கு உதவி புரிந்ததோடு அதில் தேவாலயங் களினது பெரஹராவையும் இணைத்து வெகு கோலாகலமாக அவற்றை நடத்து வித்தான். அத்தோடு சரணங்கரதேரரின் சமய, கல்வி நடவடிக்கைகளுக்கும் உதவி புரிந்தான்.

இந்நாட்டின் கரையோரப் பிரதேசத்தை ஆண்டு வந்த ஒல்லாந்தரால் கண்டி இராச்சியத்திற்கு ஆபத்து நேரலாம் எனக் கருதி அவர்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தான். மன்னனின் வேண்டுகோளின்படி ஜோன் பைபஸ் என்ற தூதுவன் 1762 ஆம் ஆண்டில் கண்டிக்கு வந்து மன்னனைச் சந்தித்தான். என்றாலும் அத்தூதினால் சாதக மான விளைவு ஒன்று ஏற்படவில்லை. அரசன் ஆங்கிலேயரின் உதவியை நாடுவதை ஒல்லாந்தர் அறிந்து கொண்டமையால் கண்டி இராச்சியத்தின் மீது ஒல்லாந்தரின் அச்சுறுத்தல் அதிகரித்தது. அதன் விளைவாக ஒல்லாந்தர் 1765 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டனர். எனினும் அவர்களது நோக் கத்தை அடைந்து கொள்ள முடியவில்லை. இதனால் தொடர்ந்தும் ஒல்லாந்தரின் அச்சு றுத்தல் ஏற்பட்டு வந்தமையால் நீண்ட கால சமாதானத்தை நாடிய மன்னன் 1766 இவ்வொப்பந்தத்தின் மூலம் ஒல்லாந்தரின் பிரதான நோக்கமாக அமைந்தது கரையோரப் பிரதேசத்தை தமதாக்கிக்கொள்வதும் கண்டி இராசதானி வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளை துண்டிப்பதுமே ஆகும்.



உரு 2.6 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் சரணங்கர சங்கராஜ தேரருக்கு விசிறி வழங்குதல்

எனினும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்த ஒல் லாந்தரால் இயலவில்லை.



உரு 2.7 தம்புள்ளை விகாரை

### இராஜாதி இராஜசிங்க மன்னன் (1782 - 1798)

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்ன னின் பின்னர் அவனது சகோதரன் இராஜாதி இராஜ சிங்க என்ற பெயருடன் அரசனானான். இவன் பௌத்த சமயத்தில் பற்று மிக்கவனாயிருந்தான். ஆங்கிலேயர், இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடம் இருந்து கைப் பற்றிக் கொண்டது இம் மன்னனது காலத்திலேயாகும். 1798 ஆம் ஆண்டில் இவன் மரணமடைந்த போது நேர டியாக அரசுரிமைக்கு ஒரு வரும் இருக்க வில்லை.

### ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் (1798 - 1815)

இராஜாதி இராஜசிங்க மன் னனின் பின்னர் கண்டியின் அரசுரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக இருவர் போட்டியிட்டனர். கண்ணு சாமி, முத்துசாமி எனப்பட்ட அவ்விருவருள் கண்ணு சாமிக்கு அப்போதைய பிரதம பிரதானியான பிலிமத்தலா வையின் உதவிகிட்டியது. அதற்கமைய பிலிமத்தலா வையின் தலையீட்டினால் இளவரசனான கண்ணுசாமி 1798 ஆம் ஆண்டில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க எனும் பெயருடன் கண்டி இராச்சியத்தின் அரச னா னான். இளவரசன் முத்துசாமி பாதுகாப்புக் கருதி ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தான்.



உரு 2.8 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன்

தனது ஆதரவுடன் அரசனான கண்ணுசாமியை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் பிலிமத்தலாவைக்கு இருந்த தாகத் தெரியவருகிறது. இம்மன்னன் ஆரம் பத்தில் பிலிமத்தலாவையின் நடவடிக்கை களை ஏற்றுக் கொண்டாலும் காலப்போக்கில் உறவினர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தொடங்கினான். இதனால் மன்னனுக்கும் பிலிமத்தலாவைக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் பிலிமத் தலாவை ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றுக்கொண்டு மன்னனுக்கு எதிராகச் செயற்படுவதில் ஈடுபட்டாலும் அம்முயற்சி தோல்வியில் முடிவுற்றது.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்யும் போது பிரித்தானியரின் முதலாவது ஆளுநரான பிறட்றிக் நோத் கரையோரத்தை ஆண்டு கொண்டிருந்தான். ஆளுநர் நோத்துக்கு கண்டி இராச்சியத்தினரின் போர் ஆற்றலும் போர் முறைகளும் பற்றிய போதிய தெளிவு இருக்கவில்லை. எனினும் 1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியம் மீது படையெடுத்து தனது பாதுகாப்பில் இருந்த முத்துசாமியை அரச னாகப் பிரகடனப்படுத்தினான். எனினும் பொதுமக்களுடைய ஆதரவு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனுக்குக் கிடைத்தமையால் அவ்வாக்கிரமிப்பு கைகூடவில்லை. இந் நிலையில் மீண்டும் ஆட்சியைப் பெற்றுக் கொண்ட மன்னனால் முத்துசாமிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் 1798 - 1815 வரை கண்டியை ஆட்சி செய்தான்
- தலதா மாளிகைக்கு மனங்கவர் பத்தி ரிப்பு என்று அழைக்கப்படும் எண்கோண மண்டபத்தைக் கட்டினான்.
- தலதா மாளிகைக்கு முன்னால் பாற்கடல் என அழைக்கப்படும் தடாகத்தை நிர் மாணித்ததான்.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னரது ஆட்சியின் இறுதிக்காலப் பகுதியில் கண்டி இராசதானியில் அரசியல் பிரச்சினை ஒன்று உருவானது. அதன் விளைவாக மன்னனுடன் பிரதானிகளுக் கும் குடிமக்களுக்கும் இடையிலிருந்த நல் லுறவு சீர்குலைந்தது. கண்டி இராச்சியத்தி லேயே மன்னன் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டான். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்ட ஆங்கிலேய ஆளுநர் ரொபட் பிரௌன்றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.


இக்கால கட்டத்தில் கண்டி இராச்சியத்தின் பிரதம பிரதானியான எஹலபொலைக்கும் மன்னனுக்கும் இடையே மோதல் ஒன்று உருவாகியது. இதனால் எஹலப்பொலை ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்திருந்தான். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னுக்கு எதிராக ஆங்கிலேயர் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கு எஹலபொலையின் உதவி கிட்டியது. கண்டி இராச்சிய மக்களில் பெரும்பாலானோர் மன்னன் மீது அதிருப்தியுற்றிருந்தமையால் இம்முறை ஆங்கிலேயர் கண்டிக்கு வருவதைத் தடுக்க யாரும் முன் வரவில்லை. இதனால்

எவ்வித இடையூறுமின்றி இலகுவாகக் கண்டி நகரினுள் ஆங்கிலேயர் பிரவேசித்தனர். இந் நிலையில் அரண்மனை யில் இருந்து தப்பிச் சென்று மெதமகநுவரை யில் உள்ள வீடு ஒன்றில் ஒழிந்திருந்த மன்னனை கண்டி இராச்சிய மக்களே கண்டு பிடித்து ஆங்கிலே யரிடம் ஒப்படைத்தனர். இதனால் எந்தவொரு ஐரோப்பியரும் கண்டி இராச்சியத்தில் அடையப் பெறாத வெற்றியை ஆங்கிலேயரால் அடைய முடிந்தது. பின்னர் ஆளுநர் பிரௌன்றிக் கண்டி இராச்சிய பிரதானிகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டான். 1815 மார்ச் 2 ஆம் திகதி கையொப்பம் இடப்பட்ட அது 'கண்டி ஒப்பந்தம்' என்று பிரபல்யமானது. இவ்வொப்பந்தத்திற்கு அமைய கண்டி இராச்சியம்ஆங்கிலேயரின்ஆட்சிக்குட்பட்டது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் உட்பட நாயக்க வம்சத்தினருக்கு கண்டி இராச்சிய அரியாச னத்தின் மீது இருந்த சகல உரிமைகளும் இல்லாதொழிக்கப்பட்டது. இவ்வாறு கண்டி இராச்சிய அரசின் சுதந்திரம் இல்லாமற் போனதோடு முழு இலங்கைத்தீவும் பிரித் தானியரின் கீழ் குடியேற்ற நாடானது.

பிரித்தானியரால் கைது செய்யப்பட்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் ஆங்கிலேயரால் இந்தியாவின் வேலூருக்கு நாடுகடத்தப் பட்டான்.

## 2.2 பொருளாதார முறை

கண்டி இராச்சியத்தின் பொருளாதார முறை யானது விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஆகிய 3 துறைகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இப் பொருளாதாரம், பிர தானமாக சுயதேவைப் பொருளாதாரமாக காணப்பட்டமை விஷேட அம்சமாகும்.



உரு 2.9 ஏற்றுமதிக்காக கறுவாப் பட்டைகளை கட்டுகளாக்குதல்

### விவசாயம்

இந்நாட்டின் பாரம்பரிய வாழ்க்கை முறை யான விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை ஒன்று கண்டி இராச்சிய காலத்திலும் இருந்து வந்தது. கண்டி இராச்சிய காலத்தில் ஈரவலயப் பிரதேசங் களில் வேகமாக சனத்தொகை வளர்ச்சியுற்று வந்தது. இப்பிரதேசத்திற்கு வருடம் முழுதும் பரவலான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றமை யால் உலர் வலயத்தைப் போல் குளங்கள், அணைக்கட்டுகளைக் கட்டி நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும் தேவை எழவில்லை. கண்டியை அண்மித்து மலைப் பிரதேசங் கள் இருந்தமையால் படிக்கட்டுமுறையில் அமைக்கப்பட்ட வயல்களில் மழை நீரால் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவது பொது வான தன்மையாகும். கண்டி இராச்சியத்தின் தாழ்நிலப் பிரதேசங்களிலும் இதே போன்று மழைவீழ்ச்சியை நம்பியே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

நெற்செய்கையுடன் சேனைப் பயிர்ச் செய்கை யும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. குரக்கன், இறுங்கு, எள், தினை ஆகிய பயிர்கள் சேனைகளில் பயிரிடப்பட்டன. இவற்றோடு

பலாக்காய், ஈரப்பலாக்காய், கிழங்கு வகை, மரக்கறிகள், பழவகைகள், பாக்கு, மிளகு, ஏலம், சாதிக்காய், கராம்பு போன்றவை வீட்டுத் தோட்டச் செய்கையாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. பாலைப் பெற்றுக் கொள்வதற்காகவும் விவசாய, போக்குவரத்து நடவடிக்கைகளுக் காகவும் மாடுகள் வளர்க்கப்பட்டன.

## வர்த்தகம்

கண்டி இராச்சியத்தில் உள்நாட்டு வியா பாரம் போன்றே வெளிநாட்டு வியாபாரமும் இடம்பெற்று வந்தது. கரையோரப் பிரதேச உற்பத்திகள், மலையகப் பிரதேசங்களிலும், மலையகப் பிரதேச உற்பத்திகள் கரையோரப் பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்பட்டன.

வர்த்தகத்தின் போது நாணயங்கள் பரிமாறப் பட்டதோடு பண்டமாற்று முறையும் இருந்து வந்தது. மலைநாட்டிற்கும் தாழ் நிலப்பகுதிகளுக்கும் இடையே அமைக்கப் பட்டிருந்த கடவைகளின் ஊடே வர்த்தகப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. கடவை எனப்படுவது கண்டி இராச்சிய எல்லைக்கும் ஒல்லாந்தரின் ஆட்சி எல்லைக் கும் இடையில் காணப்பட்ட காவல் நிலையங் களாகும்.

கண்டி இராச்சியத்தில் வெளிநாட்டு வியா பாரம் அரசனின் ஏகபோக உரிமையாக இருந்து வந்தது. கரையோரத்தில் ஆட்சி செய்த ஐரோப்பியருடன் அரசன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தான். இந்தியாவுக் கும் கண்டி இராச்சியத்திற்கும் இடையிலும் வர்த்தகம் இடம்பெற்று வந்தது.

**கண்டி இராச்சிய காலத்தில் பண்ட மாற்றுச் செய்யப்பட்ட வர்த்தகப் பொருள்கள்**

| ஏற்றுமதிப் பொருள்களும் விலங்குகளும் | இறக்குமதிப் பொருள் களும் விலங்குகளும் |
|---|---|
| கறுவா | குதிரை |
| பாக்கு | புடைவை |
| மிளகு | மட்பாண்டம் |
| யானையும் யானைத் தந்தமும் | பீங்கான் பாத்திரங்கள் |
| முத்தும் மாணிக்கமும் | வாசனைப் பொருள்கள் |
| வெற்றிலை | கருவாடு |
| ஏலமும் கராம்பும் | |
| சாதிக்காய் | |
| தேன், மெழுகு | |

## கைத்தொழில்

கண்டி இராச்சிய பொருளாதாரத்தில் விவசா யத்தையும் வர்த்தகத்தையும் அடுத்து கைத் தொழில் முக்கியமான ஓரிடத்தைப் பெற்றி ருந்தது. நாட்டின் தேவைக்கான கைத்தொழில் உற்பத்திப் பொருள்கள், நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளப் பட்டன. இதற்காக குலத்தை அடிப்படையாகக் கொண்ட பரம்பரையாகத் தொழில் புரிவோர் காணப்பட்டனர். அவர்கள் பரம்பரையாக அத்தொழில் தொடர்பான அறிவைக் கொண்டிருந்த குழுவினராவர். களிமண்ணினாலும் செம்பு, பித்தளை, இரும்பு உலோகங்களினாலும் பல்வேறு பொருள்களையும் உபகரணங்களையும் உற்பத்தி செய்தனர். இதற்காக அந்தந்த தொழில் புரிவோரைக் கொண்ட கிராமங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அத்தொழில்களைப் புரிந்தோரின் குழுக்களுக்குத் தலைமை தாங்குவோரும் இருந்து வந்தனர். உற்பத்திப் பொருள்களை மெருகேற்றுவதற்கு அரக்கை உற்பத்தி செய்தனர். இரும்பு உற்பத்தி களுக்கு கொத்மலைப் பிரதேசமும் செம்பு உற்பத்திகளுக்கு கிரிவவுல பிரதேசமும் பன்புல்லினால் இழைக்கும் பொருள்களுக்கு தும்பறைப் பிரதேசமும் பிரசித்தி பெற்றி ருந்தன.

## 2.3 கண்டி இராச்சிய சமூக அமைப்பு

கண்டி இராச்சிய காலத்தில் இருந்து வந்த கிராமிய சமூகம் சுயதேவைப் பூர்த்தி அடைந்ததாக இருந்தது. ஒவ்வொரு குலத்திற்கும் தொழில் பிரிவினருக்கும் வெவ்வேறு கிராமங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குடிமக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாவர். ஏனைய தொழில் புரிவோருடன் இவர்களுக்கு நல்லுறவு நிலவி வந்தது. அன்னியோன்னியமான ஒன்றுபட்ட புரிந்துணர்வுடன் கூடிய சமூகப் பாதுகாப்பு நிலவியது. இச்சமூகத்தில் மதகுருமார், பிரபுக்கள், குடிமக்கள் என மூன்று வகுப்புகள் நிலவி வந்தன. பிரபுக்கள் சமூகத்தில் முக்கியமான சக்தியாகத் திகழ்ந்தனர். அரசனைத் தவிர நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் பிரதானிகளாவர். இவர்கள் பிரபுக்கள் என்றும் குறிப்பிடப்பட்டனர். சாதாரண மக்களிடையே விவசாயிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள் என்று வேறுபட்ட தொழில்களைப் புரிந்த குழுவினரும் உள்ளடங்குவர்.

மலையக சமூகத்தில் குடும்ப அலகு மிகுந்த பலம் வாய்ந்ததாக இருந்து வந்தது. தந்தையின் பின்னர் சொத்துக்கள் பிள்ளைகளுக்குச் சொந்தமாகும் தந்தையை முதன்மையாகக் கொண்ட இந்த சமூக முறைமை தந்தை வழிச் சமூகம் எனப்பட்டது.

#### கண்டிய சமூகத்தின் திருமணமுறைகள்

தீக திருமணம் : மணமகளை மணமகன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கேயே வாழ்வது

பின்ன திருமணம் : மணமகன் மணமகளின் வீட்டிலேயே தங்கியிருந்து வாழ்வது.

இதற்குப் புறம்பாக சகோதரர்கள் சிலர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழும் முறையும் மிகக் குறைந்த அளவில் இருந்து வந்தது. விவசாய சமூகத்தில் சொத்துக்கள் பிரிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு இவ்வாறான திருமணமுறை வழக்கத்தில் இருந்ததாக அறிய முடிகிறது.

## 2.4 கட்டிடக் கலையும் கலைநுட்பங்களும்

கம்பளை, கோட்டை இராச்சிய காலங்களில் நிலவிய கட்டிடக்கலை முறை கண்டி இராச்சிய காலத்திலும் தொடர்ந்து பேணப்பட்டு வந்தது.



உரு 2.10 எம்பக்க தேவாலய மரத்தூண்



உரு 2.11 எம்பக்க தேவாலயம்

அங்கு கட்டப்பட்ட கட்டடங்களுள் சமய ரீதியான கட்டடங்கள் முக்கியத்துவம் பெற்றன. தலதா மாளிகை, எம்பக்க தேவாலயம், லங்காதிலக விகாரை, இந்துக்

கோவில்கள் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். கண்டி இராச்சிய காலத்தில் தூண்களின் மீது விகாரைகள் அமைக்கப்படும் மரபு ஒன்று இருந்து வந்தது. நிலத்தின் மீது மரத்தூண்களை நட்டு அதன்மீது கட்டடத்தைக் கட்டுவர். அவ்வாறமைக்கப்படும் விகாரைகள் இவ் விகாரை எனப்படும். கறையான் போன்றவை மரத்தூண்களை அரித்து கட்டடம் சிதைவுறுவதைத் தவிர்ப்பதற்காக மண்ணின் மீது கற்றூண்களை நட்டு அவற்றுடன் மரத் தூண்களைப் பொருத்தி இவ் விகாரை கட்டப்பட்டது. மெதவலையில் இன்றும் இது போன்ற விகாரை ஒன்றுள்ளது.



உரு 2.12 மெதவல டெம்பிட விகாரை

கண்டி இராச்சிய காலத்திற்கு உரிய விகாரைகளின் சுவரோவியங்கள், மரச் செதுக்கல்கள் சிலைகள் என்பன மூலம் அக்காலத்தில் நிலவிய கலைத்திறன்கள் பற்றி விளங்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## 2.5 கண்டி இராச்சிய ஓவியக்கலை


கண்டி இராச்சிய காலத்தில் வெலிவிட்ட ஸ்ரீ சங்கராஜ தேரரால் ஏற்படுத்தப்பட்ட மறுமலர்ச்சியால் பௌத்த சமயத்தின் பண்பை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் ஊடகமாக ஓவியக் கலை கையாளப்பட்டது.

**அக்கால ஓவியக் கலையில் காணப்பட்ட சிறப்பான பண்புகள்**

- கற்றோர், கல்லாதோர் ஆகிய அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடியவகையில் ஓவியங்கள் வரையப்பட்டமை.
- சுவர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து நீண்ட கதைகளைப் படிமுறையாக முன்வைக்கும் ஓவியங்கள் வரையப்பட்டமை.
- ஒவ்வொரு ஓவியச் சட்டகத்தின் கீழும் கதையம்சங்கள் சுருக்கமாகப் பெயரிடப் பட்டுள்ளமை.
- வெற்றிடங்களை நிரப்புவதற்கு மலர்கள் வரையப்பட்டுள்ளமை.
- மனிதர்கள், பிராணிகள், தாவரங்கள் ஆகிய உருவங்களில் சரியான அளவீடு பேணப்படாமை.



உரு 2.13 லங்காதிலக விகாரை



உரு 2.14 கண்டிக் காலத்திற்குரிய ஓவியமொன்று

- தாவரங்கள் கனியங்கள் ஆகியவற்றிலிருந்து நிறங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையும் சிவப்பு நிறத்தை அதிகளவில் பயன்படுத்தியிருந்தமையையும் காணக் கூடியதாயிருத்தல்.
- வெஸ்ஸந்தர, தேலபத்த, தஹம் பொத ஆகிய ஜாதக நூல்களில் இருந்து பெறப்பட்ட ஜாதகக் கதைகளை ஓவியங்களாக வரைந்திருந்தமை.
- இன்றும் தம்புள்ள, தெகல் தொருவ, தலதா மாளிகை, முல் கிரிகல ஆகிய இடங்களில் கண்டிக்கால ஓவியங்களைப் பார்வையிடக் கூடியதாயுள்ளமை.

செயற்பாடு

1. கண்டி மன்னர்கள் ஆற்றிய பணிகளின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| மன்னர்கள் | முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் | இரண்டாம் இராஜசிங்க மன்னன் | கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் | ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் |
|---|---|---|---|---|
| பணிகள் | | | | |

2. பின்வரும் படங்களை அவதானித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1. இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன?
2. இது எங்கு அமைந்துள்ளது?
3. இதனை அமைத்த மன்னன் யார்?
4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனால் இக்கட்டடத்திற்கு சேர்க்கப்பட்ட புதிய அம்சம் எது?



1. இக் கட்டடத்தின் பெயர் என்ன?
2. இதன் விசேட அம்சம் என்ன?
3. இக்கட்டடம் அமைந்துள்ள இடத்தின் பெயர் என்ன?

# 3 ஐரோப்பிய மறுமலர்ச்சி

**அறிமுகம்**

மறுமலர்ச்சி என்பதன் கருத்து மீண்டும் மலர்தல் என்பதாகும். பண்டைய கிரேக்க - உரோம நாகரிகம் மீண்டும் புத்துயிர் பெறுதல் எனும் கருத்தில் ஐரோப்பிய வரலாற்றில் மறுமலர்ச்சி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்கமைய 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16 ஆம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் கல்வி, சமயம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. மறுமலர்ச்சிக்கான காரணங்கள், கல்வி வளர்ச்சி, சித்திரம், சிற்பம், கட்டிடக் கலை என்பவற்றின் வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், மெய்யியல் போன்ற துறைகளின் எழுச்சி என்பன பற்றி இந்த அத்தியாயத்தில் விபரிக்கப்படுகிறது.


## 3.1 மறுமலர்ச்சியின் பின்னணி

மறுமலர்ச்சி என்பது மீண்டும் மலர்தல் எனும் கருத்துடைய சொல்லாகும். 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் கலை, விஞ்ஞானத் துறையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களை அறிமுகம் செய்வதற்கு வரலாற்று ஆய்வாளர்கள் மறுமலர்ச்சி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். ஐரோப்பாவில் ஏற்பட்ட இம்மறுலர்ச்சியானது முதன்முதலில் இத்தாலியிலேயே ஆரம்பமாகியது. இது உலக வரலாற்றை மாற்றியமைப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் புராதன காலத்தில் உயர் நிலையில் இருந்த கிரேக்க, உரோம நாகரிகம் பற்றி தரம் 7 இல் நீங்கள் கற்றுள்ளீர்கள். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உரோம நாகரிகம் வீழ்ச்சியடைந்ததும் அதுவரை ஐரோப்பாவில்



உரு 3.1 இத்தாலியின் நகரம் ஒன்று





உரு 3.2 ஜோஹன்னஸ் கூடன்பேர்க்கும் மற்றும் அவரது அச்சு இயந்திரமும்

நிலவி வந்த புராதன யுகம் முடிவுற்றது. அதன் பின்னரான ஆயிரம் ஆண்டுகள் (கி.பி. 500 - 1500) ஐரோப்பாவின் மத்திய காலம் என அழைக்கப்படுகிறது.

மத்திய காலத்தின் இறுதியில் ஐரோப் பியரிடையே பண்டைய கிரேக்க, உரோம நாகரிகம் தொடர்பாக அதிக ஆர்வம் ஏற்படலாயிற்று. எனவே கிரேக்க, உரோம நாகரிகம் தொடர்பான நூல்களைக் கற்றல், அந் நாகரிகங்களுடன் தொடர்புடைய கிரேக்க இலத்தீன் மொழிகளைக் கற்றல் என்பவற்றில் ஐரோப்பியர் ஈடுபட்டனர். இவ்வாறு கிரேக்க, உரோம நாகரிகம் தொடர்பான விடயங்களை ஆழமாகக் கற்றதுடன் அவற்றில் காணப்பட்ட பண்பாட்டம்சங்கள் மீண்டும் ஐரோப்பாவில் மக்களைக் கவரக் கூடியதாக இருந்தமை சிறப்பம்சமாகும். ஐரோப்பிய மக்கள் சிந்தனையிலும் செயலிலும் ஏற்பட்ட இந்த மாற்றமானது கிரேக்க உரோம நாகரிகம் மீண்டும் எழுச்சி பெற வழிவகுத்தது. இந்த நிலையை அறிமுகம் செய்யவே மறுமலர்ச்சி என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது.

### ✧ மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள்

#### 1. கொன்ஸ்தாந்திநோபிள் நகர் துருக்கியரால் கைப்பற்றப்படல்

பழங்காலந் தொட்டே ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையே வர்த்தகத் தொடர்பு நிலவியது. பாரம்பரிய வர்த்தகப்பாதை ஊடாக ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பொருள்களை விற்கும் மத்திய நிலையமாக கொன்ஸ்தாந்தி நோபிள் விளங்கியது. ஐரோப்பிய வர்த்தகர்கள் அங்கு வந்து வர்த்தகப் பொருள்களைப் பெற்று, ஐரோப்பிய நாடுகளில் விற்று இலாபமடைந்தனர்.

கி.பி. 1453 ஆம் ஆண்டு இஸ்லாமியரான துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப் பற்றியதால் ஐரோப்பிய வர்த்தகம் பெரும் சவாலை எதிர்நோக்கியது.

இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் கிறிஸ்த வர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இஸ்லாமியரான துருக்கியர்களால் கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்ட பின்னர் ஐரோப்பிய வர்த்த கர்களால் தொடர்ந்தும் அதனை வர்த்தக மத்திய நிலையமாக பயன்படுத்த முடியாது

போனது. ஆதலால் அங்கிருந்த அறிஞர்கள் கொன்ஸ்தாந்திநோபிள் நூலகங்களிலிருந்த பெறுமதி வாய்ந்த கிரேக்க, உரோம நூல்களை எடுத்துக்கொண்டு தமது நாடுகளுக்குச் சென்றனர். அவற்றைக் கற்பதற்கு அவசிய மான கிரேக்க, இலத்தீன் மொழிகளைப் பிரபலமடையச் செய்வதற்கும் நடவடிக்கை களை மேற்கொண்டனர். அக்காலகட்டத்தில் இத்தாலியில் பீசா, பொலொஞ்ஞோ போன்ற பல்கலைக்கழகங்களில் அந்நூல்கள் ஆழமாகக் கற்கப்பட்டதுடன், அதன் மூலம் பண்டைய கிரேக்க, உரோம பண்பாடு மீண்டும் புத்துயிர் பெறும் நிலையேற்பட்டது.

### 2. வர்த்தகம் வளர்ச்சியடைதலும் செல்வந்த வர்க்கம் தோற்றம் பெறுதலும்

கி.பி. 12 ஆம் நூற்றாண்டு தொடக்கம் ஐரோப்பாவில் வர்த்தகம் தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றம் மறுமலர்ச்சியில் தாக்கம் செலுத்திய நீண்டகாலக் காரணி யாகும். இக்கால கட்டத்தில் கிழக்கு - மேற்கு வர்த்தகத்தினால் இத்தாலியில் வெனிஸ், ஜெனோவா, புளோரன்ஸ் ஆகிய வளர்ச்சி யடைந்த நகரங்கள் தோற்றம் பெற்றன. இந்நகரங்களில் வாழ்ந்த செல்வந்தர்களுக்குக் கலைகளில் நாட்டம் கொள்வதற்கு ஓய்வு நேரம் இருந்ததுடன் அவற்றிற்கு அனுசரணை வழங்குவதற்கான செல்வமும் அவர்களிடம் இருந்தது. மறுமலர்ச்சி தோன்றுவதற்கு இந்த செல்வந்தர்கள் முக்கிய காரணமாயினர். புளோரன்ஸ் நகரிலிருந்த மெடிசி குடும்பத் தினர் இவ்வாறு பங்களிப்புச் செய்த செல்வந்த குடும்பத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### 3. கல்வி மறுமலர்ச்சி

உரோம நாகரிகம் வீழ்ச்சியுற்ற பின்னர் நிலவிய காலப்பகுதியில் திருச்சபையையும், குருமாரையும் மையமாகக் கொண்ட கல்வி முறை நிலவியது. இறையியல், மெய்யியல், சட்டம் போன்ற சில பாடங்களே அங்கு கற்பிக்கப்பட்டன. எனினும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றன.

| மத்திய கால இறுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்கள் | |
|---|---|
| நாடு | பல்கலைக்கழகம் |
| இத்தாலி | பொலஞ்ஞோ, பாதுவா |
| பிரான்ஸ் | பரிஸ் |
| இங்கிலாந்து | ஒக்ஸ்போட், கேம்பிரிஜ் |

இந்தப் பல்கலைக்கழகங்களில் பண்டைய இலக்கியம், வரலாறு, நாடகம் போன்ற பல பாடங்கள் கற்பிக்கப்பட்டதால் புதிய கல்விமான்கள் பலர் தோன்றினர். அவ்வாறே இந்தப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வு நடவடிக்கைகளில் கிரேக்க உரோம நூல்கள் பயன்படுத்தப்பட்டதுடன் பண்டைய இலக்கியத்திற்கு சிறப்பிடம் கிடைத்தது. இதனால் மறைந்திருந்த கிரேக்க, உரோம விஞ்ஞான, கலை அறிவுகளில் புத்தெழுச்சி ஏற்பட்டது.

இதுவரை காலமும் பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான நூல்கள் பிரதி பண்ணப்பட்டன. இவ்வாறு நூல்களைக் கையால் எழுதுதல் பிரதி பண்ணுதல் போன்ற நடவடிக்கைகளால் கல்வி குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அறிவு வளர்ச்சியில் பின்னடைவும் நிலவியது. மறு மலர்ச்சிக் காலத்தில் ஜொஹன்னஸ் கூடன் பேர்க் என்பவர் அச்சியந்திரத்தைக் கண்டு பிடித்ததால் அறிவு துறையில் புரட்சி ஏற்பட்டது. ஒரு நூலிலிருந்து பல்லாயிரம் பிரதிகளைக் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தமை பெரும் வெற்றியாகும். இவ்வாறு அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்பட்டமையானது மறுமலர்ச்சியின் வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்தது.

## 3.2 மறுமலர்ச்சி ஏற்படுதல்

### ✧ புதிய கல்விமான்கள் தோற்றம் பெறல்

மறுமலர்ச்சிக்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளில் ஒவ்வொரு நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் உரிய மொழிகள் காணப்பட்டன. மறுமலர்ச்சிக் காலத்தில் கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்ட நூல்களின் பாவனை அதிகரித்ததால் அம்மொழிகளில் புத்தெழுச்சி ஏற்பட்டது. அத்தோடு கிரேக்க, இலத்தீன் மொழிகளைக் கற்பது நாகரிகமாகக் கருதப்பட்டது. இதன் விளைவாகக் கிரேக்க, இலத்தீன் மொழிகளைப் போன்றே இலக்கியத்தைக் கற்பதும் பரவலடைந்தது. இதனால் பல கல்விமான்கள் தோன்றினர். மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய எழுத்தாளர்கள் சிலரின் பெயர்கள் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன :

| நூல் ஆசிரியர் | நாடு |
|---|---|
| தாந்தே | இத்தாலி |
| வில்லியம் ஷேக்ஸ்பியர் | இங்கிலாந்து |
| இராஸ்மஸ் | பிரான்சு |


### ✧ மானிட வாதம் எழுச்சி பெறல்

மறுமலர்ச்சிக்கு முன்னர் அனைத்தையும் விட கடவுளே மேலானவர் என்ற எண்ணக்கரு நிலவியது. இது தெய்வீகக் கோட்பாடு எனக் குறிப்பிடப்பட்டது. மறுமலர்ச்சிக் காலத்தில் மனிதனின் நடவடிக்கை தொடர்பாக அதிகமாகக் கண்டறியப்பட்டதுடன் அதன் மூலம் மானிடவாதம் எனும் எண்ணக்கரு பரவலடைந்தது. அதன் விளைவாக உலக வரலாற்றில் மனிதன் இதுவரை நடந்து வந்த பாதை, அவனது கலையம்சங்களின் திறமை என்பனவற்றில் அவதானம் செலுத்தப்பட்டது. வரலாறு, கலை போன்ற பல துறைகள் தோற்றம் பெற்றன. இதனால் கல்வியானது சமயத்தைக் கற்பதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது மனிதனையும் மக்கள் வாழ்க்கையையும் பற்றி அறியவும் பயன்படுத்தப்பட்டது.

| மறுமலர்ச்சிக்கு முற்பட்ட கால கலைப்பண்புகள் | மறுமலர்ச்சிக்கால கலைப்பண்புகள் இயல்பு |
|---|---|
| சமயம் சார்ந்ததாக இருந்தமை. | உலகியல் விடயங்களுக்கு முதலிடம் அளித்தமை. |
| கிறிஸ்துநாதர், கன்னிமரியாள் மற்றும் பிரசித்தி பெற்ற புனிதர்கள் ஆகியோர் கலையாக்கங்களின் பொருளாக அமைந்தமை. | அரசர்கள், அரசிகள், இளவரசர்கள், இளவரசிகள், செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்தோர் கலையாக்கப்பொருளாக அமைந்தமை. |
| கலைஞர்கள் வகுப்பு ரீதியாகத் தம்மை ஒழுங்கமைத்துக்கொண்டனர். அவர்களது படைப்புக்களும் அந்த வகுப்பினரின் பெயரால் அழைக்கப்பட்டமை. | படைப்பாளியின் பெயரால் படைப்புக்கள் வெளிவந்தமை. |
| திருச்சபை மட்டும் கலைப்படைப்புக்களுக்கு அனுசரணை வழங்கியமை. | செல்வந்தர்களது அனுசரணை கிடைக்கப்பெற்றமை. |
| சமயபற்றை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கமாக இருந்தமை. | இரசனையை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கமாக இருந்தமை. |
| சுதந்திரமான படைப்புகளுக்கு இடமில்லாதிருந்தமை. | சுதந்திரமாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தும் படைப்புகளை வெளிவந்தமை. |

## சித்திரக்கலை

சித்திரம் மறுமலர்ச்சிக் காலத்தில் பாரிய மாற்றங்களுக்கு உள்ளான கலையாகும். இத்தாலியில் புளோரன்ஸ் நகர் புதிய கலை களின் தோற்றத்தின் மத்திய நிலையமாகியது. இதுவரைசமய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்துநாதர், கன்னிமரியாள் என்போரைக் கருப்பொருளாக வைத்து வடிவமைக்கப்பட்ட சித்திரங்களுக்குப் பதிலாக லௌகீகத்திற்கு முக்கியத்துவம் அளித்து சித்திரங்கள் தோற்றம் பெறுவதை மறுமலர்ச்சிக் காலத்தில் காணக் கூடியதாக இருந்தது. உரு 3.3 இல் காணப்படும் சித்திரத்தை நீர் முன்னர் கண்டதுண்டா? இவ்வாறான அற்புத சித்திரங்களை வரைந்த கலைஞர்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் தோற்றம் பெற்றனர். நாம் அவ்வாறான கலைஞர்கள் சிலரைப் பற்றியும் அவர்களது கலைப்படைப்புகள் பற்றியும் கற்போம்.



உரு 3.3 மோனாலிசா



உரு 3.4

### லியனாடோ டாவின்சி

லியனாடோ டாவின்சி இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். அவர் சித்திரக் கலைஞர் மட்டுமன்றி கட்டடக் கலைஞர், பொறியியலாளர், கவிஞர் மற்றும் இசைக்கலைஞருமாவார். மோனாலிசா, இயேசு நாதரின் இறுதி இராப்போசனம் என்பன அவரது சிறந்த படைப்புகளாகக் கருதப்படுகின்றன.



உரு 3.5 இறுதி இராப்போசனம்



உரு 3.6 லியனாடோ டாவின்சியால் வரையப்பட்ட மற்றுமொரு சித்திரம்



உரு 3.7


## மைக்கல் ஆஞ்சலோ

மைக்கல் ஆஞ்சலோ சிறந்த ஓவியராவார். அவ்வாறே அவர் சிற்பக்கலை, கட்டடக் கலையிலும் சிறந்து விளங்கினார்.

உரோமில் சிஸ்டைன் ஆலயப் பாவுகையில் அவரால் வரையப்பட்ட ஓவியம் அவரது சிறந்த கலைப்படைப்பாகும். ''இறுதித் தீர்ப்பு'' எனும் அவரது மற்றுமொரு ஓவியமும் சிறந்ததொன்றாகக் கருதப்படுகிறது.



உரு 3.8 மைக்கல் ஆஞ்சலோவால் சிஸ்டைன் ஆலயத்தில் வரையப்பட்ட ஓவியம்



உரு 3.9 பியெட்டா சிலை



உரு 3.10 மைக்கல் ஆஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட டேவிட் சிலை


## சிற்பக் கலை

மறுமலர்ச்சிக் காலத்தில் வளர்ச்சியடைந்த மற்றுமொரு கலை சிற்பக்கலையாகும். பளிங்குக் கற்களில் சிலைகள் செதுக்குதல் இக்காலத்தில் காணப்பட்ட சிறப்பம்சமாகும். மைக்கல் ஆஞ்சலோ மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த சிற்பியாவார். பியெட்டா சிலை, டேவிட் சிலை, மோஸசின் சிலை என்பன அவரது சிறந்த படைப்புக்களாகும்.

டொனெடெலோ என்பவரும் மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த சிற்பியாவார். புளோரன்ஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள புனித யோவானின் (ஜோன்) உருவச் சிலை இவரது கைவண்ணத்தைக் காட்டும் சிறந்த படைப்பாகும்.

## கட்டடக் கலை

மறுமலர்ச்சிக் காலக் கட்டட அமைப்பில் பண்டைய உரோமக் கலையின் சில பண்புகள் பின்பற்றப்பட்டுள்ளமை காணக்கூடியதாக உள்ளது. உரோமக் கட்டடக் கலையில் காணப்பட்ட வட்டமான வில் வளைவு, உயர்ந்த கோபுரம், அரை வட்டத்துடனான சிகரம் என்பனவற்றுடன் கூடிய கட்டடங்கள் இக்காலத்தில் நிறுவப்பட்டன. மறுமலர்ச்சிக் காலத்தில் கிரேக்க, உரோம கட்டடக்கலையை வெளிப்படுத்தும் சிறந்த கலைப்படைப்பாக விளங்குவது உரோமில் அமைந்துள்ள புனித பேதுருவின் ஆலயமாகும். மைக்கல் ஆஞ்சலோவினதும் சிறந்த கட்டடக் கலைஞரான ரபாயேலினதும் படைப்புகள் பல இங்கு காணப்படுகின்றன.



செயற்பாடு

01. மறுமலர்ச்சிக் காலத்தின் கலைப் படைப்புகள் பற்றிய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கலை வடிவம் | கலைப் படைப்பின் பெயர் | படைப்பாளியின் பெயர் |
|---|---|---|
| சித்திரம் | | |
| சிற்பம் | | |
| கட்டடம் | | |

### ✧ புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கலைத்துறைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. ஐரோப்பாவில் இருந்த கல்விமான்கள் பண்டைய வரலாறு, இலக்கியம், மெய்யியல் போன்ற விடயங்களை ஆழமாகக் கற்றதன் விளைவாக சமுதாயத்தில் புரட்சிகரமான அறிவு மாற்றம் ஏற்பட்டது. எனவே எதனையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாது அனைத்தையும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் நோக்க முற்பட்டனர். அது விஞ்ஞானத் துறையின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்ததுடன் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பலவற்றிற்கும் வழிவகுத்தது.

## வைத்தியத்துறையின் முன்னேற்றம்

**வில்லியம் ஹார்வி** - மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் பற்றிய முக்கிய தகவல்களைக் கண்டறிந்தார்

**பெரசல்ஸ்** - நோய்கள் ஏற்படுவதற்கான காரணத்தையும் அவற்றைக் குணமாக்கும் வழிவகைகள் பற்றிய ஆய்வினையும் மேற்கொண்டார்.

இவரது கண்டுபிடிப்புக்கள் நவீன மருத்துவ விஞ்ஞான முன்னேற்றத்தில் பெருந்தாக்கம் செலுத்தியுள்ளன.

**மைக்கல் சர்டேஸ்**

மனித உடலின் குருதி, இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு நுரையீரலில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுவதும் பரவிச் செல்கிறது என்பதைக் கண்டறிந்தார்.

## 3.6 புவி தொடர்பாக முன்வைக்கப்பட்ட புதிய கொள்கைகள்




உரு 3.11

**நிக்கலஸ் கொப்பர்னிகஸ்**

புவி கோள வடிவமானது என்றும், புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றி வலம் வருகிறதென்றும் இவர் கண்டறிந்தார். இதன்படி புவி தட்டையானது என்ற எண்ணம் மறைந்தது. கொப்பர்னிக்கசின் இந்தப் புதிய கண்டுபிடிப்பானது நட்சத்திரங்கள், கோள்கள் தொடர்பான விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கு வழி வகுத்தது. வானியல் விஞ்ஞானத்திற்கு இவர் ஆற்றிய சேவையால் வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

**ஜொஹென்னஸ் கெப்லர்**


கொப்பனிக்கஸ் முன்வைத்த கருத்துக்களை இவர் உறுதி செய்ததுடன், அக் கருத்தினை மேலும் முன்னெடுத்துச் சென்றார். புவி உட்பட ஏனைய கோள்கள் அனைத்தும் சூரியனை வட்டவடிவமான பாதையில் சுற்றி வருவதாக அதுவரையில் கருத்து நிலவியது. இவர் அக் கருத்தை மறுத்துக் கோள் மண்டலத்தில் அனைத்துக் கோள்களும் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருவதாகக் கூறினார்.




உரு 3.12

**கலிலியோ கலிலி**

பல்கலைக்கழகப் பேராசிரியரான இவர் தொலைநோக்கியைக் கண்டுபிடித்து, வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இதன் விளைவாக சந்திரனில் மலை களும், பெருங் குழிகளும் உள்ளன என்றும், சூரியனில் புள்ளிகள் உள்ளன என்றும், வியாழனுக்குத் துணைக் கோள்கள் உள்ளன என்றும் அவர் தனது கருத்துக்களை முன் வைத்தார்.




உரு 3.13

## மதச் சீர்திருத்தம்

மறுமலர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட சிந்தனைப்புரட்சி, விஞ்ஞான முன்னேற்றம், புதிய கண்டுபிடிப்புக்கள் என்பவற்றால் அனைத்துத் துறைகளையும் மக்கள் விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்க்கத் தொடங்கினர். இதனால் சமயக் கொள்கைகளையும் திருச் சபையின் அளவு கடந்த அதிகாரங்களையும் சிலர் எதிர்க்க முற்பட்டனர். திருச்சபைக்கு எதிராக செயற்பட்ட குழுவினர் புரட்டஸ் தாந்தர் என அழைக்கப்பட்டனர்.

மத்திய கால இறுதிப் பகுதியிலிருந்து சில குருமாரின் தகாத செயற்பாடுகளுக்கு எதிராக விமர்சனங்கள் எழுந்தன. இவ்வாறு திருச்ச பைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டவர் களில் இங்கிலாந்தின் ஜோன் வைக்ளிப், பிரான்சின் இராஸ்மஸ் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

திருச்சபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த இயக்கங்களுக்கு மாட்டின் லூதர், ஜோன் கல்வின் போன்ற தலைவர்கள் முன்னின்று செயற்பட்டனர். ஜேர்மனியில் பிறந்த மார்ட்டின் லூதர் விற்றன்பேர்க் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந் தார். திருச்சபையின் கொள்கைகளில் விவிலியப் படிப்பினைகளுக்கு மாறான பல விடயங்கள் உள்ளன என அவர் கூறினார். இக்காலகட்டத்தில் ஜேர்மனியில் விற்றன்பேர்க் நகரில் பாவமன்னிப்புப் பத்திரம் விற்கும் குருவானவர் ஒருவரை அவர் சந்தித்தார். பாவமன்னிப்புப் பத்திர விற்பனையினால் அதிர்ச்சியடைந்த மாட்டின் லூதர் பாவமன்னிப்பு தொடர்பாகத் தனது கருத்துக்கள் உள்ளடங்கிய பத்திரமொன்றை விற்றன்பேர்க் ஆலயக் கதவில் ஒட்டினார். இதன் விளைவாக மாட்டின் லூதர் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார். அதன் பின்னர் லூதர் திருச்சபையின் கொள்கை களுக்கு எதிராக மேலும் கருத்துக்களை முன் வைக்கத் தொடங்கினார். 15 ஆம் நூற்றாண்டில் அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதுடன் லூதரின் கருத்துக்கள் ஜேர்மனியில் மட்டுமன்றி ஐரோப்பா முழுவதும் பரவியது. லூதரின் கருத்துக்கள் உள்ளடங்கிய இந்த சீர்திருத்த இயக்கம் புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது.



செயற்பாடு

1. ஐரோப்பிய மறுமலர்ச்சி தொடர்பான குறுவினா கையேடு ஒன்று தயாரிக்க.
2. மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக் கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை, புதிய கண்டுபிடிப்புக்கள் என்பன பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

# 4 நாடுகாண் பயணங்களும், ஐரோப்பிய கீழைத்தேசங்களுக்கு வருகை தருதலும்

**அறிமுகம்**

நாடுகாண் பயணம் என்பது நாடுகளைத் தேடிச் செல்லுதல் என்பதாகும். ஐரோப்பிய இனத்தவர் புதிய கடல் வழிகளைக் கண்டறிந்து அதுவரை அறியப்படாத நாடுகளைக் கண்டுபிடித்தல் நாடுகாண் பயணங்களாக விபரிக்கப்படுகிறது. 15 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் ஐரோப்பாக் கண்டத்திற்கு அப்பாலுள்ள நாடுகளைக் கண்டறிவதில் ஐரோப்பியர் அதிக ஆர்வம் காட்டினர். அதன் விளைவாக ஆசியா, அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள நாடுகளைக் கண்டறிந்து அங்குள்ள மக்களைப் பற்றியும் செல்வம் தொடர்பாகவும் ஐரோப்பியருக்கு தகவல் பெறக் கூடியதாக இருந்தது. இந்த அத்தியாயத்தில் நாடுகாண் பயணத்திற்கான காரணங்கள், முக்கியமான நாடுகாண் பயணங்கள், அதன் பொருட்டு முன்னின்று செயற்பட்டோர், ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகைதந்தமை என்பன பற்றிக் கூறப்படுகிறது.

## 4.1 நாடுகாண் பயணங்களின் பின்னணி

பதினைந்தாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாவதற்கு முன்னர், ஐரோப்பா, வடஆபிரிக்கா, ஆசியாவின் ஒரு பகுதி தவிர்ந்த உலகின் ஏனைய பகுதிகளைப்பற்றி ஐரோப்பியருக்குத் தெளிவான விளக்கம் இருக்கவில்லை. ஆசிய நாடுகளான இந்தியா, சீனா என்பவற்றின் வர்த்தகர்கள், மார்க்கோபோலோ போன்ற தேசசஞ்சாரிகளின் தகவல்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட சில விளக்கமே ஐரோப்பியருக்கு இருந்தது.

எனினும் ஆசியாவின் ஏனைய பகுதிகள் தொடர்பாக அவர்களிடம் காணப்பட்ட அறிவு மிகவும் குறைவானதாகும். ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதி, அவுஸ்திரேலியா, அமெரிக்கக் கண்டம் என்பன தொடர்பாக அக்காலத்தில் தெளிவான அறிவு அவர்களுக்கு இருக்கவில்லை.



உரு 4.1 வாஸ்கொடகாமாவின் இந்திய வருகை தொடர்பான கற்பனைச் சித்திரம்

நாடுகாண் பயணங்கள் ஆரம்பிக்க முன்னர் வர்த்தகத்தின் பெரும்பகுதி மத்திய தரைக் கடலுக்கும் அதனைச் சூழவுள்ள பிரதே சங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

மத்தியதரைக் கடலை அண்மித்த வர்த்தக நகரங்களான வெனிஸ், ஜெனோவா, அலெக் சாந்திரியா, கருங்கடலை அண்மித்த கொன்ஸ் தாந்திநோபிள் என்பன அக்காலத்தில் வர்த்தகம் காரணமாக செழிப்புற்று விளங்கின. இக்காலத்தில் ஆசியாவுக்கும், ஐரோப்பாவுக் கும் இடையே வர்த்தகத் தொடர்புக்கு மூன்று வழிகள் காணப்பட்டன:

1. கொன்ஸ்தாந்திநோபிள் நகரிலிருந்து பாரசீகம், மத்திய ஆசியா வழியாக சீனா வரையிலான பட்டுப்பாதை.

2. கொன்ஸ்தாந்திநோபிள் நகரிலிருந்து மத்திய தரைக்கடல் வழியாக எகிப்துக்கு வந்து, செங்கடலில் பயணித்து இந்து சமுத்திரத்தை அடைதல்.

3. கொன்ஸ்தாந்திநோபிள் நகரிலிருந்து பாரசீக வளைகுடா வழியாக இந்தியா வின் மேற்குக்கரையை அடைதல்.

மேற்கூறப்பட்ட தரை வழியான பட்டுப்பாதை ஊடாக கொண்டு செல்லப்படும் வர்த்தகப் பொருள்கள் கொஸ்தாந்திநோபிளை அடைந் தன. செங்கடல், பாரசீக வளைகுடா ஊடாக கடல் வழியாகப் பொருள்களைக் கொண்டு செல்லும் போது தரைவழிகளில் தவலம் முறை பயன்படுத்தப்பட்டது. பாரசீக வளைகுடா வழியாகக் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் கொன்ஸ் தாந்திநோபிளில் விற்பனை செய்யப்பட்டன. செங்கடல், எகிப்து வழியாகக் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் பெரும்பாலும் அலெக்சாந்திரி யாவில் வைத்து வெனிஸ், ஜெனோவா வர்த்த கர்களால் கொள்வனவு செய்யப்பட்டது.

## நாடுகாண் பயணத்துக்கான காரணங்கள்

- ***கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்படலும், ஐரோப்பியரின் பாரம் பரிய வர்த்தகப் பாதை தடைப் படுதலும்***

கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப் பற்றப்பட்டமை நாடுகாண் பயணத்திற்கான உடனடிக் காரணமாக அமைந்தது. மேலே கூறப்பட்ட வர்த்தகப் பாதை வழியாக ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பொருள்களை ஐரோப்பிய வர்த்த கர்கள் பெற்றுக்கொண்ட மத்திய நிலையமாக கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் விளங்கியது. எனினும் 1453 ஆம் ஆண்டு இந்த நகர் முஸ்லிம்களான துருக்கியர் வசமானதால், கிறிஸ்தவர்களாகிய ஐரோப்பிய வர்த்தகர்கள் அதுவரை பயன்படுத்திய வர்த்தகப் பாதை யைப் பயன்படுத்த முடியாது போனது. கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றிய துருக்கிய வர்த்தகர்கள் பொருள்களின் விலையை அதிகரித்தல். தீர்வையை அதிகரித் தல், அத்தியாவசிய வர்த்தகப் பொருள்களை உரிய வேளையில் வழங்காமை போன்ற காரணங்களால் ஐரோப்பியரது வர்த்தகத்திற்குத் தடையேற்பட்டது. இதனால் வாசனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஐரோப்பியர் ஆசியாவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆசியாவின் வர்த்தகம் முஸ்லிம்களின் கையில் இருந்ததனால், அதனை ஐரோப்பியர் தம்வசம் கொண்டு வருவதற்கு எத்தனித்தனர். அத்துடன் ஆசி யாவுக்குப் புதிய கடல் வழியைக் கண்டு பிடிப்பதன் பின்னணியில் இலாபம் பெறும் நோக்கமும் இருந்தமை தெளிவாகிறது.

## நாடுகாண் பயணங்களுக்கான பின்னணி ஐரோப்பாவில் உருவாகின்றமை

மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட புதிய விஞ் ஞானக் கண்டுபிடிப்புக்கள், சிந்தனை மாற்றம் என்பனவற்றால் நாடுகாண் பயணத்திற்கான பின்னணி உருவாகியது. மறுமலர்ச்சிக் காலத்தில் நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ் (உலகம் கோள வடிவானது) என்பதனை நிரூபித்தார். அவ்வாறே தொலமியின் உலகப் படம் மூலம் உலகின் அமைவு தொடர்பாக அதுவரை இருந்த அறிவு விரிவடைந்தது.




படம் 4.1 ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான புராதன வர்த்தகப் பாதை



உரு 4.2 புராதன தரை மார்க்கப் பட்டுப்பாதை யின் சிதைவுகள்

நீண்ட கடற்பிரயாணங்களின் போது வழியைக் கண்டறிய உதவும் திசையறிகருவி, வட துருவ நட்சத்திரமானி என்பனவற்றின் பாவனை நாடு காண் பயணத்திற்குத் துணையாக அமைந்தன. அவ்வாறே மறுமலர்ச்சிக் காலத்தில் பெறப் பட்ட விஞ்ஞான அறிவு காரணமாகத் தூர இடங்களுக்குச் செல்லக்கூடிய பெரிய கப்பல் களையும் கட்டக் கூடியதாக இருந்தது.

## 4.2 நாடுகாண் பயணங்களுக்கு அரசுகளின் அனுசரணை கிடைத்தமை

தூரத்தில் அமைந்துள்ள நாடுகளைத் தேடிச் செல்லும்போது பல மாதங்கள் செல்வ துடன், அவ்வாறான பயணங்களுக்குப் பெருந்தொகையான பணச் செலவும் ஏற்படும். இந்தப் பயணங்களில் இலாபம் பெறுவதும் நிச்சயமற்றதாகும். இவ்வாறான காரணங்களால் தனியாரால் நாடுகாண் பயணங்களுக்குப் பணம் செலவிட முடியாதிருந்தது. எனினும் ஐரோப்பாவில் எழுச்சி பெற்று வந்த சில தேசிய அரசுகள் நாடு காண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய மையானது அச்செயற்பாடு வெற்றியடை வதற்குக் காரணமாகியது. போர்த்துக்கல், ஸ்பானியா, இங்கிலாந்து என்பன அவ்வாறு நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய நாடுகளுக்கு எடுத்துக் காட்டு களாகும்.

## ஐரோப்பியரின் சமய நோக்கம்

முஸ்லிம்களின் ஏகபோக உரிமையாகவுள்ள ஆசியாவின் வர்த்தகத்தை ஐரோப்பியரின் கைகளுக்குக் கொண்டு வருவது போலவே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதும் நாடு காண் பயணத்தின் இன்னொரு நோக்கமாக இருந்தது. வாஸ்கொடகாமா இந்தியாவிற்கு வந்த பின் தாம் கிறிஸ்தவர்களையும், வாச னைத் திரவியங்களையும் தேடியே வந்ததாகக் கூறினான்.

ஐரோப்பியர்களின் பொருளாதார, சமய நோக்கம் இந்தக் கூற்றிலிருந்து தெளிவாகிறது. இக்காலத்தில் பெஸ்டர் ஜோன் எனும் ஆட்சியாளனின் கீழ், கீழைத்தேசத்தில் கிறிஸ்தவ அரசு ஒன்று உள்ளதென சில ஐரோப்பியரிடையே தவறான நம்பிக்கை இருந்து வந்தது. அந்த ஆட்சியாளனைத் தேடிக் கண்டறிந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு அவனது உதவியைப் பெற வேண்டும் என்ற எண்ணம் நிலவியது.

## நாடுகாண் பயணங்களுடன் தொடர்புடைய முக்கிய நாடுகள்

**போர்த்துக்கல்**

போர்த்துக்கேயரின் தாய்நாடான போர்த்துக்கல் ஐபீரியக் குடா நாட்டில் அமைந்துள்ளது. இதனால் போர்த்துக்கேயர் கடல் வழியாகவே வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டனர். அவர்கள் இயற்கையாகவே சிறந்த மாலுமி களாக விளங்கினர்.



உரு 4.3 வாஸ்கொடகாமா

கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசம் வருவதற்கு முன்னரே போர்த்துக்கேயர் நாடு காண் பயணத்தில் ஆர்வமுடையோராக இருந்தனர்.




உரு 4.4 கடலோடி ஹென்றி



உரு 4.5 கிறிஸ்டோபர் கொலம்பஸ்

போர்த்துக்கேய மன்னன் கடலோடி ஹென்றி 15 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கலில் கப்பல் பயிற்சிப் பாடசாலையை நிறுவி அக்கலையைக் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான். அந்தப் பாடசாலையில் கப்பல் கட்டுதல், தேசப்படக் கலை, வான சாஸ்திரம் போன்ற பாடங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.




படம் 4.2 15 ஆம் 16 நூற்றாண்டுகளின் நாடுகாண் பயணப் பாதைகள்



உரு 4.6 நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட பாய்மரக் கப்பல்களும் படகுகளும்

கடலோடி ஹென்றியின் இந்த நடவடிக்கையால் போர்த்துக்கல் நாடுகாண் பயணத்தில் பல வெற்றிகளை அடையக் கூடியதாக இருந்தது.

பர்த்தலோமியஸ் டயசின் தலைமையில் ஆபிரிக்காவின் கிழக்குக் கரை வழியாகப் பயணித்த போர்த்துக்கேயக் குழு 1488 ஆம் ஆண்டு ஆபிரிக்காவின் தென் முனையை அடைந்தது. புயலில் சிக்குண்ட அவர்கள் அந்த இடத்திற்குப் 'புயல்முனை' எனப் பெயரிட்டு மீண்டும் போர்த்துக்கல்லை அடைந்தனர். இது போர்த்துக்கேயர் பெற்ற பாரிய வெற்றியின் அடையாளம் எனக் கொண்டு போர்த்துக்கேய மன்னன் இதற்கு 'நன்னம்பிக்கை முனை' எனப் பெயரிட்டான்.

இந்த வழியாகப் பயணித்த போர்த்துக்கேய இனத்தவனான வாஸ்கொடகாமா உள்ளிட்ட குழுவினர் 1498 ஆம் ஆண்டு இந்தியாவின் கள்ளிக்கோட்டை நகரை அடைந்தனர். இது ஆசியாவுக்குப் புதிய கடல் பாதை காண்பதன் ஐரோப்பியரது நோக்கம் நிறைவேற வழி வகுத்தது.

## ஸ்பானியா

போர்த்துக்கலுக்குக் கிழக்கில் அமைந்துள்ள ஸ்பானியா, ஐபீரியக் குடாநாடுகளில் பெரியநாடாகும். ஸ்பானியர்களும் முற் காலந் தொடங்கி கடற்பிரயாணங்களில் ஆர்வம் காட்டினர். 15 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பேர்டினன்ட், இசபெலா ஆகியோ ரின் கீழ் ஸ்பானியா பலம் வாய்ந்த அரசாக வளர்ச்சியடைந்து வந்தது. ஸ்பானியாவின் பொருளாதாரப் பலமும் வளர்ச்சியடைந்தி ருந்ததால் அரசாங்கம் நாடுகாண் பயணத்திற்கு அனுசரணை வழங்குவதற்கு முன் வந்தது. போர்த்துக்கேயர் ஆபிரிக்காவைச் சுற்றிப் பயணம் செய்து ஆசியாவுக்குப் புது வழியைக் கண்டு பிடித்த போது, ஸ்பானிய மாலுமிகள் அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதியில் பயணித்து ஆசியாவுக்கு வரும் வழியைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டனர். பேர்டினன்ட், இசபெலா ஆகியோரின் உதவியுடன் 1492 ஆம் ஆண்டு இவ்வாறான கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்ட கிறிஸ்டோபர் கொலம்பஸ், அத்திலாந்திக்

சமுத்திரத்தின் மேற்கில் அமைந்துள்ள பகாமாஸ் தீவுக் கூட்டத்தில் ஸ்பனியோலா தீவில் தரை இறங்கினான். அந்த இடம் இந்தியா என்றே அவன் கருதியதுடன் அந்தத் தீவுக் கூட்டம் தற்போதும் கூட மேற்கிந்தியத் தீவுகள் என அழைக்கப்படுகிறது. பின்னர் அமெரிக்கோ வெஸ்புசியின் கடல் பயணத் திற்கும், பேர்டினன்ட் மகலன் உலகைச் சுற்றி வருவதற்கும் ஸ்பானியாவின் அனுசரணை கிடைத்தது.

போர்த்துக்கல், ஸ்பானியா ஆகிய நாடுகள் மட்டுமின்றி இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து ஆகிய நாடுகளும் நாடுகாண் பயணங்களில் பங்களிப்புச் செய்துள்ளன. நாடு காண் பயணத்தில் ஈடுபட்ட நாடுகள், நபர்கள், கண்டுபிடித்த இடங்கள் என்பன பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| **அனுசரணை வழங்கியநாடு** | **நாடுகாண் பயணம்** | **கண்டுபிடித்த இடங்கள், நாடுகள்** |
|---|---|---|
| போர்த்துக்கல் | பர்த்தலோமிய டயஸ் | ஆபிரிக்காவின் தென் கரையின் முனை வரை வருதல். அதற்குப் புயல்முனை எனப் பெயரிடல் |
| | வஸ்கொட காமா | பர்த்தலோமியஸ் டயசின் பிராயாண வழியில் சென்று இந்தியாவை அடைதல் |
| ஸ்பானியா | கிறிஸ்கோபர் கொலம்பஸ் | அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதிக்குப் பயணித்து கரிபியன் தீவில் இறங்குதல் (இஸ்பானியோலா) இந்தப் பயணம் அமெரிக்காவுக்கு செல்வதற்கான வழியாக அமைந்தமை. |
| | அமெரிக்கோ வெஸ்புசி | கொலம்பஸ் சென்ற வழியே சென்று அமெரிக்காவைக் கண்டறிதல் (அவனது பெயரால் அது அழைக்கப்படல்) |
| | பேர்டினன்ட் மகலன் | உலகைச் சுற்றி முதன் முதல் வலம் வருதல். பிலிப்பைன்ஸ் தீவில் தரையிறங்குதல். இந்தப் பயணங்களின் விளைவாக உலகம் கோள வடிவம் என்பது உறுதி செய்யப்பட்டது. |
| | பேர்டினன்ட் கோடேஸ் | மெக்சிக்கோ |
| | பிரன்சிஸ்கோ பிசாரோ | பேரு |
| இங்கிலாந்து | கபோட் சகோதரர்கள் | கனடாவின் கரையோரப் பிரதேசம் |
| பிரான்ஸ் | ஜக்மிஸ் காட்டியர் | வட அமெரிக்காவின் புனித லோரன்ஸ் பிரதேசம் |
| ஒல்லாந்து | ஹென்றி ஹட்சன் | வட அமெரிக்காவில் ஹட்சன் ஆறு, ஹட்சன் குடா என்பனவற்றைச் சூழ்ந்த பிரதேசங்கள். |


அட்டவணை 4.1 நாடுகாண் பயணங்கள் பற்றிய தரவுகள்

## பேர்டினன்ட் மகலன் உலகைச் சுற்றி வருதல்



உரு 4.7

1480 ஆம் ஆண்டு போர்த்துக்கலில் பிறந்த பேர்டினன்ட் மகலன் தனது 25 வது வயதில் சிறந்த மாலுமியாகத் திகழ்ந்தான். ஐரோப்பாவிலிருந்து மேற்காகப் பயணித்து ஆசியாவுக்குப் புதுவழி காணும் நோக்கில் மகலன் நீண்ட கடற்பயணத்தை ஒழுங்கு செய்தான். ஸ்பானிய மன்னனிடமிருந்து அதற்கான அனுசரணை கிடைத்தது. 1519 ஆம் ஆண்டு ஸ்பானியாவிலிருந்து சில கப்பல்களுடன் மகலன் தனது கடற்பயணத்தை ஆரம்பித்தான். அத்திலாந்திக் சமுத்திரத்தை அடைந்த அக்குழுவினர் தென் அமெரிக்காவின் தென்கரையில் அமைந்துள்ள பசுபிக் சமுத்திரத்தின் நுழைவாயிலான நீரிணையைக் கண்டு பிடித்தனர். அவனது பெயரால் அது மகலன் நீரிணை எனப்படுகிறது. மேலும் பசுபிக் சமுத்திரத்தினூடாகப் பயணித்த இக் குழுவினர் பல இன்னல்களை எதிர் நோக்கினர். பசுபிக் சமுத்திரத்தில் நீண்ட பயணத்தை மேற்கொண்ட பின்னர் மகலன் பிலிப்பைன்ஸ் தீவை அடைந்தான். பிலிப்பைன்ஸில் சுதேசிகளுடன் ஏற்பட்ட மோதலில் மகலன் உயிரிழந்தான். அவனது குழுவினரில் எஞ்சியிருந்தோர் ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியினூடாகப் பயணித்து மீண்டும் ஸ்பானியாவை அடைந்தனர். மகலனின் கடற் பயணத்தினால் உலகம் கோள வடிவமானது என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது.




படம் 4.3 மகலனின் பிரயாணப் பாதை

## 4.3 ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருதல்

ஐரோப்பாவில் கிரேக்க உரோம நாகரிகம் நிலவிய பண்டைக் காலத்திலேயே ஆசிய ஐரோப்பிய வர்த்தகத் தொடர்பு நிலவி வந்தது. கிரேக்க ஆட்சியாளனான மகா அலெக்சாண்டர் பெரிய படையுடன் இந்தியா வரை ஆக்கிரமித்துப் பின்னர் அராபியாவுக்கு சென்றதுடன் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே வர்த்தகத் தொடர்பு வளர்ச்சியுற்றது. கிரேக்க நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின்னர் இத்தாலியில் உரோம் நகரை மையமாகக் கொண்டு உரோம நாகரிகம் கட்டியெழுப்பப் பட்டது. இவ்வாறு உரோம நாகரிகம் நிலவிய காலத்திலும் ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலேயே வர்த்தகத் தொடர்பு நிலவியது

உரோம நாகரிகம் வீழ்ச்சி அடைந்ததுடன் ஐரோப்பிய அரசியல் முறையில் பாரிய மாற்றங்கள் இடம்பெற்றன. அதுவரையில் நிலவிய பேரரசிற்குப் பதிலாக பிரதேசத்தை முதன்மையாகக் கொண்ட அரசுகள் தோற்றம் பெற்றன. இந்த அரசுகளின் ஆட்சியாளர்கள் பிரதேச ரீதியாகப் பலம் பொருந்தியவர்களாக இருந்த பிரபுக்களின் துணையுடன் ஆட்சி செய்தனர். நில உரிமை பிரபுக்களுக்கும் அவற்றில் பயிரிடுதல் சாதாரண விவ சாயிகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. இது மானியமுறை எனப்பட்டது. மானிய முறை ஐரோப்பாவுக்கு வெளியே பரவவில்லை.

ஐரோப்பாவின் அரசியல் முறையில் இவ்வா றான நிலைமை நிலவிய காலத்தில் மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவில் சில பிரதே சங்களில் முஸ்லிம்களின் அதிகாரம் வலுப் பெற்றிருந்தது. இதன் விளைவாக அராபியா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம் வர்த்தகர்கள் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நடைபெற்ற வர்த்தகத்தில் இடைத்தரகர்களாகச் செயற் பட்டனர். இந்த வர்த்தகர்கள் பாய்க்கப்பல் களைப் பயன்படுத்தித் தேவையான வர்த்தகப் பொருள்களைப் பல்வேறு நாடுகளிலிருந்து சேகரித்து மேற்கூறப்பட்ட வழிகள் மூலம் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு எடுத்துச் சென் றனர்.

ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருள்களில் சீனாவின் பட்டுத்துணி, நறுமணப் பொருள்கள், பீங்கான், ஜப்பானின் வெள்ளி, இலங்கையின் முத்து, இரத்தினக்கல், வாசனைத் திரவியங்கள் யானைத்தந்தம் என்பன முக்கிய இடத்தினைப் பெற்றன. இந்தியாவிலிருந்து மிளகு, கறுவா, அபின், பருத்தித் துணி என்பனவும், ஜாவா, சுமாத்ரா, போர்னியோ போன்ற கிழக்கிந்திய தீவுகளிலிருந்து கராம்பு, ஏலம், சாதிக்காய் என்பனவும் ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஆசியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வாசனைப் பொருள்களுக்கு ஐரோப்பாவில் நல்ல கேள்வி இருந்ததுடன் உணவைச் சுவையூட்டுவதற்கு அவை அத்தியாவசியப் பொருள்களாக இருந்தன.

இவ்வாறு ஆசிய ஐரோப்பிய வர்த்தகத்தில் இடைத்தரகர்களாகச் செயற்பட்ட முஸ்லிம்கள் அதிக இலாபமடைந்தனர். முஸ்லிம்கள் பொருளாதார ரீதியில் வலுவடைந்து தமது அரசியல் பலத்தை விஸ்தரித்துக் கொண்டி ருந்த காலகட்டத்தில் கொன்ஸ்தாந்திநோபிள் நகர் முஸ்லிம்களான துருக்கியர் வசமானதால் ஐரோப்பியரின் வர்த்தகத்துக்குப் பெருந்தடை யேற்பட்டது. இதன் விளைவாக ஆசியாவுக்கு வருவதற்குப் புதிய கடல் வழியைக் கண்டு பிடிக்க ஐரோப்பியர் மேற்கொண்ட நடவ டிக்கை பற்றி இப் பாடத்தின் ஆரம்பத்தில் விபரிக்கப்பட்டது.

### ஐரோப்பியர் ஆசியாவுக்கு வந்ததன் நோக்கம்

- ஆசியாவில் உற்பத்தி செய்யப்படும் வாச னைத் திரவியங்கள் உட்பட ஏனைய வர்த்தகப் பொருள்களைப் பெற்று ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்று விற்றுப் பொருளாதார ரீதியில் அதிக இலாபம் பெற்றுக் கொள்ளல்.

- முஸ்லீம்களின் கையிலிருந்த ஆசியாவின் வர்த்தக ஏகபோக உரிமையைத் தம் வசமாக்குதல்

- ஆசிய நாடுகளில் தமது சமயத் தைப் பரப்புதல்.

பதினாறாம் ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருவதன் முக்கிய நோக்கம் மேற்கூறப்பட்ட விடயங்களாக இருந்தாலும், ஐரோப்பாவில் இடையிடையே ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப இந்த நோக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

## போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வருதல்

ஐரோப்பிய இனத்தவரில் முதன்முதல் ஆசியாவுக்கு வந்தவர்கள் போர்த்துக்கேயராவர். 1498 ஆம் ஆண்டு வாஸ்கொடகாமா இந்தியாவின் கள்ளிக்கோட்டையை அடைந்ததும் இதற்கான கதவு திறக்கப்பட்டது. வாஸ்கொடகாமா ஏராளமான செல்வத்துடன் மீண்டும் போர்த்துக்கலுக்குச் சென்ற போது போர்த்துக்கல் மன்னன் பெரும் மகிழ்ச்சி அடைந்தான். ஆசியாவுடன் தொடர்ந்து வர்த்தகத் தொடர்பினை வைத்துக் கொண்டால் அதிக இலாபம் பெறலாம் என அரசன் உணர்ந்து கொண்டான். இதற்கமைய போர்த்துக்கேயர் முதன்முதல் இந்தியாவின் கரையோர இராச்சியத்துடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டனர். இலங்கைக்கு வந்த அவர்கள், கோட்டை இராசதானியுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டனர். போர்த்துக்கலில் இருந்து ஆசியாவின் நடவடிக்கையை மேற்பார்வை செய்தல் கடினமானதால் போர்த்துக்கேயர் கோவாவைக் கைப்பற்றி அதனைப் போர்த்துக்கேயரின் கீழைத்தேச மத்திய நிலையமாக்கிக் கொண்டனர். இதற்கிடையில் தென்கிழக்கு ஆசியாவில் வாசனைத் திரவியங்கள் விளையும் தீவுகள் சிலவற்றைக் கைப்பற்றிய அவர்கள் இந்து சமுத்திரத்திற்கு அருகில் வர்த்தக ஆதிக்கத்தைக் கட்டியெழுப்பினர்.

## ஒல்லாந்தரது வருகை

போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்து ஒரு நூற்றாண்டினை அண்மிக்கும் காலப் பகுதிவரை ஒல்லாந்தரால் ஆசியாவுக்கு வரமுடியவில்லை. 1595 ஆம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வரத் தொடங்கினர். அது முதல் 1602 ஆம் ஆண்டு வரை ஒல்லாந்தில் நிறுவப்பட்ட வர்த்தக கம்பெனிகள் இடையிடையே ஆசியாவுக்கு வந்தன. ஒரே நாட்டைச் சேர்ந்த பல வர்த்தகக் கம்பெனிகள் வந்ததால் ஆசியாவில் அவைகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. அவ்வாறே சிறு சிறு கம்பெனிகள் வந்ததால் ஆசியாவில் சில பிரதேசங்களைக் கைப்பற்றுதல் அல்லது போர்த்துக்கேயரின் அச்சுறுத்தல்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுத்தல் என்பன ஒல்லாந்தருக்குச் சிரமமான செயலாக அமைந்தது. இந்த நிலைமையை விளங்கிக் கொண்ட ஒல்லாந்த ஆட்சியாளர்கள் 1602 ஆம் ஆண்டு பல வர்த்தக கம்பெனிகளை ஒன்றிணைத்துப் பலம் வாய்ந்த நிறுவனமாக ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி என்ற ஒன்றை நிறுவினர். அது முதல் ஆசியாவில் ஒல்லாந்தர் சார்பாக அனைத்து செயற்பாடுகளையும் இந்தக் கம்பெனி முன்னெடுத்துச் சென்றது.

ஒல்லாந்தர் ஆரம்பத்தில் ஆசியாவில் வாசனைத் திரவியம் பெருமளவில் விளைந்த தென்கிழக்கு ஆசிய தீவுகளில் அதிக கவனம் செலுத்தினர். அவ்வாறே இந்தியாவின் கரையோரப் பகுதிகளில் வர்த்தகக் களஞ்சியங்கள் பலவற்றை நிறுவிய அவர்கள் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலிருந்த போர்த்துக்கேயரை வெளியேற்றும் பொருட்டு நடவடிக்கை எடுத்தனர். ஒல்லாந்தரின் கீழைத்தேய மத்திய நிலையமாகத் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள பத்தேவியா விளங்கியது. இவ்வாறு 17 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் போர்த்துக்கேயரின் வர்த்தக ஏகாதிபத்தியத்தைத் தமதாக்கிக் கொள்ள ஒல்லாந்தர் முயன்றனர்.

## பிரித்தானியரினதும் பிரான்சியரினதும் வருகை

போர்த்துக்கேயரைப் போன்று ஒல்லாந்தரால் நீண்ட காலம் ஆசியாவின் வர்த்தக ஏகபோக உரிமையைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. பிரித்தானியரதும், பிரான்சியரதும் வருகையே அதற்கான காரணமாகும். ஆங்கிலேயர், ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக கம்பனியை நிறுவி, இங்கிலாந்து அரசியிடம் ஆசியாவின் வர்த்தக ஏகபோக உரிமை தொடர்பாக அதிகாரம் பெற்று 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் ஆசியாவுக்கு வந்தனர். அவர்கள் இந்திய கரையோரப் பிரதேசங்களில் வர்த்தக களஞ்சியங்களை நிறுவி அதிகாரத்தை நிலைநாட்டும் குறிக்கோளுடன் செயற்பட்டனர். இதன் விளைவாக இந்தியா, பர்மா, இலங்கை என்பன பின்னர் பிரித்தானியக் குடியேற்ற நாடுகளாயின.

பிரான்சியர் 17 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் கீழைத்தேச பிரான்சிய வர்த்தகக் கம்பெனியை நிறுவி ஆசியாவுக்கு வரத் தொடங்கினர். அவர்கள் ஆரம்ப காலத்தில் இந்தியாவில் பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் போன்ற இடங்களில் வர்த்தகக் களஞ்சியங்களை நிறுவித் தமது அதிகாரத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தனர். இவ்வாறு 17 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பியர்கள் சிலர் ஆசியாவுக்கு வந்ததால், ஆசியாவின் அரசியல் அதிகாரத்தையும், வர்த்தக உரிமையையும் பெறும் பொருட்டு அவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டன. அந்த மோதல்களால் ஐரோப்பிய இனத்தவர் ஒருவருக்கு எதிராக மற்றுமோர் ஐரோப்பியரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிய நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.



### செயற்பாடு

1. பின்வரும் இடங்களையும், நாடுகளையும் உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

   போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பானியா, பிரான்ஸ், இங்கிலாந்து, நன்னம்பிக்கை முனை, கள்ளிக் கோட்டை

2. ஐரோப்பியர் நாடுகாண் பயணத்தில் ஈடுபடுவதற்கான காரணங்களை எழுதுக.

# 5 இலங்கையின் கரையோரப் பிரதேசம் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்படல்


**அறிமுகம்**

இலங்கையின் நீண்ட வரலாற்றில் 16 ஆம் நூற்றாண்டு வரை ஏற்பட்ட வெளிநாட்டு செல்வாக்குகள் அண்மையிலுள்ள ஆசிய நாடுகளிலிருந்தே ஏற்பட்டன. எனினும் 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பிய இனத்தவர் முறையே இந்நாட்டிற்கு வந்து அரசியல் வரலாற்றில் பாரிய தாக்கத் தினை ஏற்படுத்தினர். 16 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இந்தியா, பர்மா உட்பட ஆசிய நாடுகள் பல ஐரோப்பியரின் கீழ் இருந்தன. இக்காலகட்டத்தில் இலங்கையிலும் ஐரோப்பியரது செல்வாக்கு ஏற்பட்டது ஆச்சரியமான தொன்றல்ல. இந்த அலகில் போர்த்துக்கேயர் இலங்கைமீது கவனம் செலுத்தியமை, அவர்கள் இங்கு வரும்போது காணப்பட்ட அரசியல் நிலைமை, போர்த்துக் கேயரின் செயற்பாடுகளில் தெளிவாகத் தெரியும் இயல்புகள், அவர்களால் இந் நாட்டின் சமூக, பொருளாதார துறைகளில் ஏற்பட்ட செல்வாக்கு என்பன பற்றிக் கவனம் செலுத்தப்படுகின்றது.


## 5.1 போர்த்துக்கேயர் இலங்கைமீது கவனம் செலுத்துதல்

போர்த்துக்கேய இனத்தைச் சேர்ந்த வாஸ் கொடகாமா இந்தியாவுக்கு வந்து நீண்ட காலம் செல்லும் முன்னரே இலங்கை பற்றிய சில விடயங்களையும் அவர்கள் அறிந்திருந்தனர். இலங்கையில் சிறந்த கறுவா விளைவதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அக்காலத்தில் ஐரோப்பிய சந்தையில் கறுவா போன்ற வாசனைத் திரவியங்களுக்கு நல்ல கேள்வி இருந்ததால் இலங்கை மீது போர்த்துக்கேயர் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

அக்காலத்தில் இலங்கையைப் போர்த்துக் கேயர் ‘‘செய்லான்’’ என்ற பெயராலேயே அறிந்திருந்தனர். போர்த்துக்கேய மன்னன் 1505 ஆம் ஆண்டு பிரான்சிஸ்கோ டீ அல்மேதா எனும் தளபதியைத் தனது இராசப் பிரதிநிதியாக நியமித்தபோது ’’செய்லான்’’ தீவைக் கண்டுபிடிக்க வேண்டும் எனக் கூறியிருந்தான். இவ்வாறு போர்த்துக்கேயர் இலங்கையுடன் தொடர்பை ஏற்படுத்த முயன்ற வேளையில் பிரான்சிஸ்கோ டி அல் மேதாவின் மகன் லோரன்சோ டி அல்மேதா



உரு 5.1 போர்த்துக்கேய கைதிகளைப் பயன்படுத்தி விமலதர்மசூரிய மன்னன் கோட்டை ஒன்றைக் கட்டுவித்தல்




படம் 5.1 16 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இலங்கை

உள்ளிட்ட குழுவினர் 1505 ஆம் ஆண்டு எதிர் பாராத விதமாக இலங்கையை அடைந்தனர்.

**லோரோன்சோ டி அல்மேதா இலங்கைக்கு வருதல்.**

இந்து சமுத்திரத்தில் பயணம் செய்த முஸ்லிம் வர்த்தகக் கப்பலைக் கைப்பற்றும் பணியில் ஈடுபட்டிருந்த லோரோன்சோ டி அல்மேதா உள்ளிட்ட குழுவினர் புயலில் சிக்கி 1505 ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக இந்நாட்டை அடைந்தனர்.

## போர்த்துக்கேயர் வரும்போது இலங்கையின் அரசியல் நிலை

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று இராச்சியங்கள் காணப்பட்டன. எட்டாம் வீர பராக்கிரமபாகு கோட்டை இராசதானியின் அரசனாக இருந்தான். சேனா சம்மத விக்கிரமபாகு கண்டி இராச்சியத்தின் அரசனாகவும், பரராஜசேகரம் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனாகவும் இருந்தனர்.

இவை தவிர்ந்த வன்னித் தலைவர்களின் கீழ் வன்னிப் பிரதேசம் ஆட்சி செய்யப்பட்டது. அப்பிரதேச ஆட்சியாளர்கள் பிரதான இராச்சியத்துக்குப் பணிந்து செயற்பட்டனர். 16 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டிலிருந்த இராச்சியங்களுக்குள் கோட்டை இராச்சியம் முதலிடம் வகித்தது. இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் முதலில் கோட்டை இராச்சியத்தடன் தொடர்பு கொண்டனர்.

## போர்த்துக்கேயருக்கும் கோட்டை இராச்சியத்திற்கும் இடையிலான தொடர்பு

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டையின் அரசனாக இருந்த எட்டாம் வீர பராக்கிரமபாகு வயோதிபனாக இருந்தான். அவனுடைய புதல்வர்களான தர்ம பராக்கிரமபாகு, விஜயபாகு ஆகியோரும் வேறு புதல்வர்களும் இருந்தனர். இளவரசனான தர்ம பராக்கிரமபாகு அரசனுக்கு உதவியாகக் கோட்டையின் நிருவாகத்தை நடாத்தினான். ஏனையோர் இராச்சியத்தின் ஏனைய பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர்.

போர்த்துக்கேயர் கொழும்புத் துறைமுகத்தில் இறங்கியதும் கோட்டை அரசனைச் சந்திக்க தமது தூதுவர்களை அனுப்பியதாகக் கூறப்படுகின்றது. கொழும்புத் துறைமுகத்திற்கும் கோட்டை இராச்சியத்திற்கும் இடையில் நீண்ட தூரம் இருப்பதாகக் காண்பிக்கும் பொருட்டு அரசனின் பிரதிநிதிகள் போர்த்துக்கேய பிரதிநிதிகளைச் சுற்றி வளைத்து அரசமாளிகைக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு ‘‘பறங்கியர் கோட்டைக்குப் போனது போல’’ என்ற கூற்று மக்களிடையே வழக்கில் வந்தது. இவ்வாறு கோட்டையில் ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை நடாத்திய போர்த்துக்கேயர் அந்த இராச்சியத்துடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றனர். இதற்கமைய அரசனின் அனுமதியுடன் வர்த்தகக் களஞ்சியமொன்றை அமைக்க அவர்கள் நடவடிக்கை எடுத்தனர். போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்துடன் தொடர்பு கொண்டு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதை இந்நாட்டிலிருந்த முஸ்லிம்கள் விரும்பவில்லை. போர்த்துக்கேயர் வரும்போது இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வர்த்தக ஏகபோக உரிமை முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தது. முஸ்லிம் வர்த்தகர்கள் கோட்டை மக்களினது உதவியைப் பெற்று போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர். இதனால் போர்த்துக்கேயர் வர்த்தக களஞ்சியத்தைத் தற்காலிகமாக மூடிவிட்டனர்.

இந்நிலையில் கீழைத்தேய நாடுகளில் போர்த்துக்கேய இராசப் பிரதிநிதியின் வேண்டுகோளுக்கு அமைய 1518 ஆம் ஆண்டு கொழும்பில் கோட்டை ஒன்றை அமைக்கப் போர்த்துக்கேயர் முன்வந்தனர்.

1521 ஆம் ஆண்டு விஜயபாகு கொலை எனப்படும் அரசியல் நிகழ்வின் காரணமாக கோட்டை இராச்சியம் பிளவுற்றமையானது போர்த்துக்கேயருக்குச் சாதகமாக அமைந்தது. எட்டாம் வீர பராக்கிரமபாகுவின் பின்னர் கோட்டையின் ஆட்சியாளனாகிய அவனது மகன் 6 ஆம் விஜயபாகுவிற்கு கீரவல்ல பரம்பரையைச் சேர்ந்த முதலாவது பட்டத்து இராணி மூலமாக புவனேகபாகு ரைகம பண்டார மாயாதுன்னே எனும் பெயர்களில் 3 புதல்வர்கள் இருந்தனர். முதலாவது மனைவியின் மரணத்தின் பின்னர் அரசன் மற்றுமொரு அரசியைத் திருமணம் செய்தான். இத்திருமணத்தின் மூலம் பிறந்த மகனே தேவராஜனாவான்.

6 ம் விஜயபாகு மேற்குறிப்பிட்ட 3 புதல்வர்களுக்கும் ஆட்சியுரிமையை வழங்குவது இளவரசன் தேவராஜனுக்கு ஆட்சியுரிமையை வழங்கத் தீர்மானித்ததால் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

தேவராஜ எனும் மகன் விஜயபாகு மன்னன் தனது மூன்று புத்திரர்களுக்கு அரச உரிமையை வழங்காது தேவராஜனுக்கு அரசு உரிமையைக் கொடுக்க முயன்றதன் விளைவாக சிக்கல் ஏற்பட்டது.

புவனேகபாகு உட்பட ஏனைய சகோதரர்கள் கண்டி இராச்சிய அரசனின் உதவியுடன் அரச மாளிகையை முற்றுகையிட்டனர். இவ்வேளையில் விஜயபாகு கொலை செய்யப்பட்டான். இது ''விஜயபாகு கொள்ளை'' எனப்பட்டது. இதன் பின்னர் கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றின் ஆட்சியாளர்கள் பின்வருமாறு,

- கோட்டை - 7ஆம் புவனேகபாகு
- றைகம - றைகம பண்டார
- சீதாவாக்கை - மாயாதுன்னை

விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராச்சியம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு நீண்ட காலம் செல்லும் முன்னரே கோட்டை இரச்சியத்திற்கும், சீதாவாக்கை இராச்சியத்திற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. புவனேகபாகு தனக்குப் பின்னர் தனது பேரனான தர்மபாலனுக்குக் கோட்டை இராச்சியத்தை உரிமையாக்குவதற்கு நட வடிக்கை எடுத்தமையும் மயாதுன்னை அதற்கு எதிராக இருந்தமையும் அதற்கான முக்கிய காரணமாகும். சீதாவாக்கையின் ஆட்சியாளனான மாயாதுன்னை றைகம பண்டாரவின் மரணத்தின் பின்னர் றைகம பிரதேசத்தைத் தன் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டதுடன் கோட்டை இராச்சியத்திலும் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றான். இந்த சந்தர்ப்பத்தில் புவனேகபாகு மன்னன் தனது பாதுகாப்பின் பொருட்டு போர்த்துக்கேயரின் துணையை நாடினான். தற்செயலாக இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் பாதுகாவலராக அதன் நடவடிக்கைகளில் இவ்வாறாக தலையிட ஆரம்பித்தனர்.

ஏழாம் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியை நாடியபோதிலும், அவன் போர்த் துக்கேயருக்குச் சாதகமாக இருக்க வில்லை. கோட்டை இராச்சியத்தின் வர்த்தகப் பொருள் களை போர்த்துக்கேயர் மிகக் குறைந்த விலைக்கு வாங்கியமை, கோட்டை மக்களுக்கு அவர்களால் இழைக்கப்பட்ட அநீதியான செயல்ளகள் என்பனவற்றால் போர்த்துக்கேயர் தொடர்பாக மன்னன் மனமுறிவுற்றிருந்தான். அதன் இறுதி விளைவாகப் போர்த்துக்கேயப் படைவீரன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டினால் 7 ஆம் புவனேகபாகு இறந்தான். 1551 ஆம் ஆண்டு தர்மபால கோட்டையின் ஆட்சியாளனானான்.

> புவனேகபாகுவின் மகளான சமுத்ரா தேவி வீதியபண்டாரவைத் திருமணம் செய்திருந்தாள். சமுத்ராதேவியின் மகனான தர்மபால அவர்களது பிள்ளையானபடியால் புவனேகபாகுவின் பேரனாவான்.

7 ஆம் புவனேகபாகு மன்னன் உயிருடன் இருக்கும் போதே தர்மபால இளவரசனின் தங்கச் சிலை ஒன்றை போர்த்துக்கலுக்கு அனுப்பி அந்நாட்டு அரசன் மூலம் அதற்கு முடிசூட்டுவித்தான். இதன்மூலம் கோட்டை இராச்சியத்தின் எதிர்கால மன்னன் தர்ம பாலன் எனப் போர்த்துக்கேயர் ஏற்றுக் கொண்டனர். தர்மபாலன் கோட்டையின் ஆட்சியாளன் ஆனதுடன் அவனது பாது காவலராக விளங்கிய போர்த்துக்கேயரின் அதிகாரம் எல்லா வழிகளிலும் அதிகரித்தது. போர்த்துக்கேயரின் விருப்பப்படி செயற்பட்ட இந்த மன்னன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவி தொன் ஜுவான் தர்மபாலன் என்ற பெயரைச் சூடிக் கொண்டான்.



உரு 5.2 போர்த்துக்கேயரால் ஏழாம் புவனேகபாகு மன்னனின் பேரப்பிள்ளையான தர்மபால இளவரசனுக்கு முடிசூட்டப்படுதல்

இவ்வாறு தமது அரசன் அந்நிய மதத்தைத் தழுவியமையால் கோட்டை இராச்சியத்தின் மக்கள் மனமுடைந்ததாகத் தெரிகின்றது. கோட்டையில் இருந்த தலதா மாளிகையில் வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவுக்குப் பாது காப்பு இல்லாதிருந்தமையால் ஹிரிப்பிட்டி யரால எனும் தியவடன நிலமே அதனை சீதாவாக்கைக்கு எடுத்துச் சென்றான். புத்தவங்சபிக்கு உட்பட ஏனைய பௌத்த பிக்குகள் மாயா துன்னைக்கு ஆதரவு வழங்கியதுடன், கோட்டை இராச்சியத்தின் மக்களில் பெரும்பாலானோரின் ஆதரவு சீதாவாக்கை மன்னனுக்குக் கிடைத்தது.

தர்மபாலன் கோட்டையின் ஆட்சியாளனாக இருந்த காலத்தில் போர்த்துக்கேயர் தாம் விரும்பியபடி செயற்பட்டனர். மேலும் கோட்டை மக்களின் பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, தமது பொருள்களை அதிக விலைக்கு விற்று இலாபம் அடைந்தனர். தர்மபாலனின் தந்தை யான வீதியபண்டாரன் அதனை எதிர்த்த போதிலும் தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகச் செயற்பட்டான்.

சீதாவாக்கை மன்னனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் விளைவாகத் தர்மபாலன் 1565 ஆம் ஆண்டு கோட்டை நகரைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. போர்த்துக்கேயரின் பாதுகாப்பின் கீழ் தர்மபால மன்னன் கொழும்புக் கோட்டையில் வாழ்ந்தான்.

1580 ஆம் ஆண்டு தர்மபாலன் மரண சாச னத்தின் மூலம் கோட்டை இராச்சியத்தை போர்த்துக்கேயருக்கு உரிமையாக்கினான். இதற்கமைய 1597 ஆம் ஆண்டு தர்மபாலனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்கு உரிமையானது.



**அசவேது**

பெட்ரோ லோப்ஸ் டி சூஸா எனும் போர்த்துக்கேய தளபதி தந்துரே போரில் இறந்ததும் அவனது பதவிக்கு நியமிக்கப் பட்டவனே தொன் ஜெரனிமோ டி அசவேது ஆவான். அவன் பதவியேற்ற போது கரை யோரப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டனர். இதனால் கோட்டை இராச்சியத்தின் மக்களை அடக்குவதற்கு அசவேது கடும் நடவடிக்கை எடுத்தான்.

தர்மபால மன்னனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியத்தின் நிருவாக அதிகாரி களை மல்வானைக்கு அழைத்த அசவேது அவர்களுடன் கலந்துரையாடிக் கோட்டை இராசதானியின் எதிர்கால நிருவாகத்தை முன்னெடுத்துச் செல்லும் முறை பற்றி இணக் கத்துக்கு வந்தான். இது 1597 மல்வானை உடன்படிக்கை எனப்படும்.

## சீதாவாக்கை இராசதானி

1521 ஆம் ஆண்டு நடைபெற்ற விஜயபாகு கொலையின் விளைவுகளில் ஒன்றாக சீதா வாக்கை இராச்சியம் தோற்றம் பெற்றது. சீதாவாக்கை என்பது தற்போதைய அவிசா வளை நகருக்கு அண்மையில் களனி கங்கையின் படுக்கையில் உள்ள பிரதேசமாகும். முன்னர் கோட்டை இராசதானியின் கீழிருந்த இப்பிரதேசத்தில் சீதாவாக்கை நகரை மாயா துன்னை கட்டி யெழுப்பினான். அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் சீதாவாக்கை இராச தானியை அமைத்தான்.

## மாயாதுன்னை மன்னன்

சீதாவாக்கை இராசதானியின் ஆரம்ப ஆட்சி யாளன் மாயாதுன்னை ஆவான். இவன் 6 ஆம் விஜயபாகு மன்னனின் மகனாவான். 1521 - 1581 ஆம் ஆண்டு வரை இவன் சீதாவாக்கை இராச தானியை ஆட்சி செய்தான். இவன் ஆரம்பம் முதற்கொண்டு போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டான். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்து கோட்டை இராசதானியுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தியமை இந்நாட்டின் வர்த்தகர்களுக்குப் பாதகமாக அமைந்தது. இதனால் போர்த்துக்கேயருக்கு எதிராக முஸ்லிம்களின் ஆதரவு மாயாதுன்னைக்குக் கிடைத்தது. இந்தியாவின் கரையோரப் பிரதேசத்தில் இருந்த கள்ளிக்கோட்டை இராச்சியத்தின் ஆட்சியாளனாக இருந்த சமோரினினது உதவியை மாயாதுன்னை பெற்றுக்கொள்வதற்கும் இது காரணமாகியது.

மாயாதுன்னை மன்னன் தனது ஆட்சிக் காலத் தில் சீதாவாக்கை இராச்சியத்தின் அதிகாரத் தைப் பரவலடையச் செய்தான். றைகம இராச்சியத்தின் ஆட்சியாளனான றைகம பண்டாரவின் மரணத்தின் பின்னர் அந்த இராச்சியத்துக்கு உரிய பிரதேசங்களை மாயாதுன்னை சீதாவாக்கை இராச்சியத் துடன் இணைத்துக் கொண்டான், கோட்டை இராச்சியத்துடன் போரிட்டு அந்த இராச

தானிக்கு உரிய பிரதேசங்கள் பலவற்றில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட மாயா துன்னை நடவடிக்கை எடுத்தான். கள்ளிக் கோட்டை சமோரினினது உதவியைப் பெற்று மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராகப் பல சந்தர்ப்பங்களில் போர் செய்த போதிலும், போர்த்துக்கேயரின் கடற்படை வலிமையால் அவனுக்கு சாதகமான விளை வுகள் ஏற்படவில்லை.

மாயாதுன்னைக்கு டிக்கிரி பண்டார எனும் மகன் இருந்தான். தந்தையின் மரணத்தின் பின்னர் அவன் முதலாம் இராஜசிங்கன் எனும் பெயரில் சீதாவாக்கையின் அரசனானான். தந்தையைப் போலவே சிறந்த போர் வீரனாக இருந்த டிக்கிரி பண்டார, தனது இளமைப் பருவத்திலிருந்தே தந்தையின் போர் நட வடிக்கைகளுக்கு உதவினான். மாயாதுன் னையின் வயோதிப காலத்தில் இவன் தந்தையின் அரச நிருவாகத்தைக் கொண்டு நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

## முல்லேரியாப் போர்

சீதாவாக்கை இராச்சியத்தின் வரலாறு போர்களால் நிறைந்ததாகும். போர்த்துக் கேயருடனும் கோட்டை மற்றும் கண்டி இராச்சியங்களுடனும் சீதாவாக்கை ஆட்சி யாளர்கள் இடையிடையே சண்டையிட்டனர். அவற்றில் முல்லேரியாப் போர் முக்கிய இடத் தினை வகிக்கின்றது.

முல்லேரியாப் போர் நடைபெற்ற வேளையில் சீதாவாக்கைப் படைக்குத் தலைமை தாங்கியவன் டிக்கிரி பண்டார என்னும் முதலாம் இராஜசிங்கன் ஆவான். வீதிய பண்டாரனுடன் போர் செய்து வெற்றி பெற்ற அவன் தைரியத்துடன் தனது படைக்குத் தலைமை தாங்கி படையை நடாத்திச் சென்றான். இக்கால கட்டத்தில் தர்மபாலன் போர்த்துக்கேய படை மற்றும் கோட்டைப் படையின் ஒரு பகுதியினதும் ஆதரவுடன் சீதாவாக்கை இராச்சியத்தை ஆக்கிரமிக்க முயன்றதாக இராஜாவலியில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதற்குப் பதிலடியாக சீதாவாக் கைப் படையும் போருக்குத் தயாரானது. இரு தரப்பினரது படைகளும் முல்லேரி யாவில் சந்தித்ததால் அங்கு கடும்போர் ஏற்பட்டது. சீதாவாக்கைப் படை மிகவும் திறமையுடனும், உபாயங்களுடனும் போர்த்துக்கேயரைச் சுற்றி வளைத்துத் தாக்கிய தால் அந்தப்போரில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்தனர். போர்த்துக்கேயர் கீழைத் தேசத்தில் அடைந்த பெரும் தோல்வி இதுவாகும். போர்த்துக்கேயரில் 1600 பேர் மரணமடைந்ததாக ராஜாவலியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## முதலாம் இராஜசிங்க மன்னனும் சீதாவாக்கையின் அதிகாரப் பரவலும்

மாயாதுன்னையின் மரணத்தின் பின்னர் 1581 ஆம் ஆண்டு முதலாம் இராஜசிங்கன் சீதாவாக்கையின் அரசனானான். தந்தையைப் போலவே போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்ட இவன் சீதாவாக்கை இராச்சியத் தின் அதிகாரத்தைப் பரவலடையச் செய்ய நடவடிக்கை எடுத்தான். அரசனாகி சிறிது காலத்தில் அவன் கண்டி இராச்சியத்தின் அரச னான கரலியத்த பண்டாரவைத் துரத்தி விட்டு, அந்த இராச்சியத்தையும் சீதாவாக்கையுடன் இணைக்க முயன்றான். அதன்படி 1582 ஆம் ஆண்டளவில் இந்நாட்டில் போர்த்துக்கேயரது ஆட்சியைக் கொழும்புக் கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளுக்கு மட்டும் மட்டுப் படுத்தகூடியனவாக முதலாம் இராஜசிங்க மன்னன் விளங்கினான். அவன் இரண்டு முறை கொழும்புக் கோட்டையை ஆக்கிரமித்துப் போர்த்துக்கேயரை இந் நாட்டிலிருந்து துரத்த முயன்றான். போர்த்துக்கேயரிடமிருந்த ஆயுத பலமும், கடற்படை வலிமையும் காரணமாக அந்த முயற்சிகளில் எதிர்பார்க்கப்பட்ட பலனை அடைய முடியவில்லை.



உரு 5.4 சீதாவாக்கை இராச்சிய காலத்தில் கட்டப்பட்ட பெரண்டி கோவில்

1587 ஆம் ஆண்டு இராஜசிங்க மன்னன் இரண்டாம் முறையாக கொழும்புக் கோட்டையை ஆக்கிரமித்த சந்தர்ப்பத்தில் வாவியின் நீரைக் கால்வாய் மூலம் கடலுக்கு அனுப்பி, கோட்டையினுள் பிரவேசிக்கக் கடும் முயற்சி எடுத்தான். பல மாதங்களாக கொழும்புக் கோட்டையைத் தாக்கி, சீதாவாக்கைப் படை கோட்டைக்குள் பிரவேசிக்க முயன்றும் போர்த்துக்கேயரின் கடற்படை வலிமை காரணமாக மன்னனின் முயற்சி வெற்றி பெற வில்லை. எவ்வாறாயினும் முதலாம் இராஜ சிங்க மன்னனின் காலத்தில் சீதாவாக்கை இராச்சியத்தின் அதிகாரம் உயர்ந்த நிலையில் இருந்தது. இவ்வாறு சீதாவாக்கையின் எழுச்சிக்கு வழிவகுத்த காரணிகள் சில உள்ளன.

### சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கான காரணிகள்

- ***மாயா துன்னையினதும் முதலாம் இராஜ சிங்கனினதும் வீரம்***

தந்தையும் மகனும் சிறந்த போர் வீரர்களாக இருந்தனர். கோட்டை இராச்சியத்துடனும் போர்த்துக்கேயருடனும் போர் செய்து தமது எல்லைகளை விரிவுபடுத்தினர்.

- ***தந்ததாது சீதாவாக்கைக்குக் கொண்டு செல்லப்பட்டமை.***

கோட்டை இராச்சியத்தின் மன்னனான தர்ம பாலன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியதும், அக்காலத்தில் தந்ததாதுவின் பொறுப்பாளனாக இருந்த பிரதானியான ஹிரிபிட்டிய ரால என்பவன் தந்ததாதுவை சீதாவாக்கைக்குக் கொண்டு சென்றான். தந்ததாதுவுக்கு உரிய ஆட்சியாளன் நாட்டின் உரிமையுடைய அரசன் என ஏற்றுக் கொள்ளப்பட்டதால் பௌத்த பிக்குகள் உட்பட பௌத்த மக்களின் ஒத்துழைப்பு சீதாவாக்கைக்குக் கிடைத்தது.

- ***சீதாவாக்கை மன்னர்கள் பின்பற்றிய போர்த்துக்கேய எதிர்ப்புக் கொள்கை***

சீதாவாக்கை மன்னர்கள் இருவருமே போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றினர். போர்த்துக்கேயரின் செயற்பாடுகளால் கரையோரப் பிரதேச மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் துன்பத்திற்கு உள்ளான முஸ்லிம்களும், ஏனைய கரையோரப் பிரதேச மக்களில் பெரும்பான்மையினரும் சீதாவாக்கைக்கு ஆதரவு வழங்கினர்.

## ✧ றைகம இராச்சியமும், கண்டி இராச்சியமும் சீதாவாக்கையுடன் இணைக்கப்படல்

றைகம பண்டார இறந்ததும் மாயாதுன்னையால் றைகம இராச்சியத்திற்கு உரிய பிரதேசங்கள் சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டன. அவ்வாறே முதலாம் இராஜசிங்க மன்னன், கண்டி ஆட்சியாளனான கரலியத்த பண்டாரவைத் துரத்திவிட்டு அந்த இராசதானியையும் சீதாவாக்கையுடன் இணைத்துக் கொண்டான். இவை சீதாவாக்கை இராசதானியின் அதிகாரம் பரவலடைய வழிவகுத்தன.

## ✧ கோட்டை இராச்சியத்தின் வீழ்ச்சி

ஏழாம் புவனேகபாகு மன்னனுக்குப் பின்னர் கோட்டை இராச்சியம் விரைவாக வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக விளங்கினான். இதனால் கோட்டை இராச்சியம் எதிர்நோக்கிய சவால்களை வெற்றி கொள்ள அவனால் முடியவில்லை. கோட்டை மக்களில் பலர் சீதாவாக்கைக்கு ஆதரவு வழங்கினர். அந்த இராச்சியத்திற்கு உரிய பிரதேசத்தில் பெரும்பகுதி படிப்படியாக சீதாவாக்கை இராச்சியத்திற்கு உட்பட்டது. சீதாவாக்கை இராச்சியத்தால் அடிக்கடி ஏற்பட்ட தாக்குதல்களின் விளைவாக 1565 ஆம் ஆண்டு கோட்டை நகரைக் கைவிட்டுவிட வேண்டிய நிலை தர்மபாலனுக்கு ஏற்பட்டது.

## சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சி

முதலாம் இராஜசிங்க மன்னனின் கீழ் சீதாவாக்கை இராச்சியம் பலம் அடைந்த போதிலும் அவனது இறுதிக் காலத்தில் அவன் பின்பற்றிய சில கொள்கைகள் காரணமாக அந்த இராச்சியம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது. சீதாவாக்கை ஆட்சியாளர்கள் அடிக்கடி மேற்கொண்ட போர்கள், இராஜசிங்க மன்னனின் பௌத்த எதிர்ப்பு நடவடிக்கைகள், கண்டி இராச்சியத்தை சீதாவாக்கையுடன் இணைப்பதற்கு உதவிய வீர சுந்தர பண்டாரவைக் கொன்றமை, இராஜசிங்க மன்னனுக்குப் பின்னர் ஆட்சிக்கு உரிமையுடைய ஆட்சியாளன் இல்லாமை என்பன சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த காரணிகளுட் சிலவாகும்.



உரு 5.5 பெதங்கொட பூங்காவில் இன்று காணப்படும் முள்மூங்கில் புதர்.

அவ்வாறே முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் கீழ் கண்டி இராச்சியம் சீதாவாக்கை இராச்சியத்திலிருந்து விடுவிக்கப்பட்டு சுயாதீன அரசாகச் செயற்பட்டமையும் சீதாவாக்கையின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

முதலாம் இராஜசிங்க மன்னன் விமலதர்ம சூரிய மன்னனுடன் செய்த போரில் தோற்கடிக்கப்பட்டு சீதாவாக்கையை நோக்கி வரும்பொழுது பெத்தங்கொட பூங்காவில் வைத்துக் காலில் மூங்கில் முள் குத்தியதால் ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்தான். முதலாம் இராஜசிங்கனுக்குப் பின்னர்

சீதா வாக்கை இராச்சியத்திற்கு முறையான அரசுரிமையாளன் இல்லாமையினால் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாது போனது. இதனால் இராஜசிங்க மன்னன் இறந்து சிறிது காலத்துள் சீதாவாக்கைக்கு உரிய பிரதேசங்களில் பெரும்பாலனவை போர்த்துக் கேயரது நிர்வாகத்தின் கீழ் வந்தது.

## கண்டி இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான தொடர்பு

சேனாசம்மத விக்கிரமபாகுவிற்குப் பின்னர் அரசனான ஜயவீர கண்டி அரசனாக செயற் பட்ட காலத்தில் சீதாவாக்கையின் அரச னாக இருந்த மாயாதுன்னையால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக ஜயவீர மன்னன் போர்த்துக்கேயரின் உதவியைப் பெற முயன்றான். ஜயவீர மன்னனின் வேண்டு கோளின்படி போர்த்துக்கேயர் கண்டி இராச்சி யத்திற்கு சென்ற பொழுதிலும் கோட்டை ஆட்சியாளனான ஏழாம் புவனேக பாகு மன்னனின் தலையீட்டினால் போர்த்துக்கேய ருக்கும், ஜயவீர மன்னனுக்கும் இடையில் நல்லெண்ணம் ஏற்படவில்லை.

ஜயவீர மன்னனுக்குப் பின்னர் கண்டி இராச்சியத்தின் ஆட்சிக்கு வந்த கரலியத்த பண்டார போர்த்துக்கேயருடன் தொடர்பை ஏற்படுத்தி அவர்களது பாதுகாப்பைப் பெற முயன்றான். எனினும் கண்டிப் பிரதானிகளின் உதவியைப் பெற்று சீதாவாக்கை இராச சிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை சீதாவாக்கை யுடன் இணைத்ததால் கரலியத்த பண்டாரனின் எண்ணம் நிறைவேறவில்லை. மேலும் அவன் பாதுகாப்புக் கருதி போர்த்துக்கேயரிடம் அடைக்கலம் புகுந்தான். அவ்வேளையில் இராஜசிங்கனின் தந்திரத்தால் கொலை செய்யப்பட்டவனான வீரசுந்தர பண்டாரவின் மகன் கோணப்பு பண்டார பாதுகாப்புக் கோரி போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தான்.

## போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தல்

சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு சவா லாக இருந்தது கண்டி இராச்சியமாகும். கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவது போர்த்துக் கேயரின் பிரதான நோக்கமாக இருந்தது. பல சந்தர்ப்பங்களில் போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். போர்த்துக் கேயரின் கண்டி இராச்சிய ஆக்கிரமிப்புத் தொடர்பான விபரம் அட்டவணையில் தரப் பட்டுள்ளது.

இந்த அட்டவணையைப் பார்க்கும் போது கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் பொருட்டுப் போர்த்துக்கேயர் நான்கு ஆக்கிர மிப்புக்களை மேற்கொண்டனர். அவைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. கண்டி இராச்சியத்தின் ஆக்கிரமிப்புக்குத் தலைமை தாங்கிய போர்த்துக்கேய கப்டன் களில் ஜெரனிமோத அசவேதுவைத் தவிர ஏனைய அனைவரும் போரில் உயிர் துறந்தனர். இவ்வாறு கண்டி இராச்சியம் மீது போர்த்துக்கேயர் மேற்கொண்ட அனைத்து ஆக்கிரமிப்புக்களும் தோல்வியடைவதற்கான காரணங்கள் பல உள்ளன.

| வருடம் | கண்டி அரசர்கள் | போர்த்துகேயப் படையை நடாத்திச் சென்றவர் | போர்த்துக்கேயர் தோல்வியடைந்த இடம் |
|---|---|---|---|
| 1594 | முதலாம் விமலதர்ம சூரியன் | பேரோ லோபேஸ் த சூசா | தந்துரே |
| 1602 | முதலாம் விமலதர்ம சூரியன் | தொன் ஜெரோனிமோத அசவேது | பலன |
| 1630 | செனரத் (போரை நடாத்தியன் மகா ஆஸ்தான இளவரசன் இரண்டாம் இராஜசிங்கன்) | கொன்ஸ்தாந்தினுத சூசா | ரந்தெனிவெல |
| 1638 | இரண்டாம் இராஜசிங்கன் | தியோகோத மேலோ | கன்னொருவ |

உரு 5.1 போர்த்துக்கேயரின் கண்டி இராச்சியம் மீதான ஆக்கிரமிப்புக்கள்

- **பகைவரின் ஆக்கிரமிப்பின்போது கண்டி இராச்சிய மக்களின் ஒத்துழைப்பு முழுமையாக மன்னனுக்குக் கிடைத்தமை**

உதாரணம் : பேரோ லோபேஸ் த சூசா மேற்கொண்ட ஆக்கிரமிப்பின்போது கண்டியின் அரசியாக (டோனா கத்திரின்) குசுமாசன தேவியைப் பிரகடனம் செய்தபோதிலும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளாது முதலாம் விமலதர்ம சூரியனுக்குப் பூரண ஒத்துழைப்பை நல்கினர்.

- **கண்டி இராச்சிய மக்களின் போர்த் தந்திரங்களும் அரசர்களின் உபாயமும்**

உதாரணம் : ஆக்கிரமிப்புக்களின்போது மன்னன் கண்டி நகரைக் கைவிட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று மீண்டும் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு போர்த்துக் கேயரைப் பொருத்தமான இடத்தில் சுற்றி வளைத்துத் தாக்குதல்.

- **போர்த்துக்கேயரின் உதவிக்குச் சென்ற கரையோர சுதேச மக்கள் கண்டியில் வைத்து அரசனுடன் இணைதல்**

உதாரணம் : போர்த்துக்கேயரின் அனைத்து ஆக்கிரமிப்புக்களிலும் இது நடைபெற்றது. அசவேதுவின் ஆக்கிரமிப்பின் போது கரையோரப் பிரதேசத்திலிருந்து சென்ற பெருந் தொகையானோர் அரசனோடு இணைந்ததால் போரில் எஞ்சிய படை வீரருடன் அசவேது பின்வாங்க வேண்டியநிலை ஏற்பட்டது.

- **கண்டி இராச்சியத்ததின் இயற்கை அமைப்பும் பௌதிக சூழலும் கண்டி மக்களுக்குச் சாதகமாக இருந்தமை**

உதாரணம் : போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசப் போர்களில் சிறந்து விளங்கினர். கண்டியில் அமைந்துள்ள மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள், காடுகள் என்பன கண்டி மக்களுக்குப் பரிச்சயமானவை. கண்டிய மக்களின் திடீர்த் தாக்குதல், வீதித் தடைகள், மறைந்திருந்து தாக்குதல் என்பன போர்த்துக்கேயருக்குப் பாதகமாக அமைந்தன.

## யாழ்ப்பாண இராச்சியமும் போர்த்துக்கேயரும்

இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் வட பிரதேசத்தை அண்மித்து யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெற்றதுடன் ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற அரச பரம்பரையினர் அதன் ஆட்சியை நடாத்தினர். மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் கோட்டை இராசதானியின் கீழ் வந்த பொழுதிலும் பின்னர் அது சுதந்திர அரசாகியது. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்பொழுது பரராசசேகரன் எனும் அரசன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்தான். 1519 ஆம் ஆண்டு முதலாம் சங்கிலி மன்னன் இதன் அரசனானதுடன் அவனது காலத்தில் போர்த்துக்கேயருடனான மோதல்கள் ஆரம்பமாகின. போர்த்துக்கேய

குருமார் யாழ்ப்பாண இராச்சியத்தின் சில பிரதேசங்களில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்ப முயன்றதால் சங்கிலி மன்னன் அதனை எதிர்த்தான். இதனால் 1543, 1560 ஆகிய ஆண்டு களில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்திற்குப் படைகளை அனுப்பினர். எனினும் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருடன் பேச்சு வார்த்தை நடத்தி மீண்டும் சமாதானத்தை ஏற் படுத்திக் கொண்டான்.

யாழ்ப்பாண அரசர்களில் சிலர் கண்டி அரசர் களுடனும் இந்தியாவுடனும் தொடர்பினை ஏற்படுத்தியமையைப் போர்த்துக்கேயர் விரும்பவில்லை. 1619 ஆம் ஆண்டு போர்த் துக்கேயர் பிலிப் த ஒலிவேராவின் தலை மையில் படையை அனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினர்.




யாழ்ப்பாணத்தில் நல்லூர் கோவிலுக்கு சற்று தொலைவில் அமைந்துள்ள யமுனா ஏரி 14ம் நூற்றாண்டளவில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

சங்கிலி மன்னனின் நீண்ட கால ஆட்சி 1561 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் யாழ்ப்பாண அரசின் உரிமை தொடர்பாகக் கடுமையான குழப்பம் ஏற்படத் தொடங்கியது. அதில் சிலர் போர்த்துக்கேயரின் உதவியை நாடியதால் போர்த்துக்கேயருக்கு சாதகமானவர்களை யாழ்ப்பாணத்தின் சிங்காசனத்தில் அமரச் செய்யக் கூடியதாக இருந்தது.

## 5.2 போர்த்துக்கேயரின் அரசியல் பொருளாதார பண்பாட்டு நடவடிக்கை

### ✧ கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக் கேயரின் நிர்வாகம்

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் பொழுது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களில் அந்தந்த இராச்சியங்களுக்குத் தனித்துவமான நிர்வாக முறை நிலவியது. போர்த்துக்கேயர் முதன்முதல் தொடர்பினை ஏற்படுத்திய கோட்டை இராச்சியத்துக்கு உரித்தான பிரதேசம் நான்கு திசா வனிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை கீழே காட்டப் பட்டுள்ளன.




1597 ஆம் ஆண்டு தர்மபாலனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியத்திற்கு உரிய பிரதேசங்களில் போர்த்துக்கேயரது நிர்வாகம் ஆரம்பமானது. இந்த ஆண்டில் போர்த்துக் கேயக் கப்டன் ஜெனரலாக இருந்த அசவேது கோட்டை மக்கள் பிரதானிகளை மல் வானைக்கு அழைத்து எதிர்காலத்தில் ஆட்சி யைக் கொண்டு செல்லும் முறைபற்றிக் கலந்துரையாடினான். அதில் அதுவரை நிலவிய நிர்வாக முறையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான உடன்பாடு ஏற்பட்டது. அது மல்வானை உடன்படிக்கை எனப்படும். கோட்டை இராச்சியத்தில் நீண்ட காலமாக நிலவிவந்த நிர்வாக முறை மக்க ளுக்குப் பழக்கப்பட்டதாக இருந்ததுடன் அது போர்த்துக்கேயரின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கும் போது மானதெனப் போர்த்துக்கேயர் அறிந்திருந்தனர். இதன்படி போர்த்துக்கேயரால் மரபு ரீதியிலான நிர்வாகம் சிறியளவிலான மாற்றங்களுடன் செயற்படுத் தப்பட்டது.

மரபு ரீதியான நிர்வாகத்திற்கு அமைய திசா வனிகள் நிர்வாகத்தின் வசதிக்காக கோறளை, பற்று, கிராமம் என உப பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டன.

| | | |
|---|---|---|
| திசாவனி | - | திசாவை |
| கோறளை | - | கோறளை விதானை |
| பற்று | - | அத்துகோறளை |
| கிராமம் | - | கிராமத் தலைவன் |

## போர்த்துக்கேயர் ஆட்சியின் சிறப்பம்சங்கள்

போர்த்துக்கேயரின் நிர்வாக முறைப்படி அவர்களின் கீழிருந்த இந்நாட்டின் பிரதே சங்களின் உயர் ஆட்சி அதிகாரம் போர்த்துக்கல் மன்னனுக்கு உரித்தானது. போர்த்துக்கல் மன்னனின் ஆணைப்படி ஆசியாவிலுள்ள போர்த்துக்கேயருக்கு உரிய பிரதேசங்களை நிர்வகிக்கும் மத்திய நிலையம் இந்தியாவின் கோவாவில் இருந்தது. போர்த்துக்கல் மன்னனால் நியமிக்கப்பட்ட இராசப் பிரதிநிதி அல்லது விசுகர் என்பவர் கோவாவில் போர்த்துக்கேய மத்திய நிலையத்தில் செயலாற்றினார். இதற்கமைய போர்த்துக்கல் அரசனைத் தவிர ஆசியாவில் இருந்த உயர் போர்த்துக்கேய அதிகாரி கோவாவில் இருந்த இராசப் பிரதிநிதி ஆவான். இந்நாட்டின் போர்த்துக்கேய அதிகாரிகளின் தலைவன் 'கப்டன் ஜெனரல்' என அழைக்கப்பட்டான். போர்த்துக்கல் மன்னனால் கப்டன் ஜெனரல் நியமிக்கப்பட்டான். கப்டன் ஜெனரலுக்கு உதவும்பொருட்டு ஆலோசனைச் சபை இருந்தது. இந்நாட்டில் போர்த்துக்கேயருக்கு உரிய பிரதேசத்தில் செயற்படும் அதிகாரம் கப்டன் ஜெனரலுக்கு வழங்கப்பட்டது.



உரு 5.7 போர்த்துக்யேரின் செல்வாக்கால் இந்நாட்டின் ஆடை அணிகளில் ஏற்பட்ட மாற்றம்

## போர்த்துக்கேயரின் ஆட்சியில் பொருளாதார நடவடிக்கை

வர்த்தகத்தின் மூலமும் குடியேற்ற நாடுகளின் செயற்பாடுகளின் மூலமும் உச்ச இலாபத்தைப் பெற்றுக் கொள்ளுதல் போர்த்துக்கேயரின் பிரதான நோக்கமாக அமைந்தது. இதனால் அவர்களது ஆட்சிக் காலத்தில் வருமானம் ஈட்டுவதில் விசேட கவனம் செலுத்தப் பட்டது. போர்த்துக்கேயரின் பொருளாதாரப் பிரிவு விடோர் த பெசென்டா எனும் விசேட அதிகாரியின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டது. போர்த்துக்கேயரின் பொருளாதார செயற் பாடுகள் முக்கிய இரண்டு பிரிவுகளின்கீழ் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

- வருமானத்தை சேகரித்தல்.
- வர்த்தகப் பொருள்களை வெளிநாடுக ளுக்கு ஏற்றுமதி செய்தல்.

வருமான நிர்வாகம் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டது. வருமான வழிகள் தொடர்பான தகவல்களை (நிலம் தொடர் பானவை) எழுதி வைப்பது சிறந்த இயல்பாக இருந்தது. அந்தப்பதிவுகள் தோம்பு எனப் பட்டது.

போர்த்துக்கேயர் கறுவா பயிரிடவில்லை. இயற்கையாகவே விளைந்த கறுவாவைப் பெற்று வர்த்தகம் புரிந்தனர்.

கறுவா வர்த்தகத்தில் அவர்கள் காட்டிய அக்கறை காரணமாக அதற்கெனத் தனியான திணைக்களம் ஒன்று நிறுவப்பட்டது. அது மகாபத்தே திணைக்களம் எனப்பட்டது. மகாபத்தே கப்டன் இந்த திணைக்களத்தின் தலைவராவார்.

கிராமங்களில் கறுவா உரிப்போரின் செயற்பாடு களுக்கு இந்த அதிகாரி பொறுப்பாக இருந்தார். பாக்கு, மிளகு, யானை, முத்து, மாணிக்கம் என்பன மூலமும் போர்த்துக்கேயர் வருமானம் பெற்றனர். ஏற்றுமதியின் பொருட்டு இவற்றைக் சேகரித்தல் சிறிய அதிகாரிகளின் செயற்பாடாக இருந்தது.

வருமானம் சேகரிக்கும் பொருட்டு

கணக்குப்பிள்ளை
எழுதுவினைஞர்
மயோரால

எனும் சிறிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

பாக்கு, மிளகு என்பன விற்கும் உரிமை போர்த்துக்கேய அரசாங்கத்துக்கு மட்டும் சொந்தமாகியது. யானை, முத்து, இரத்தினக்கல்

என்பனவற்றின் வர்த்தக உரிமை சுதேச மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருக்கவில்லை. வர்த்தக ஏகபோக உரிமை போர்த்துக்கேய அரசாங்கத்திடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதனால் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் போர்த்துக்கேயர் பெருஞ் செல்வத்தினை சம்பாதித்தனர்.

## போர்த்துக்கேயரின் ஆட்சியில் கத்தோலிக்க சமயம் பரவுதல்

தாம் கைப்பற்றிய நாடுகளில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல் போர்த்துக்கேயரின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதனால் போர்த்துக்கேயருக்கு உரிய பிரதேசங்களில் சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் உதவி கிடைத்தது.

## சமயக் குழுக்கள் இலங்கைக்கு வருகை தரல்

சமயம் பரப்பும் நடவடிக்கைகளில் பல்வேறு சமயக் குழுக்களைச் சேர்ந்த குருமார் பெருஞ் சேவையாற்றினர். இதன்பொருட்டு நான்கு சமயக் குழுக்களைச் சேர்ந்த குருமார் போர்த்துக்கேயரது ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்தனர். அவர்கள் மறைபரப்பாளர்கள் (மிசனரிமார்கள்) எனப்பட்டனர்.

- பிரான்சிஸ்கன் சபை
- டொமினிக்கன் சபை
- அகஸ்தீன் சபை
- இயேசு சபை

பிரான்சிஸ்கன் சபையே இந்நாட்டிற்கு முதன் முதல் வந்த மிசனரிமார்கள். இலங்கைக்கு வந்த சமயக் குழுவினர் பல்வேறு பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்து சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

| | |
|---|---|
| மாத்தறை | - பிரான்சிஸ்கன் சபை |
| நான்கு கோறளை | - அகஸ்தீன் சபை |
| ஏழு கோறளை | - இயேசு சபை |
| சப்பிரகமுவ | - டொமினிக்கன் சபை |

கப்டன் ஜெனரலின் ஆலோசனைச் சபையில் குருமார் இருந்தமையானது சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆரம்ப காலம் முதற் கொண்டே மனந்தளராது முயற்சியுடன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

உதாரணமாக - தர்மபாலனைக் கத்தோலிக்க சமயத்திற்கு மாற்றுதல் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றாகும்.

மக்களைக் கத்தோலிக்க சமயத்திற்கு மாற்றுவதற்குப் போர்த்துக்கேயர் பின்பற்றிய சில முறைகள் வருமாறு :

1. கத்தோலிக்கசமயத்தைத்தழுவியோருக்கு சலுகை அளித்தல், அரசாங்க பதவிகளும் கொடுப்பனவுகளும் வழங்குதல்.
2. வரிகளிலிருந்து விடுவிப்பு வழங்குதல்
3. கல்வி அளித்தல் (உயர் கல்வி வாய்ப்பு)
4. மக்களின் மனதைக் கவரும் சிறு விழாக்கள், ஊர்வலங்கள் என்பனவற்றை ஒழுங்கு செய்தல்.
5. சமூகநலப் பணிகளை மேற்கொள்ளல்.

கிராம மக்களுடன் நட்புறவுடன் செயற்பட்டு அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதில் மறைபரப்பாளர்கள் ஈடுபட்டனர். நோய்களால் துன்புற்ற மக்களுக்கு மேல்நாட்டு முறைப்படி சிகிச்சை அளித்ததுடன் மற்றும் அவர்களைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர், 1552 ஆம் ஆண்டு ஸ்பிரிடன் எனப்படும் வைத்திய சாலை ஒன்று நிறுவப்பட்டது, தற்போது சிங்கள மொழியில் ''இஸ்ரிதாலய'' எனும் சொல் இந்தச் சொல்லிலிருந்து மருவி வந்ததாகக் கருதப்படுகிறது,

## மடங்கள் அமைத்தல்


வறியவர்களைப் பராமரித்தல், அநாதைகளுக்குக் கற்பித்தல். இறந்தோரை அடக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக

மடங்கள் அமைக்கப்பட்டன. இவை மிசரி கோசியா என்ற பெயரால் அழைக்கப்பட்டன. கொழும்பு, காலி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இந்த மடங்கள் நிறுவப்பட்டன.

தேவாலயங்களுக்கு அருகில் பாடசாலைகள் இயங்கின. அவை பங்குப் (பரிஷ்) பாடசாலைகள் எனப்பட்டன. சமயம் பரப்பும் நடவடிக்கைகளுக்குக் கல்வி பயன்படுத்தப் பட்டது. அரசின் உதவியுடன் கிராமங்களில் பங்குப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

மறைபரப்பாளர்களின் அர்ப்பணிப்பால் போர்த்துக்கேயர் இலங்கையை விட்டுச் செல்லும் போது அனேகமான பிரதேசங்களில் கத்தோலிக்க மதம் பரவி இருந்தது.

**போர்த்துக்கேயரால் இந்நாட்டின் பண்பாட்டில் இணைந்த புதிய அம்சங்கள்**




ஒன்றரை நூற்றாண்டு காலமாக நிலவிய போர்த்துக்கேய ஆட்சியின் விளைவாக இந்நாட்டின் பண்பாட்டில் சில மாற்றங்கள் ஏற்படலாயின. இதனால் போர்த்துக்கேய பண்பாட்டின் சில அம்சங்கள் சுதேச பண்பாட்டுடன் கலந்தன. அவை எமது பண்பாட்டில் நன்கு வேரூன்றி இருப்பதுடன் அவை இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம். தனிநபர் பெயர்கள், வம்சப்பெயர்கள், உணவு, ஆடை அணிகள், கலைகள், சங்கீதம் ஆகியவற்றில் இப்பண்புகளை காணக் கூடியதாக உள்ளது.



**செயற்பாடு**

1. இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக. கொழும்பு, கொட்டியாரம், கோட்டை, மன்னார், காலி, கண்டி, யாழ்ப்பாண நகரம்

2. போர்த்துக்கேயரின் நிர்வாகம், பொருளாதாரம், சமூக கலாசாரப் பண்புகள் ஆகியவற்றின் தகவல்கள் அடங்கும் வகையில் பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுக.